தமிழ்நாடு
இயல் இசை நாடக மன்றம்

கலைமாமணி 75 விருது வழங்கும் விழா

சிறப்பு மலர்
1998

சிறந்த கலைஞர்களுக்கு,

கலைமாமணி விருது வழங்கும் விழா

வள்ளுவர்கோட்டம், சென்னை

10.07.1998

75

சிறப்பு மலர்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

(தமிழக அரசுச் சார்புடையது)

"பொன்னி" 31, கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600 028.

தொலைபேசி எண் : 4937471

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

(தமிழக அரசுச் சார்புடையது)

"பொன்னி" 31, கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600 028. தொலைபேசி எண் : 4937471

செயற்குழு உறுப்பினர்கள்

தலைவர்	-	திரு.இராம. நாராயணன்
துணைத் தலைவர்	-	திரு.த. இரா. சீனிவாசன்,இ.ஆ.ப.
மன்றப் பொருளாளர்	-	திரு.சு. இராமகிருட்டிணன்,இ.ஆ.ப.
உறுப்பினர்-செயலாளர்	-	திரு.சி. சந்திரசேகர்
துணைச் செயலாளர்	-	திரு.கி. சொர்ணம்
நிதித்துறை துணைச் செயலாளர்	-	திரு.ஆர். பரசுராமன்

மன்ற உறுப்பினர்கள்

கவிஞர்.திரு. இளவேனில்
பேராசிரியை திருமதி அரசு மணிமேகலை
தஞ்சாவூர் திரு.டி.ஆர். சீனிவாசன்
அரித்துவாரமங்கலம் திரு.ஏ.கே. பழனிவேலு
புஷ்பவனம் திரு. குப்புசாமி
தி. கயல் தினகரன்
பேராசிரியை திருமதி சாரதா நம்பி ஆரூரன்
திரு.டி.எஸ். இலட்சப்பா
பேராசிரியர் தி.ஆர்.வி. கிருஷ்ணன்
பேராசிரியை ராம. கௌசல்யா
திரு.ஏ.வி. ஜெயராம்
திரு.எஸ்.கே. காமேஸ்வரன்
திரு.உடுப்பி லட்சுமிநாராயணன்
திருமதி. சுதாராணி ரகுபதி
திரு. பாலகவி வெங்கடாசலம்
திரு. குடியேற்றம் ஈ. நாகராஜ்
திரு.எஸ். சவுண்டப்பன்
டாக்டர் மேக்னட் திரு.ஏ. இராஜாராம்
திரு.என்.எஸ். வரதராஜன்

மன்ற அலுவலர்கள்

திரு.சூ.ச. முரளீதரன்	-	நிர்வாக அலுவலர்
திரு.ச. இராமசாமி	-	உதவிச் செயலாளர்
திரு.வை. பாலசுப்ரமணியன்	-	உதவியாளர்
திரு.நா. ஜெயகுமார்	-	கணக்காளர்
திரு.சி. பாலகிருஷ்ணன்	-	உதவியாளர்
திரு.க.கி. ஜானகிராமன்	-	இளநிலை உதவியாளர்
திரு.இரா. ஜனார்த்தனன்	-	சுருக்கெழுத்து-தட்டச்சர்
திருமதி கு. பாகீரதி	-	இளநிலை உதவியாளர்-தட்டச்சர்
திருமதி.வெ. புவனேஸ்வரி	-	தொழில்நுட்பர்
திரு.சு. மந்திரமூர்த்தி	-	அலுவலக உதவியாளர்
திரு.ஆ. ஜோசப் ராஜ்	-	அலுவலக உதவியாளர்
திருமதி.க. தையல்நாயகி	-	துப்புரவாளர்
விழா சிறப்பு அலுவலர்	-	திரு.மு.கோ. சக்கரவர்த்தி - நிர்வாக அலுவலர் (ஓய்வு)
மலர் தயாரிப்பு - உதவி	-	திரு. கயல் தினகரன் , கவிஞர் தி. இளவேனில்

மேதகு தமிழக ஆளுநர்

நீதிபதி. எம். பாத்திமா பீவீ அவர்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர்

கலைஞர் அவர்கள்

தமிழருக் கின்னாளில் பாதுகாப் பாகவே
தனியாக நிற்கும் ஒருவன்
மாதங்கள் முழுவதும் உழைக்கின்ற செம்மையால்
வளமாக ஒளிரும் மதியே
வானெனவும் கடலெனவும் வளர்கங்கை நதியெனவும்
வாழியவே கருணை நிதியே!

கவியரசு கண்ணதாசன்



மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்

முனைவர் **திரு.மு. தமிழ்க்குடிமகன்** அவர்கள்



திரு. இராம. நாராயணன்

தலைவர்

திரு. சி. சந்திரசேகர்

உறுப்பினர் - செயலாளர்



திரு.த.இரா. சீனிவாசன்,இ.ஆ.ப.,
துணைத் தலைவர்
(அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை)



திரு. சு. இராமகிருட்டிணன்,இ.ஆ.ப.,
பொருளாளர்
(சிறப்பு ஆணையர், கலை பண்பாட்டு
இயக்ககம்)



திரு.கி. சொர்ணம்
துணைச் செயலாளர்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

சென்னை-28

1998-ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பட்டியல்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்	-	இயற்றமிழ்க் கலைஞர்
திரு.மீ.ப. சோமசுந்தரம்	-	இயற்றமிழ்க் கலைஞர்
கவிஞர் திரு. முடியரசன்	-	இயற்றமிழ்க் கவிஞர்
கவிஞர் திரு.கா. வேழவேந்தன்	-	இயற்றமிழ்க் கவிஞர்
முனைவர் சாரதா நம்பி ஆரூரன்	-	இலக்கியப் பேச்சாளர்
திரு. வலம்புரி ஜான்	-	இலக்கியப் பேச்சாளர்
திரு. குளிக்கரை பி. விசுவலிங்கம்	-	குரலிசைக் கலைஞர்
திரு.வி.எஸ்.கே. சக்கரபாணி	-	வயலின் கலைஞர்
திரு.ஏ. பிரேம்குமார்	-	மிருதங்கக் கலைஞர்
திருமதி. ரேவதி கிருஷ்ணா	-	வீணைக் கலைஞர்
திரு. ஸ்ரீரங்கம் கண்ணன்	-	முகர்சிங் கலைஞர்
திருப்பாம்புரம் சகோதரர்கள்	-	நாதசுரக் கலைஞர்
திரு.டி.கே.எஸ். சுவாமிநாதன்	-	நாதசுரக் கலைஞர்
திரு.டி.கே.எஸ். மீனாட்சிசுந்தரம்	-	நாதசுரக் கலைஞர்
திருவிடைமருதூர் திரு.பி.எஸ்.வி. ராஜா	-	நாதசுர ஆசிரியர்
திருக்கண்ணபுரம் திரு.எஸ். ஜெயசந்திரன்	-	தவில் கலைஞர்
இடும்பாவனம் திரு.கே.எஸ். கண்ணன்	-	தவில் கலைஞர்
திரு.டி.கே.எஸ். கலைவாணன்	-	தமிழிசைக் கலைஞர்
திரு.டி.எல். மகராசன்	-	தமிழிசைக் கலைஞர்
திருமதி. சரஸ்வதி சீனிவாசன்	-	இறையருட் பாடற் கலைஞர்
திரு. அருளரசு மாசிலாமணி	-	சமய சொற்பொழிவுக் கலைஞர்
திரு.எஸ்.ஆர். ஜானகிராமன்	-	இசை ஆராய்ச்சிக் கலைஞர்
திரு.எம்.வி.எம். செல்லமுத்துப் பிள்ளை	-	மாண்டலின் கலைஞர்
திருமதி. (சாயி) கே. சுப்புலட்சுமி	-	பரதநாட்டிய ஆசிரியை
திருமதி. அனிதா ரத்தினம்	-	பரதநாட்டிய ஆய்வுக் கலைஞர்
திருமதி. பிரியதர்சினி கோவிந்த்	-	பரதநாட்டியக் கலைஞர்
செல்வி. பிரியா சுந்தரேசன்	-	பரதநாட்டியக் கலைஞர்
திருமதி. பத்மா ராஜகோபாலன்	-	பரதநாட்டிய இசைக் கலைஞர்
திருமதி. ஸ்ரீகலா பரத்	-	நாட்டிய-நாடகக் கலைஞர்
திருமதி. உமா முரளிகிருஷ்ணா	-	குச்சுப்புடி நடனக் கலைஞர்
திரு.எம்.எஸ். ராஜாராம்	-	நாடக ஆசிரியர்
திரு. காஞ்சி ரங்கமணி	-	நாடகத் தயாரிப்பாளர்
திரு.போலீஸ் வெ. கண்ணன்	-	நாடக இயக்குநர்
திரு.கு. சண்முகசுந்தரம்	-	நாடக நடிகர்
திரு.டி.என். கிருஷ்ணன்	-	நாடக நடிகர்
திருமதி. கௌசல்யா செந்தாமரை	-	நாடக நடிகை
திரு.எஸ்.ஆர். கோபால்	-	நாடக நகைச்சுவை நடிகர்
திரு.வே.பா. பலராமன்	-	தொழில் முறையல்லாத நாடக ஆசிரியர்
திரு.கே.ஏ. வகாப கான	-	நாடக ஆர்மோனியக் கலைஞர்
திரு. விகடம் கிருஷ்ணமூர்த்தி	-	விகடக் கலைஞர்
திரு.இராம. வீரப்பன்	-	திரைப்படத் தயாரிப்பாளர்
திரு.ஏ.வி.எம். சரவணன்	-	திரைப்படத் தயாரிப்பாளர்

திரு. கேயார்ஜி	-	திரைப்படத் தயாரிப்பாளர்
திரு. அகத்தியன்	-	திரைப்பட இயக்குநர்
திரு.ஆர். பட்டாபிராமன் (பட்டு)	-	திரைப்பட இயக்குநர்
திரு. நெப்போலியன்	-	திரைப்பட நடிகர்
திரு. விஜய்	-	திரைப்பட நடிகர்
திரு. பிரசாந்த்	-	திரைப்பட நடிகர்
செல்வி மீனா	-	திரைப்பட நடிகை
செல்வி ரோஜா	-	திரைப்பட நடிகை
திரு. குமரி முத்து	-	திரைப்பட நகைச்சுவை நடிகர்
திரு. தியாகு	-	திரைப்பட நகைச்சுவை நடிகர்
திரு. மணிவண்ணன்	-	திரைப்பட குணசித்திர நடிகர்
திரு. நாசர்	-	திரைப்பட குணசித்திர நடிகர்
திரு. ரகுவரன்	-	திரைப்பட குணசித்திர நடிகர்
திரு.எம்.டி. சுந்தர்	-	திரைப்படக் கதாசிரியர்
திரு.விசு	-	திரைப்பட வசனகர்த்தா
திரு.எம். இரத்னகுமார்	-	திரைப்பட வசனகர்த்தா
திரு. பழநிபாரதி	-	திரைப்படப் பாடலாசிரியர்
திரு. சித்தார்த்தா	-	திரைப்பட இசையமைப்பாளர்
திரு. ஜெயச்சந்திரன்	-	திரைப்படப் பின்னணிப் பாடகர்
திருமதி. ஜமுனா ராணி	-	திரைப்படப் பின்னணிப் பாடகி
திரு.பி.சி. ஸ்ரீராம்	-	திரைப்பட ஒளிப்பதிவாளர்
திரு. தோட்டா தரணி	-	திரைப்பட அரங்க அமைப்பாளர்
திரு. யோகா	-	திரைப்பட புகைப்படக் கலைஞர்
திரு.எஸ்.எம். உமர்	-	திரைப்பட வளர்ச்சிப்பணிக் கலைஞர்
திரு. சினிமா எக்ஸ்பிரஸ் வி. இராமமூர்த்தி	-	திரைப்பட பத்திரிகை ஆசிரியர்
டாக்டர் மாக்னட் ஏ. இராஜாராம்	-	திரைப்பட ஆய்வாளர்
திருமதி.பி. காந்திமதி	-	வில்லுப்பாட்டுக் கலைஞர்
திருமதி.எஸ்.ஆர் மாரிக்கண்ணு	-	கரகக் கலைஞர்
திரு.எம். குமாரராமன்	-	தேவராட்டக் கலைஞர்
திரு.எம். பிச்சையப்பா	-	காவடிக் கலைஞர்
திரு.ஏ.எஸ். பாலசுப்ரமணியம்	-	பொம்மலாட்டக் கலைஞர்
திரு.டி.பி. செல்லப்பா	-	இசை-நாடக நடிகர்
திருமதி.கே.எஸ். கலா	-	இசை-நாடக நடிகை
திரு.ஆர். யக்னராமன்	-	பண்பாட்டுக் கலை பரப்புநர்
சிறந்த நாடகக் குழு	-	கோபி தியேட்டர்ஸ்
சிறந்த கலை நிறுவனம்	-	கார்த்திக் பைன் ஆர்ட்ஸ்

பொற்கிழி பெறும் கலைஞர்கள்

கலைமாமணி திருமதி.பி.எல். ரஞ்சனி	-	இசை நாடக நடிகை
கலைமாமணி திரு.பி.எஸ். நாகராஜ பாகவதர்	-	இசை நாடக நடிகர்
கலைமாமணி திருக்குவளை திரு.டி.எம். நவநீத தியாகராஜன்	-	நாதசுரக் கலைஞர்
கலைமாமணி திரு.எம்.எஸ். வெங்கடாசலம்	-	இசை நாடக ஆர்மோனியக் கலைஞர்
கலைமாமணி திருக்கடையூர் திரு.டி.கே. தட்சிணாமூர்த்தி	-	கஞ்சிரா கலைஞர்

இவ்வாண்டு திறந்து வைக்கப்படும் மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்கள்

கி.ஆ.பெ. விசுவநாதம்	-	இயற்றமிழ்க் கலைஞர்
டாக்டர் ம.பொ. சிவஞானம்	-	இயற்றமிழ்க் கலைஞர்
சுத்தானந்த பாரதியார்	-	இயற்றமிழ்க் கலைஞர்
திண்டுக்கல் ஸ்ரீரங்கம் செட்டியார்	-	கரகக் கலைஞர்
ராமநாதபுரம் சி.எஸ். சங்கரசிவம்	-	இசைக் கலைஞர்
மதுரை ஸ்ரீரங்கம் அய்யங்கார்	-	இசைக் கலைஞர்
கே.எஸ். நாராயண அய்யங்கார்	-	கோட்டுவாத்தியக் கலைஞர்
திருவையாறு அண்ணாசாமி பாகவதர்	-	ஹரிகதா கலைஞர்
சிதம்பரம் எஸ். ஜெயராமன்	-	இசைக் கலைஞர்
காஞ்சிபுரம் எல்லப்பா முதலியார்	-	பரதநாட்டியக் கலைஞர்
சிதம்பரம் இராதாகிருஷ்ண பிள்ளை	-	நாதசுரக் கலைஞர்
சக்தி கிருஷ்ணசாமி	-	திரைப்பட வசனகர்த்தா
எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு	-	திரைப்படத் தயாரிப்பாளர்
வி.சி. கோபால் ரத்தினம்	-	நாடகக் கலைஞர்

கலைமாமணி விருது பெறும்
இயற்றமிழ்க் கலைஞர்

திரு. 'சிலம்பொலி' சு. செல்லப்பன்

தமிழ் இயக்கமும் பகுத்தறிவுச் சுடரும் ஒரு தமிழறிஞரை வார்த்தெடுத்தது. அவர்தான் சிலம்பொலி சு. செல்லப்பனார்.

சேலம் மாவட்டம், சிவிலியாம் பாளையத்தில், 1929-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 22-ல் பிறந்த செல்லப்பன், பள்ளி ஆசிரியராகத் தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார். கணிதவியல், சட்டவியல், தமிழிலக்கியம் - இம்மூன்றிலும் சிறந்து விளங்கிய செல்லப்பனார், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளராக, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநராக, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராக, பல பொறுப்புகளை வகித்தார்.

300க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர், 'இலக்கியச் சிந்தனைகள்', 'பெருங்கதை ஆராய்ச்சி', 'காப்பியக் கம்பரும் புரட்சிக் கவிஞரும்' என்பன போன்ற பல நூல்களை வழங்கியுள்ளார்.

சிலப்பதிகாரத்தின் கருத்திலும் நயத்திலும் தோய்ந்து இவர் எழுதிய நூலின் பெயரையே இவருக்கு மகுடமாக்கிச் சூட்டினார், சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை. அன்று முதல் 'சிலம்பொலி'யார் என்றே தமிழன்பர்களால் அழைக்கப்படுகிறார்.

'தமிழால் ஒன்றுபடுவோம்' என்கிற முழக்கத்துடன் - தமிழ்ச் சான்றோர் பேரவையின் ஒருங்கிணைப்பாளராக நின்று, தமிழ் எழுச்சிப் பணியாற்றிக் கொண்டிருக்கும் சிலம்பொலி சு. செல்லப்பனார் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இயற்றமிழ்க் கலைஞருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
இயற்றமிழ்க் கலைஞர்
திரு.மீ.ப. சோமசுந்தரம்

நெல்லை மாவட்டம், மீனாட்சிபுரம், பரமசிவம் பிள்ளை, தமிழ் இலக்கியத்துக்கு ஒரு பிள்ளையை வழங்கினார். அவர்தான் மீ.ப. சோமசுந்தரம்.

தாய்மொழியாம் தமிழுடன், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றுள்ள இவர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'வித்வான்' பட்டமும், இங்கிலாந்தில் ஒலிபரப்புக் கலையிலும் கவின் கலையிலும் சிறப்புப் பயிற்சியும் பெற்றவர்.

சிறுகதை, கவிதை, புதினம், கட்டுரை என்று பல தளங்களில் பல நூல்களை எழுதியுள்ள இவர், இராஜாஜி அவர்களுடன் இணைந்து 'திருமூலர் தவமொழி', 'முதல் மூவர்' என்னும் நூல்களை எழுதிப் புகழ்பெற்றவர்.

இலக்கியப் பணிகளுக்காகப் பல பரிசுகளும் பட்டங்களும் பெற்றுள்ளார். 'சாகித்ய அகாதமி விருது' பெற்றுள்ள இவர், இசைத்துறையிலும் புலமை மிகுந்தவர். இவருடைய இசைத் தமிழ் ஆற்றலைப் பாராட்டி, தமிழ் இசைச் சங்கம் 'இசைப்பேரறிஞர்' பட்டத்தை வழங்கியுள்ளது.

'கல்கி' இதழின் ஆசிரியராகவும் பணியாற்றிய இவர், அகில இந்திய வானொலியில் முக்கிய பொறுப்புகள் ஏற்றுத் திறம்படச் செயலாற்றியிருக்கிறார்.

பல துறைகளில் முத்திரை பதித்துள்ள மீ.ப. சோமசுந்தரம் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்
இயற்றமிழ்க் கவிஞர்

திரு. கவிஞர் முடியரசன்

7.10.1920-ல் மதுரை மாவட்டம், பெரியகுளம் நகரில் சுப்பராயலு - சீதாலட்சுமி என்பார்க்கு மகனாகப் பிறந்த துரைராசு, தன்னைச் சுற்றிலுமுள்ள வளங்களையும் வாழ்வையும் உற்றுக் கவனித்து முரண்பாடு தீர்க்க முனைந்தபோது கவிதை அவர்க்கொரு கைவாளாய்க் கிடைத்தது. விளைவு? துரைராசு என்கிற இளைஞர் கவிஞர் முடியரசன் ஆனார்.

1940-ல் தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்துடன் தொடர்புகொண்டார். இளமைக் காலத்தில் 'முருகனைப் பாடுவதே முத்தமிழ் கற்றதன் பயன்' என்றிருந்த இவர், 'காலத்தின் தேவை'யைப் பாடும் கவிஞராய் மாறினார்.

குடியரசு, திராவிட நாடு, நம்நாடு, முரசொலி, தென்றல், மன்றம், பொன்னி மற்றும் பல சிறந்த இதழ்களில் இவரது எழுத்தோவியங்கள் இடம் பெற்றன.

'முடியரசன் எனது மூத்த வழித்தோன்றல்' என்று புரட்சிக் கவிஞரால் அடையாளம் காட்டப்பட்டார். 'திராவிட நாட்டின் வானம்பாடி' என்று அறிஞர் அண்ணா பாராட்டினார் .

1966-ல் 'முடியரசன் கவிதைகள்' என்ற நூலும், 1973-ல் 'வீரகாவியம்' என்ற நூலும் தமிழக அரசின் பரிசினைப் பெற்றிருக்கின்றன. இவரது பல கவிதைகள் 'சாகித்திய அகாதமி'யால் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ரஷ்ய மொழியிலும் அவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. பல அமைப்புகளின் பல விருதுகளைப் பெற்றுள்ள இவருக்கு 'கவிப்பேரரசர்' என்கிற பட்டத்தையும், பாவேந்தர் விருதையும் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கவிஞர் முடியரசன் அவர்களுக்கு இயற்றமிழ்க் கவிஞருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
இயற்றமிழ்க் கவிஞர்

கவிஞர் திரு.கா. வேழவேந்தன்

செங்கை மாவட்டம், ஆரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள சாரணியில் கா. சின்னசாமி - இராசம்மாள் அன்பில் மலர்ந்தவர் கவிஞர் வேழவேந்தன்.

மாணவப் பருவத்திலேயே தமிழ்த் தேன் பருகிய வேழவேந்தன், அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு', முத்தமிழறிஞரின் 'முரசொலி', 'முத்தாரம்', புரட்சிக் கவிஞரின் 'குயில்', உவமைக் கவிஞர் சுரதாவின் 'காவியம்' போன்ற ஏடுகளில் எழுதத் தொடங்கினார்.

வகுப்பறை நாட்களிலேயே 'வேழவேந்தன் கவிதைகள்' எனும் கவிதை நூலை அரங்கேற்றினார். அறிஞர் அண்ணா அவர்கள் அதை வெளியிட்டுச் சிறப்பித்தார். தாகூர் நூற்றாண்டு விழா கவிதைப் போட்டியில் மாநிலத்திலேயே முதற் பரிசு பெற்றார்.

'தமிழ்த்தேன்' எனும் தனித்தமிழ் ஏட்டினை நடத்திய இவர், 'வண்ணத் தோகை' என்னும் கவிதை நூலுக்காகத் தமிழக அரசின் பரிசினையும், தொடர்ந்து 'பாவேந்தர்' விருதினையும் பெற்றார்.

தொழிற் சங்கத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், கலைஞரின் அமைச்சரவையில் தொழிலாளர் நல அமைச்சராகவும் ஆற்றலுடன் செயல்பட்ட வேழவேந்தன் தமது 'இலக்கியக் குடிலை'யே எப்போதும் விரும்புகிறார்.

கவிதை உள்ளம்; அதில் கொள்கைப் பிடிப்பு - இந்த அம்சங்களால் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் பாசமழையில் நனைந்தவர். அந்தப் பற்றுறு தீயில் பாட்டிசைப்பதை இலட்சியமாய்க் கொண்டவர்.

தொடர்ந்து இவரது இலக்கியப் பணிக்காக, கவிஞர் வேழவேந்தன் அவர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இயற்றமிழ்க் கவிஞருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
இலக்கியப் பேச்சாளர்

திருமதி. சாரதா நம்பி ஆரூரன்

தமிழையும் சமயத்தையும் இசையுடன் கலந்து திசையெலாம் பரப்பி வருகிறவர் திருமதி சாரதா நம்பி ஆரூரன்.

24.7.1946-ல் நெல்லை மாவட்டம், சங்கர நயினார் கோவிலில் பிறந்த இவர், தற்பொழுது இராணிமேரி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பல தொடர் நிகழ்ச்சிகளை வழங்கி, அறிவார்ந்த நேயர்களைத் தன்வயப்படுத்திய இவர், இலண்டன், பாரீஸ், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, ஜெர்மனி, இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் தமிழ் மணம் பரப்பிப் பெருமையுற்றார்.

இலங்கையில் நடைபெற்ற அகில உலக இந்து சமய மாநாட்டில் உரையாற்றிய இவர், காசி, இராமேஸ்வரம், புதுவை போன்ற நகரங்களில் சைவ சித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழாக்களுக்குத் தலைமை ஏற்று நிகழ்த்திய பேருரைகள் புகழ்பெற்றவை.

இலண்டன் பி.பி.சி. தமிழோசையிலும், 'இலண்டன் முரசு' திங்கள் இதழிலும் முக்கிய பொறுப்பு வகித்த இவர், பரம்புமலைப் பாரி விழாவில் குன்றக்குடி அடிகளாரால் 'செந்தமிழ் விரலி' என்கிற பட்டம் பெற்றார்.

தமிழ் வளர்ச்சி - பண்பாடு தொடர்பான பல அமைப்புகளில் உறுப்பினராகப் பணியாற்றி, தமிழ்ப் பணியாற்றும் திருமதி சாரதா நம்பி ஆரூரன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இலக்கியப் பேச்சாளருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும் இலக்கியப் பேச்சாளர்

திரு. வலம்புரிஜான்

'சமயங்களுக்கிடையே ஒற்றுமை' என்கிற நோக்கில் எழுதியும், பொழிந்தும் இயங்கும் சமூகவியலாளர் - வலம்புரிஜான்.

நெல்லை மாவட்டம், உவரியில், திருமதி வியாகுலா, திருவாளர் தேவசகாயம் தம்பதியரின் மகனாக 14.10.1946-ல் பிறந்த இவர், எம்.ஏ. பொது நிர்வாகம், எம்.ஏ. வரலாறு பயின்று .காந்தியச் சிந்தனை.களிலும், இதழியலிலும் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார்.

நாடாளு மன்ற உறுப்பினராகவும், தமிழக சட்ட மேலவை உறுப்பினராகவும், மண்டல் குழுவின் தமிழக சிறப்பு அழைப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

தமிழகத்தின் கவனத்தை ஈர்க்கும் பேச்சாளர்களில் குறிப்பிடத் தகுந்த சிறப்பிடம் வகிக்கும் இவர் 'தாய்', 'மருதாணி', 'மெட்டி' போன்ற பல ஏடுகளுக்கு ஆசிரியராகப் பணியாற்றினார். பல ஏடுகளின் தொடர் எழுத்தாளராகவும் விளங்குகிறார்.

இதுவரை 43 தமிழ் நூல்களும், 4 ஆங்கில நூல்களும் எழுதியிருக்கிறார். பல மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் சென்று தமிழின் வளமும் நலமும் காட்டியிருக்கிறார்.

எழுத்தாளருக்கான ராஜா மான்சிங் விருது பெற்ற இவரது கவிதைகளும் தனித்தன்மை பெற்றவை.

போப்பாண்டவர் ஜான்பால், அன்னை தெரசா, ஜெயப்பிரகாஷ் நாராயன், கிருபளானி ஆகியோரின் மொழிபெயர்ப்பாளராகப் பாராட்டுப் பெற்றவர்.

ஏடுகள், மேடைகள், தொலைக்காட்சிகள் என்று பலமுனைகளில் சுடர்ந்தொளிரும் வலம்புரிஜான் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இலக்கியப் பேச்சாளருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
குரலிசைக் கலைஞர்

குளிக்கரை திரு.எஸ்.பி. விசுவலிங்கம்

தஞ்சை மாவட்டம், குளிக்கரை என்னும் சிற்றூரில் 'நாதஸ்வர சக்ரவர்த்தி' என்று புகழ்பெற்ற எஸ். பிச்சையப்பா பிள்ளை அவர்களின் மகனாகப் பிறந்த விசுவலிங்கம் ஆரம்பத்தில் தமது தந்தையாரிடமே இசை பயின்றார். பின்னர் திருவாரூர் நாராயணசாமி பிள்ளை, 'இசைமணி' திருவாரூர் நமசிவாயம், 'சங்கீத கலாநிதி' தஞ்சை எம். தியாகராஜன் ஆகியோரிடம் முறையே இசை பயின்றார்.

1968 முதல் 1996-வரை அனைத்திந்திய வானொலி நிறுவனத்தில் இசைக் கலைஞராகப் பணியாற்றினார்.

தமது இசைப் புலமைக்காக, 'நாத ஒலி ரத்னம்', 'நாதக் கனல்' 'தொல் இசை வேந்தர்' போன்ற பல பட்டங்களைப்பெற்ற இவர் காஞ்சி காமகோடிபீட ஆஸ்தான வித்வானாகவும் விளங்குகிறார்.

தற்போது ராஜா அண்ணாமலை மன்றத்தில் தமிழிசைச் சங்கத்தின் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

குளிக்கரை எஸ்.பி. விஸ்வலிங்கம் அவர்களின் இசைப் பணியை பாராட்டி, அவருக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் குரலிசைக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

வயலின் கலைஞர்

திரு.வி.எஸ்.கே. சக்கரபாணி

கும்பகோணம் வயலின் மேதை ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களின் பாரம்பரியத்தில் வந்தவர் திரு. சக்கரபாணி அவர்கள்.

தமது பாட்டனார் விஷ்ணுபுரம் என். சுந்தரேசம் பிள்ளையிடம் ஆரம்பப் பயிற்சி பெற்றார். பிறகு கலைமாமணி சிக்கல் ஆர். பாஸ்கரன் அவர்களிடமும், கலைமாமணி புல்லாங்குழல் திருமதி டி.ஆர். நவநீதம் அவர்களிடமும் இசை பயின்றார்.

இவரது தந்தை வி.எஸ். குஞ்சிதபாதம் சிறந்த நாதஸ்வரக் கலைஞர் ஆவார்.

தமிழகத்தின் பல முன்னணிப் பாடகர்களுக்கு வயலின் வாசித்திருக்கிறார். தனி வயலின் கச்சேரி செய்தும் பல விருதுகள் பெற்றிருக்கிறார்.

தற்போது புதுடில்லி அகில இந்திய வானொலி நிலையக் கலைஞராகப் பணிபுரிந்து வரும் வி.கே.எஸ். சக்ரபாணி அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வயலின் கலைஞருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

மிருதங்கக் கலைஞர்

கும்பகோணம் திரு.ஏ. பிரேம்குமார்

மிருதங்கக் கலைஞர் ஏ.பிரேம் குமார், 1947-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் மகனாகப் பிறந்தவர்.

தனது சித்தப்பா மிருதங்க வித்வான் கும்பகோணம் கே.பி. சிங்காரம் பிள்ளை அவர்களிடம் எட்டு வயதில் மிருதங்கம் கற்கத் தொடங்கினார்.

1963-ஆம் ஆண்டு கும்பகோணத்தில் மிருதங்க அரங்கேற்றம் நடைபெற்றது. பின்னர் சென்னைக்கு வந்து மிருதங்க வித்வான் பத்மஸ்ரீ சி.எஸ். முருக பூபதி அவர்களிடம் குருகல முறையில் மிருதங்க இசையின் நுட்பங்களையெல்லாம் கற்றுத் தேர்ந்தார். சென்னை 'மியூசிக் அகாதமி'யில் நடைபெற்ற மிருதங்கப் போட்டியில் முதற் பரிசு பெற்றார்.

முன்னணிப் பாடகர்கள் பலருக்கும் மிருதங்கம் வாசித்துப் புகழ்பெற்றார். அகில இந்திய வானொலி நிலையத்தின் அந்தமான் பிரிவில் பணிபுரிந்த இவர் தற்போது தில்லி நிலையத்தில் பணிபுரிந்து கொண்டே, தில்லி தமிழ்ச் சங்கத்தில் பல மாணவர்களுக்கு மிருதங்கப் பயிற்சியும் அளித்து வருகிறார்.

கொரியா, சோவியத் லெனின்கிராட், துபாய், நேபாளம் போன்ற நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெற்ற பல இசை நிகழ்ச்சிகளில், புகழ்பெற்ற இந்தியக் கலைஞர்களுடன் கலந்துகொண்டு மிருதங்க இசை வழங்கிய கும்பகோணம் ஏ. பிரேம்குமார் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மிருதங்கக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
வீணைக் கலைஞர்

திருமதி. ரேவதி கிருஷ்ணா

வீணைக் கலைஞர் திருமதி. ரேவதி கிருஷ்ணா பாரம்பரியமிக்க இசைக் குடும்பத்தின் வாரிசாவார்.

இசைக் கலைஞர்கள் தில்லைஸ்தானம் திரு. இராம அய்யங்கார், திரு. ஸ்ரீனிவாச ராகவன் ஆகியோரின் பெயர்த்தியான இவர், புகழ்பெற்ற வீணை மேதைகளான தஞ்சை திரு.கே.பி. சிவானந்தம் பிள்ளை, திருமதி சாரதா சிவானந்தம், திருமதி கற்பகம் சுவாமிநாதன், இசைப் பேரறிஞர் லால்குடி ஜெயராமன் ஆகியோரிடம் பயிற்சி பெற்றவர்.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் சங்கீத வித்வான் பட்டம் பெற்ற இவர், இந்திய வானொலி, தொலைக்காட்சிகளில் பல நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். சென்னையிலுள்ள அனைத்து சபாக்களிலும் இவரது நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

கோட்டுவாத்திய வித்வான் நாராயண அய்யங்கார் அறக்கட்டறை விருது, ஓபுல்ரெட்டி அறக்கட்டளை விருது, வீணை தனம்மாள் நினைவு விருது என்று பல விருதுகளும், பல சபாக்களின் பாராட்டுக்களும் பெற்றிருக்கும் திருமதி ரேவதி கிருஷ்ணா அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வீணைக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
முகர்சிங் கலைஞர்

ஸ்ரீரங்கம் திரு. கண்ணன்

மேதினி போற்றும் மேதினத்தன்று, 1952-ஆம் ஆண்டில் திரு. சத்தியமூர்த்தி - திருமதி கமலம் அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்தவர் முகர்சிங் கலைஞர் ஸ்ரீரங்கம் கண்ணன் அவர்கள்.

மிருதங்க வித்வான் கானாடுகாத்தான் இராஜாராம் அவர்களிடமும், புதுக்கோட்டை கலைமாமணி மகாதேவன் அவர்களிடமும் குருகுல முறைப்படி முகர்சிங் கற்றுக்கொண்ட இவர், முதன் முதலாக பத்மஸ்ரீ - கலைமாமணி - திருவாரூர் ரமணி அவர்களின் கச்சேரியில் வாசித்து பாராட்டுப் பெற்றார்.

தொடர்ந்து, மதுரை சோமசுந்தரம், சீர்காழி கோவிந்தராஜன், மகாராஜபுரம் சந்தானம், டி.எம்.சௌந்தரராஜன், கே.ஜே. யேசுதாஸ், மாண்டலின் சீனிவாசன், ரவிகிரண், டி.என். சேஷகோபாலன், டி.வி. சங்கர நாராயணன், திருப்பாம்பரம் சண்முக சுந்தரம், டி.என்.கிருஷ்ணன், லால்குடி ஜெயராமன், ஏ.கே.சி. நடராஜன், வலங்கைமான் சண்முக சுந்தரம் என்று புகழ்பெற்ற கலைஞர்கள் அனைவருடனும் இணைந்து முகர்சிங் வாசித்திருக்கிறார்.

தற்போதும் டி.கே. மூர்த்தி, உமையாள்புரம் சிவராமன்... என்று இவரது இசை பயணம் தொடர்கிறது.

பல நாடுகளில், பல மேடைகளில், பல இசைமேதைகளின் அணியில் வாசித்துப் புகழும் பரிசுகளும் பெற்றுள்ள திரு ஸ்ரீரங்கம் கண்ணன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் முகர்சிங் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
நாதசுரக் கலைஞர்கள்

திருப்பாம்புரம் சகோதரர்கள்
திரு.டி.கே.எஸ். சுவாமிநாதன்,
திரு.டி.கே.எஸ். மீனாட்சிசுந்தரம்

திருப்பாம்புரம் சகோதரர்கள் என்று அழைக்கப்படும் டி.கே.எஸ். சுவாமிநாதன், டி.கே.எஸ். மீனாட்சி சுந்தரம் ஆகிய இருவரும் தங்களது பெரியப்பா திருப்பாபுரம் சிவசுப்பிரமணியப் பிள்ளை அவர்களிடமும் தந்தையார் திருப்பாம்புரம் சண்முக சுந்தரம் பிள்ளை அவர்களிடமும் பயிற்சி பெற்றார்கள்.

பின்னர், சுவாமிநாதன் பழனி அரச இசைக் கல்லூரியிலும், மீனாட்சி சுந்தரம் திருமயச்சூர் ஸ்ரீ லலிதாம்பிகை சன்னிதியிலும் முதிர்ச்சி பெற்றனர்.

சகோதரர்கள் முதற் கச்சேரி சுவாமிநாதனின் 13-வது வயதிலும், மீனாட்சி சுந்தரத்தின் 7-வது வயதிலும் நடந்தேறியது.

'அருள் இசைப் பாலகர்கள்', 'இன்பகான திலகம்', 'இளைய ராஜாக்கள்', 'நாதஸ்வர இசைச் சக்கரவர்த்திகள்', 'நாயன இசைவேந்தர்கள்', 'பெரு வங்கியக் கலை அரசர்கள்' என்பன போன்ற பட்டங்களும் விருதுகளும் பெற்றிருக்கிறார்கள்.

திருப்பாம்புரம் சகோதரர்களின் நாதசுரம் முழங்காத கோயில்களே இல்லை என்று சொல்கிற விதத்தில் இவர்களது நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

காஞ்சி முனிவர், குன்றக்குடி அடிகளார், தருமபுரம் ஆதீனகர்த்தர், திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர், மற்றும் மதுரை மடாதிபதிகளின் விருப்பின் பேரில் இசைத்து, விருது பெற்றுச் சிறப்பிக்கப் பட்டிருக்கிறார்கள்.

நாதசுர உலகில் புதிய முறையை அறிமுகப்படுத்தி தமிழிசை வளர்க்கும் திருப்பாம்புரம் சகோதரர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாதசுரக் கலைஞர்களுக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
நாதசுர ஆசிரியர்

திருவிடைமருதூர் திரு.பி.எஸ்.வி. ராஜா

திருவிடைமருதூர் பி.எஸ். வேணுகோபால் பிள்ளை - ஜனகம்மாள் தம்பதியரின் செல்வனாகப் பிறந்த பி.எஸ்.வி. ராஜா தனது, பெரிய தந்தையார் பி.எஸ். வீருசாமி பிள்ளை, கீரனூர் கே.எம். ராமசாமி பிள்ளை, அம்பலப்புழை சங்கர நாராயண பணிக்கர் ஆகியோரிடம் நாதசுரம் பயின்றார்.

17-வது வயதில் பெரிய தந்தையார் வீருசாமி பிள்ளை அவர்களுடன் இணைந்து இந்தியக் கோயில்கள் அனைத்திலும், சபாக்களிலும் நாதசுரம் வாசித்தார். பெரிய தந்தையாரின் மறைவுக்குப் பின் தனிக் குழுவாக இந்தியா மற்றும் வெளிநாடுகளின் இசை விழாக்களில் முத்திரை பதித்தார்.

பல ஆதினங்களாலும், சன்னிதானங்களாலும் இவரது இசைப் புலமை விரும்பிக் கேட்கப்பட்டிருக்கிறது. 'கமகஸ்வரலயபானு', 'பெருங்கியக் கலையரசு', 'நாதஸ்வர வித்வமணி' போன்ற பல பட்டங்கள் பெற்றிருக்கிறார்.

1986-ஆம் ஆண்டு முதல் திருவையாறு இசைக்கல்லூரியில் நாதசுர விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக இசைத் துறையில் இசை குறித்து செயல் - விளக்கவுரை நிகழ்த்தியிருக்கிறார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக இசைப் பாடத் திட்டக்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

தமிழில் புதிய கீர்த்தனைகளும், பல்லவிகளும், மல்லாரிகளும் யாத்துவரும் திருவிடைமருதூர் பி.எஸ்.வி. ராஜா அவர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாதசுர ஆசிரியருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

தவில் கலைஞர்

திருக்கண்ணபுரம் திரு.எஸ். ஜெயச்சந்திரன்

தவில் கலைஞர் திருக்கண்ணபுரம் திரு. ஜெயச்சந்திரன், திரு. சீனிவாசப் பிள்ளை - ஜெயலட்சுமி தம்பதியரின் செல்வனாக 10.3.1951-ல் பிறந்தார்.

தந்தை சீனிவாசப் பிள்ளையிடம் பத்தாவது வயதில் தவில் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அதன் பிறகு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் கொரநாடு தவில் வித்வான் பி. பழனிவேல் பிள்ளையிடம் முறையாக மூன்று ஆண்டுகள் பயின்று 'வாத்திய விசாரதா' பட்டம் பெற்றார்.

திருமயிலை கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நாதசுர வித்வான் எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களின் குழுவிலும், தமிழகத்தின் புகழ்பெற்ற தவில் மேதைகள் அனைவருடனும் இணைந்தும் தவில் வாசித்திருக்கிறார்.

இசையமைப்பாளர் டி.ஆர். பாப்பா அவர்களின் இசையில் பல நூறு தெய்வீகப் பாடல்களுக்கு தவில் வாசித்திருக்கிறார்.

திரைப்பட இசையமைப்பாளர்கள் எம்.எஸ். விசுவநாதன் - ராமமூர்த்தி, இளையராஜா, சங்கர் - கணேஷ், அம்சலேகா, கார்த்திக் ராஜா ஆகியோரின் இசையில் பல திரைப் படங்களில் தவில் வாசித்திருக்கிறார்.

தந்தை பெரியார் தமிழிசை மன்றத்தின் 'தமிழிசைப் பாணர்' விருது பெற்றிருக்கும் திருக்கண்ணபுரம் திரு. எஸ். ஜெயச்சந்திரன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தவில் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
தவில் கலைஞர்

இடும்பாவனம் திரு.கே.எஸ். கண்ணன்

நான்கு தலைமுறையாக தவில் வாசிக்கும் இசைக் குடும்பத்தில் திரு. சௌந்தரராஜ பிள்ளை, கோவிந்தம்மாள் தம்பதியரின் செல்வனாக 13.7.1965-ல் பிறந்தவர் கே.எஸ். கண்ணன்.

சிக்கல் அருள்மிகு சிங்காரவேலர் தேவஸ்தான இசைக் கல்லூரியில், திரு. குஞ்சு சிங்காரவேல் பிள்ளை அவர்களிடம் பயிற்சி பெற்றார். மீண்டும் தமது தந்தையாரிடம் நுட்பம் பயின்று இசைப் பயணம் தொடங்கினார்.

இந்தியாவின் பல மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் சிறப்புத் தவில் வாசித்துள்ள இவர், பிரபல நாதசுர வித்வான்களான நாமகிரப்பேட்டை கிருஷ்ணன், ஷேக் சின்ன மௌலானா, ஏ.கே.சி. நடராஜன், திருப்பாம்புரம் சகோதரர்கள், திருவிழா ஜெய்சங்கர், ஆண்டான்கோயில் செல்வரத்தினம் பிள்ளை ஆகியோரின் கச்சேரிகளில் தவில் வாசித்து சிறப்பிக்கப் பெற்றிருக்கிறார்.

'தவில் இசை மாமுரசு' போன்ற பல பட்டங்களைப் பெற்றுள்ள இடும்பாவனம் கே.எஸ். கண்ணன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தவில் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
தமிழிசைக் கலைஞர்

திரு.டி.கே.எஸ். கலைவாணன்

தமிழ் நாடக மேதை அவ்வை டி.கே. சண்முகம் - சீதாலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வர் டி.கே.எஸ். கலைவாணன்.

இசைப் பேராசிரியர் வேலூர் டி.ஏ. சம்பந்த மூர்த்தி ஆச்சாரியாரிடம் தனது ஏழாவது வயதில் இசைப் பயிற்சியினைத் தொடங்கியவர், ஒன்பதாவது வயதில் அருணகிரிநாதரின் கந்தர் அனுபூதியின் ஐம்பத்தொரு பாடல்களை ராகமாலிகையாகப் பாடி திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களிடம் வாழ்த்து பெற்றார்.

அன்று தொடங்கி இன்றுவரை சுமார் ஆயிரம் இசையரங்குகளில், பெரும்பாலும் தமிழ்ப் பாடல்களையே பாடி வருகிறார்.

தமிழ் இலக்கியத்தின்மீது கொண்ட பற்றுதலால் திருக்குறள், திருவாசகம், தேவாரம் போன்ற படைப்புக்களிலிருந்தும், பாரதி, பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் போன்றறோரின் பாடல்களையும் இசையமைத்துப் பாடி வருகிறார்.

1982-ஆம் ஆண்டில் பாரதியார் நூற்றாண்டு விழாவில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். இவருக்குப் 'பாரதி விருது' வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இவரது இசை நிகழ்ச்சிகள் பல ஏடுகளாலும், இசை வல்லுனர்களாலும் பாராட்டப் பெற்றிருக்கின்றன.

'இன்னிசை இளவரசு', 'தமிழிசைப் பாணர்' போன்ற பல பட்டங்களைப் பெற்றுள்ள இவருக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழிசைக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
தமிழிசைக் கலைஞர்

திரு.டி.எல். மகராஜன்

புகழ்பெற்ற தமிழிசைப் பாடகர் திருச்சி லோகநாதன் - ராஜலட்சுமி தம்பதியரின் புதல்வரான டி.எல். மகராஜன், சங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கட்ராமன், மயிலாடுதுறை கிருஷ்ணமூர்த்தி பாகவதர் ஆகியோரிடம் முறைப்படி இசைப் பயிற்சி பெற்றவர்.

1966-ஆம் ஆண்டு, திரு.ஏ.பி. நாகராஜன் அவர்கள் தயாரித்து இயக்கிய திருவருட் செல்வர் திரைப்படத்தில், இசையமைப்பாளர் கே.வி. மகாதேவன் அவர்களின் இசையில் திருஞான சம்பந்தரின் பாடலைப் பாடும் வாய்ப்புடன் திரைப்படப் பாடகராக அறிமுகம் ஆனார்.

தொடர்ந்து திரைப்பட இசையமைப்பாளர்கள் கே.வி. மகாதேவன், எம்.எஸ். விசுவநாதன், டி.ஆர். பாப்பா, இளையராஜா, வி. குமார், ஷியாம், எம்.பி. சீனிவாசன், ஏ.ஆர். ரகுமான், எஸ்.ஏ. ராஜ்குமார், சந்திரபோஸ், தேவா, குன்னக்குடி வைத்தியநாதன், சங்கர்-கணேஷ், யுவன் சங்கர்ராஜா என அனைத்து இசையமைப்பாளர்களின் இசையமைப்பில் 500க்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களைப் பாடியிருக்கிறார்.

இவரது தமிழிசை, மெல்லிசை, பக்தி இசை நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டிலும் வெளிநாடுகளிலும் புகழ்பெற்றன.

முத்தமிழறிஞர் கலைஞர், காஞ்சிப் பெரியவர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., திருமுருக கிருபானந்த வாரியார், நடிகர் திலகம் சிவாஜி போன்றோரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ள டி.எல். மகராஜன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தமிழிசைக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
இறையருட் பாடற் கலைஞர்

திருமதி.டி.என். சரஸ்வதி சீனிவாசன்

ஆசிரியராகப் பணிபுரியும் திருமதி சரஸ்வதி சீனிவாசன் இந்திய இசையில் இளங்கலைப் பட்டதாரி ஆவார்.

டி.ஆர். நாராயணசாமி, டி.பி. முத்துலட்சுமி ஆகியோரின் மகளும் 'கலைமாமணி' டி.ஆர். சீனிவாசன் அவர்களின் துணையியாருமான இவர், மன்னை இராஜகோபால் பிள்ளை 'கலைமாமணி' டி.பி. நாகராஜன் ஆகியோரிடம் இசைப் பயிற்சி பெற்றவர்.

வடலூர் தைப்பூச விழாவில் 32 ஆண்டுகளாகத் தொடர்ந்து இராமலிங்க அடிகளாரின் அருட்பாவை இசையாகப் பொழிந்து கொண்டிருக்கிறார்.

வடலூர் வள்ளலார் மாநாட்டில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களால் 'அருட்பா கான சரஸ்வதி' என்னும் பட்டம் வழங்கப் பெற்றார்.

கலைமாமணி தஞ்சை டி.பி. நாகராஜன், கலைமாமணி டி.ஆர். சீனிவாசன், இசையமைப்பாளர் கங்கை அமரன் ஆகியோரது இசைவடிவில் 'திரு அருட்பா', 'திருவடிப் புகழ்ச்சி' என்னும் அருட்பா ஒலி நாடாக்களும் இவரது குரலில் வெளிவந்தள்ளன.

இசைவடிவில் ஆன்மீகப் பணி செய்யும் திருமதி சரஸ்வதி சீனிவாசன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இறையருட் பாடற் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
சமயச் சொற்பொழிவுக் கலைஞர்

திரு. 'அருளரசு' மாசிலாமணி

சமயச் சொற்பொழிவாளராகவும் தமிழ் மொழிப் பற்றாளராகவும் விளங்கும் அருளரசு மாசிலாமணி 1944-ஆம் ஆண்டு, திரு. அய்யாத்துரை - பட்டம்மாள் தம்பதியரின் மகனாக மோகனூரில் பிறந்தவர்.

இந்து சமய அறநிலையத்துறையின் சமயச் சொற்பொழிவாளர் பயிற்சி பெற்றவர்.

1976-ல் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சமயச் சொற்பொழிவுக் கலைஞராக நியமிக்கப்பட்டார்.

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சமய விழாக்களில் சொற்பொழிவு செய்துள்ளார்.

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை மாநாட்டை சிறப்பாக நடத்தியதைத் தொடர்ந்து குன்றக்குடி அடிகளார் அவர்கள் 'சமயமுரசு' என்ற பட்டத்தை வழங்கினார்.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களால் 'எனது வாரிசு' என்று அறிவிக்கப்பட்டதுடன் 'அருளரசு' என்ற பட்டமும் சூட்டப்பட்ட அருளரசு மாசிலாமணி அவர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சமயச் சொற்பொழிவுக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
இசை ஆராய்ச்சிக் கலைஞர்

திரு.எஸ்.ஆர். ஜானகிராமன்

பேராசிரியர் எஸ்.ஆர். ஜானகிராமன் 12.7.1928-ல் திரு. ரெங்கசாமி அய்யங்கார் - கௌரி அம்மாள் ஆகியோரின் புதல்வராக லால்குடியில் பிறந்தவர்.

திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற இவர், இசைத் துறையில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டங்களையும், கலாசேத்திராவின் டிப்ளமாவும் பெற்றிருக்கிறார்.

டைகர் வரதாச்சாரியார், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், டி.கே. ராமசாமி அய்யங்கார், வீணை திருமதி கற்பகம் சுவாமிநாதன், முசிறி சுப்பிரமணிய அய்யர், திருப்பாம்புரம் சுவாமிநாதப் பிள்ளை போன்ற இசை வல்லுநர்களின் பயிற்சியும், பேராசிரியர் சாம்பமூர்த்தி போன்ற பலரிடம் இசை இலக்கணமும் பயின்றவர்.

பல பல்கலைக் கழகங்களில் வருகைப் பேராசிரியராக பல மாணவர்களுக்கு இசைப் பயிற்சியும் அளித்து வருகிறார். இசை தொடர்பாக தமிழ், தெலுங்கு, ஆங்கில மொழிகளில் பல நூல்களை இயற்றியிருக்கிறார்.

'சங்கீத சிரோமணி', 'சங்கீத வித்வான்', 'சங்கீத கலாஜோதி', 'சங்கீத கலா ஆசார்ய', 'இசைச் செல்வர்' போன்ற பல பட்டங்களைப் பெற்று, காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்வானாகவும் விளங்கும் பேராசிரியர் எஸ்.ஆர். ஜானகிராமன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இசை ஆராய்ச்சிக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
மாண்டலின் கலைஞர்

திரு.எம்.வி.எம். செல்லமுத்து

திண்டுக்கல் அங்குவிலாஸ் குடும்பத்திலிருந்து மற்றும் ஓர் இசைக்கலைஞர் - அவர்தான் எம்.வி.எம். செல்லமுத்து.

எம்.வி.எம். முத்தையா பிள்ளை அவர்களின் புதல்வரான இவர், 5.2.1940-ஆம் ஆண்டு பிறந்தார்.

திண்டுக்கல் கிளாரினட் வித்வான் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை, குன்னக்குடி சுப்பையா பாகவதர், மதுரை கேசவ பாகவதர் போன்ற இசை வல்லுனர்களிடம் கடும் பயிற்சி பெற்றார்.

ஆர்மோனியம், வீணை, மாண்டலின், கிடார், புல்லாங்குழல், பியானோ, கீபோர்டு, சாக்சபோன், ஹவாயன் கிடார் போன்ற பத்து இசைக் கருவிகளில் வாசிக்கத் தெரிந்தவர்.

சின்னமனூரில் ஓர் இசைவிழாவில், புகழ்பெற்ற பல இசைக் கலைஞர்கள் முன்னிலையில், கிடார் வாத்தியத்தில் கர்நாடக இசை வடித்து வழங்கினார். அன்று முதல் இருபத்தொரு ஆண்டுகளாக தமிழகத்திலும், அப்பாலும் பல விழாக்களில் மாண்டலின், கிடார் போன்ற வாத்தியங்களில் கர்நாடக இசையமுதம் பொழிந்து வருகிறார்.

தருமபுரம், குன்றக்குடி ஆதீனகர்த்தர்களால் ஆதீன இசைப் புலவராக நியமனம் பெற்று பட்டங்களும் வழங்கப்பட்டிருக்கிறார்.

திரு.எம்.வி.எம். செல்லமுத்து அவர்களின் இசைப்பணியைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மாண்டலின் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
பரதநாட்டிய ஆசிரியர்

திருமதி. (சாயி) கே. சுப்புலட்சுமி

''பம்பர சகோதரிகள்'' என்று கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களால் சிறப்பிக்கப்பட்ட இரட்டையரில் ஒருவரான திருமதி. சுப்புலட்சுமி தமது ஆறாவது வயது முதல் நாட்டியமாடத் தொடங்கினார்.

திரு. முத்துவேல் பிள்ளை - தையல் நாயகி தம்பதியரின் மகளான இவர் 1947-ஆம் ஆண்டின் பிறப்புடன் பிறந்தவர்.

இசையரசி பி.ஏ. பெரியநாயகி அவர்களின் கவனத்திலும், வைத்தீஸ்வரன் கோயில் வி.எஸ். முத்துசாமி பிள்ளை அவர்களின் பயிற்சியிலும் வார்க்கப்பட்டவர் நடனமணி திருமதி. சுப்புலட்சுமி, திரு.பி. கிருஷ்ணமூர்த்தி இவரது கணவர் ஆவார். 1955-ல் இவரது அரங்கேற்றம் நடந்தது.

'மலைக்கள்ளன்', 'அறிவாளி', 'தாய்க்குப் பின் தாரம்', 'சிவகங்கைச் சீமை', 'ரத்தக் கண்ணீர்', 'அலிபாபாவும் 40 திருடர்களும்', 'மக்களைப் பெற்ற மகராசி' போன்ற 60 திரைப் படங்களில் இவரது நடனம் சிறப்பிடம் பெற்றிருந்தது.

1968-ஆம் ஆண்டுடன் மேடை நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு தற்போது புதுவை, கடலூர், பண்ருட்டி ஆகிய நகரங்களில் நடனப் பள்ளிகளை நடத்தி வருகிறார்.

'பம்பர சகோதரி'யான திருமதி. சுப்புலட்சுமி அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், பரதநாட்டிய ஆசிரியருக்கான 'கலைமாமணி' விருது வழங்கி சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
பரதநாட்டிய ஆய்வுக் கலைஞர்

திருமதி. அனிதா ரத்தினம்

அனிதா ரத்தினம் இந்திய நடன, கலாச்சார விழுமியங்களை உலகு தழுவிய - புதுயுகப் பார்வையில் அணிசெய்யத் துடிக்கும் இளைய தலைமுறைக் கலைஞர்.

தொடக்கத்தில் தேசிய விருது பெற்ற கே. லட்சுமணன் அவர்களால் நடனம் பயிற்றுவிக்கப் பட்டார். பின்னர் அடையாறு சலாச்சேத்ரத்தில் சாரதா - சாரதா ஹாஃப்மன் ஆகியோரால் தமது திறமையை வளர்த்துக் கொண்டார்.

அமெரிக்காவில் வாழ்ந்தபோது இந்திய நடனக் கலை தொடர்பாக பல ஆய்வுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் நிகழ்த்தினார். அமெரிக்கத் தொலைக்காட்சியில் தயாரிப்பாளராகச் செயல்பட்டபோது இந்தியக் கலாச்சாரப் பெருமிதங்களை பல கோணங்களில் பிரதிபலிக்க இவர் எடுத்துக் கொண்ட ஆர்வமும், அக்கறையும், கலைநேர்த்தியும் இவருக்கு 'தொலைக்காட்சித் தூதுவர்' என்னும் பட்டத்தை வாங்கித் தந்தன.

தாயகம் திரும்பியதும் 'அரங்கம் அறக்கட்டளை'யை நிறுவி நடனக்கலையில் நாட்டுபுறவியல் தொடங்கி நவீன உத்திகள்வரை ஆய்வுகளும் நிகழ்ச்சிகளும் செய்து வருகிறார். 'அகல்யை - மறுபடியும் கல்லானாள்' என்பன போன்ற பழமையும் புதுமையும் நிறைந்த நிகழ்ச்சிகளால் பலரை இவர் திரும்பிப் பார்க்க வைக்கிறார்.

இந்திய - கிரேக்க நாடகங்களுக்கிடையேயுள்ள உறவு குறித்து 'நாட்டிய பிரம்மம்' என்னும் நூலும், அனைத்துலக நாட்டியக் கலைக்கு இந்தியப் பங்களிப்பை விளக்கும் 'நர்த்தகி' என்னும் நூலும் இவரது புலமைக்குச் சான்றுகளாகும்.

திருமதி அனிதா ரத்தினத்தின் கலைச்சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பரத நாட்டிய ஆய்வுக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
பரதநாட்டியக் கலைஞர்

திருமதி. பிரியதர்சினி கோவிந்த்

பிரியதர்சினி கோவிந்த், 1.2.1965-ல் பிறந்தவர். முக்தா சீனிவாசனின் புதல்வர் முக்தா கோவிந்த் இவரது கணவர்.

சுவாமிமலை கே. இராஜரத்தினம் அவர்களிடமும், திருமதி. கலாநிதி நாராயணன் அவர்களிடமும் நடனம் பயின்றார்.

1974-ல் அரங்கேறிய இவர், இருபது ஆண்டுகளாக இந்தியாவின் பல பகுதிகளிலும் தமது நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்.

பல சபாக்களின் பாராட்டுக்களையும், பட்டங்களையும் பெற்றுள்ள இவர் சின்னத் திரைகளிலும் பல நிகழ்ச்சிகளை வழங்கியிருக்கிறார்.

அமெரிக்கா, ஐரோப்பா, தென் ஆப்பிரிக்கா, போன்ற வெளிநாடுகளிலும் இவரது நாட்டியத் திறமை பாராட்டுரைகளை அள்ளிக் குவித்தன.

திருமதி. பிரியதர்சினி கோவிந்த்தின் கலைப் பணியைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பரதநாட்டியக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
பரதநாட்டியக் கலைஞர்

செல்வி பிரியா சுந்தரேசன்

செல்வி பிரியா, 'ஒரு பரிபூரண நாட்டியக் கலைஞர்' என்று தீவிர விமர்சகர் திரு. சுப்புடு அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

ஐந்து வயதில் தமது, அன்னையார் 'கலைமாமணி' திருமதி சரஸ்வதி அவர்களிடம் பரதம் பயிலத் தொடங்கினார். பந்தணைநல்லூர் பாணியில் பல ஆண்டுகள் பயிற்சி பெற்று நேர்த்தி, வசீகரம், முழுமை பெற்ற நாட்டியக் கலைஞராக உருவானார்.

பரதம் தவிர, குச்சுப்புடி, கதக், ஒடிசியும் அறிந்த இவர், இதுவரை 950 நாட்டிய நிகழ்ச்சிகளிலும், 50க்கு மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் முத்திரை பதித்திருக்கிறார்.

தற்போது டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா அறக்கட்டளையின் நாட்டியப் பள்ளியான 'விபஞ்சி'யில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

பல்வேறு சபாக்களாலும், பட்டப் பரிசுகள் பெற்றுள்ள செல்வி பிரியா சுந்தரேசனுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பரத நாட்டியக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
பரதநாட்டிய இசைக் கலைஞர்

திருமதி. பத்மா ராஜகோபாலன்

திருமதி. பத்மா ராஜகோபாலன், 1941-ல், உடுமலைப்பேட்டையில் பிறந்தவர். திரு. ராமசாமி அய்யல் - திமதி. சின்னம்மாள் ஆகியோரின் மகள்.

இசையில் ஆரம்பப் பாடத்தை தந்தை கற்பித்தார். செங்கோட்டை கிருஷ்ணமூர்த்தி பாகவதர் வளர்த்தெடுத்தார். புகழ்பெற்ற கர்நாடக இசைக் கலைஞர் மதுரை என். கிருஷ்ணன் அவர்களால் மெருகேற்றப்பட்டார்.

பத்மா இளம் வயது முதலே பாடுவதற்கு மாத்திரமல்ல; ஆடுவதற்கும் கற்றுக்கொண்டே வந்தார். புதுக்கோட்டையில் 1949-ல் நடன அரங்கேற்றம் நிகழ்ந்தது. 1962-வரை நாட்டிய நிகழ்ச்சிகளையும் வழங்கிக் கொண்டிருந்தார் என்ற போதிலும், நட்டுவாங்கம் இவருக்கு பிடித்த கலையாய் இருந்தது.

இவரது இனிய - முறைபப்படுத்தப்பட்ட குரல்நயத்திலும் கட்டமைப்பிலும் ஈர்க்கப்பட்ட புகழ்மிக்க நாட்டியக் கலைஞர் திருமதி வைஜயந்தி மாலா பாலி அவர்கள், தமது கலைக் குழுவுக்கு நட்டுவாங்கம் செய்யும்படி அமர்த்திக் கொண்டார்.

திருமதி கமலா, திருமதி. சுதாராணி ரகுபதி, நிர்மலா ராமச்சந்திரன் போன்ற முன்னணி கலைஞர்களுக்கெல்லாம் நட்டுவாங்கம் செய்திருக்கிறார்.

1970 முதல் சுதாராணி ரகுபதியின் பரதாலயாவில் இசை - நாட்டியப் பயிற்சியாளராகப் பணிபுரியும் இவர், பல பட்டங்களும் பரிசுகளும் பெற்றவர்.

திருமதி. பத்மா ராஜகோபாலனின் கலைத் திறமையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பரதநாட்டிய இசைக் கலைஞருக்கான ‘கலைமாமணி’ விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
நாட்டிய - நாடகக் கலைஞர்

திருமதி ஸ்ரீகலா பரத்

வழுவூரார் பாணியில் வழுவாத மணியாக - கலைமாமணி கே.ஜே. சரசா அவர்களால் வார்த்தெடுக்கப்பட்ட நாட்டியக் கலைஞர் - ஸ்ரீகலா பரத்.

மே '72-ல் அரங்கேறிய இவர், தொடர்ந்து பல வெற்றிகரமான நிகழ்ச்சிகளை வழங்கினார்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தமது நாட்டிய நிகழ்ச்சிகளால் புகழ் வளர்த்தார்.

அன்னமாச்சார்யாவின் கீர்த்தனைகளைத் தழுவி, 'அன்னமய்யா பக்தி மஞ்சரி' என்கிற நாட்டிய நாடகத்தைத் தயாரித்து, நாட்டியத்தின் நவரச சுவைகளையும் அள்ளி வழங்கினார்.

'நடனமாமணி', 'சிவசக்தி நாட்டிய சிந்தாமணி' போன்ற பட்டம் பெற்றுள்ள இவருக்கு, இலங்கை அரசு 'பரதரத்னா' என்கிற பட்டத்தையும் வழங்கியது.

திருமதி ஸ்ரீகலா பரத் அவர்களின் கலைப்பணியைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாட்டிய நாடகக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
குச்சுப்புடிக் கலைஞர்

திருமதி. உமா முரளி கிருஷ்ணா

பத்மஸ்ரீ கே.என். தண்டாயுதபாணி பிள்ளை, பத்மஸ்ரீ அடையாறு கே. லட்சுமணன், லட்சுமி விசுவநாதன் ஆகியோரின் மாணவியான உமா முரளி கிருஷ்ணா, தமது 5-வது வயது முதலே நாட்டியத்தில் பயிற்சி பெற்றவர்.

பரதம் பயிலும்போதே குச்சுப்புடி கற்பதிலும் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார். டாக்டர் வேம்பட்டி சின்ன சத்தியம் அவர்களின் பயிற்சியும் இவருக்குக் கிடைத்தது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மாவட்டம்தோறும் இவரது நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. மும்பையில் நடந்த கலைவிழாவில் 'யுவகலா பாரதி' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். பல சர்வ தேசக் கலை விழாக்களிலும் கலந்துகொண்டிருக்கிறார்.

இவரது நாட்டிய நிகழ்ச்சிகளைக் கண்ட விமர்சகர்கள் 'பரவசக் கவிதை' என்று வியந்து பாராட்டியிருக்கிறார்கள்.

கே.பி. சுப்பிரமணியம் - சுசீலா தம்பதியரின் மகளான உமா, புகழ்பெற்ற திரை இசைக் கலைஞர் திருமதி ஜானகி அவர்களின் மருமகளும் ஆவார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் குச்சுப்புடிக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருதினை இவருக்கு வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
நாடகத் தயாரிப்பாளர்

திரு.எம்.எஸ். ராஜாராம்

எம்.எஸ். ராஜாராம், 39 ஆண்டுகளாக நாடகமேடைத் தொடர்பு கொண்டவர். நடிகராக, எழுத்தாளராக, இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

திரு.எம். சுப்பையா - அன்னலட்சுமி தம்பதியரின் மகனாக 28.3.1940-ல் முகவை மாவட்டம், மண்டலமாணிக்கத்தில் பிறந்தவர்.

நாடகப் போட்டிகளில் நடுவராக இருந்து சிறந்த நாடகங்களைத் தேர்தெடுத்திருக்கிறார்.

சந்திரோதயம், கல்யாணியின் கணவன், பிரியா உட்பட 15 திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்.

தற்போது ஜவஹர் சிறுவர் இல்லத்தில் நாடக ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

திரு.எம்.எஸ். ராஜாராமின் நீண்ட மேடை அனுபவங்களுக்காக தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாடகத் தயாரிப்பாளருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருதுபெறும்
நாடகத் தயாரிப்பாளர்

திரு. காஞ்சி ரங்கமணி

மேஜர் சீனிவாசன் - ஜெயலட்சுமி தம்பதியரின் மூத்த மகனாக 20.11.1937-ல் காஞ்சியில் பிறந்தார், ரங்கமணி.

இளம் வயதிலேயே மேடை ஏறிய நடிகர். அவ்வை சண்முகம், எம்.கே. ராதா, கலைவாணர் போன்ற கலைஞர்களின் பாராட்டையும் பரிசையும் இளம் பருவத்திலேயே பெற்றிருக்கிறார்.

பி.பி. ரங்காச்சாரி, ராஜா தண்டபாணி, கலாசாகரம் ராஜகோபால், சாம்பு நடராஜன் ஆகியோரிடம் நாடக நடிகராகவும், தயாரிப்பு நிர்வாகியாகவும், நாடக ஆசியரியராகவும், பயிற்சியளிப்பவராகவும் பணிபுரிந்து நாடகத்துறையின் பல பிரிவுகளிலும் அனுபவம் பெற்றார்.

1969-ஆம் ஆண்டு முதல் அழகிரி நாடக மன்றம் என்னும் தொழில்முறை நாடகக் குழுவைத் தொடங்கி 55 நாடகங்களை மேடையேற்றியிருக்கிறார்.

கடந்த 45 ஆண்டகளாக நடிகராகவும், நாடகத் தயாரிப்பாளராகவும், ஆசிரியராகவும் விளங்கும் காஞ்சி ரங்கமணி அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், நாடகத் தயாரிப்பாளருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்

நாடக இயக்குநர்

திரு. போலீஸ் வெ. கண்ணன்

திருவில்லிபுத்தூரில் வெங்கிட்டு - அரங்நாயகி தம்பதியர்க்கு 1937-ஆம் ஆண்டு பிறந்தவர் போலீஸ் வெ. கண்ணன்.

உயர்ந்த சாதி என்று கருதப்படும் சமுதாயத்தில் பிறந்தாலும், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்றோரின் எழுத்துக்களாலும் பேச்சாலும் ஈர்க்கப்பட்டு, சாதிக் கொடுமைகளைச் சாடி, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்.

நாடகங்களை சமுதாய மாற்றத்துக்கான 'புரட்சிக் கருவி' என்று கருதுகிறவர். தமிழகம் முழுவதும் தமது நாடகங்களால் கருத்துப் போர் நடத்தியவர்.

முற்போக்குக் கருத்துக்களின் கலாச்சாரப் படையாக தமது கலைக் குழுவை நடத்திச் செல்லும் போலீஸ் வெ. கண்ணன் அவர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாடக இயக்குநருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

நாடக நடிகர்

திரு. சண்முக சுந்தரம்

தஞ்சை மாவட்டம், திருமயிலாடியில் திரு. குஞ்சிதபாதம் - ராமாமிர்தம் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் சண்முக சுந்தரம்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, எஸ்.வி. சகஸ்ரநாமம், கவிஞர் கண்ணதாசன், சகோதரி சந்திர காந்தா ஆகியோரின் நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றவர்.

'ரத்தத் திலகம்' திரைப்படத்தின் மூலம் திரைப்படத்தில் அறிமுகமானார். அதனைத் தொடர்ந்து இன்றுவரையிலும் பலதரப்பட்ட கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார்.

தொலைக்காட்சித் தொடர்கள் பலவற்றிலும் நடித்து வருகிறார். மொழிமாற்றம் செய்யப்பட்ட தொடர்களுக்குப் பின்னணிக் குரலும் கொடுத்திருக்கிறார்.

திரு. சண்முக சுந்தரம் அவர்களின் நடிப்பாற்றலைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாடக நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
நாடக நடிகர்

திரு.டி.என். கிருஷ்ணன்

திரு. நாராயண பிள்ளை - ஜானகி அம்மாள் தம்பதியரின் மூன்றாவது மகன் டி.என். கிருஷ்ணன்.

இளம் வயதிலேயே அவ்வை சண்முகம் அவர்களின் நாடகக் குழுவில் சேர்ந்தார். அங்குதான் நடிப்புடன் படிப்பும் கற்றுக்கொண்டார். அதன் பிறகு சக்தி நாடகசபாவிலும், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி அவர்களின் குழுவிலும் நடித்து ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்தார்.

அறிஞர் அண்ணாவின் சந்திரோதயம் - சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் - நீதிதேவன் மயக்கம் போன்ற நாடகங்களில் அண்ணாவுடன் இணைந்து நடித்தார்.

கலைஞரின் தூக்குமேடை, வாழ முடியாதவர்கள், பரப்பிரம்மம், வேதனைக்குரல், மணிமகுடம், அம்மையப்பன், உதயசூரியன் ஆகிய நாடகங்களிலும் நடித்திருக்கிறார்.

அறிஞர் அண்ணா, கலைஞர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன் ஆகியோருடன் இணைந்து நடிக்கும் வாய்ப்புப் பெற்றவர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் பொதுச் செயலாளராக பன்னிரு ஆண்டுகள் பணிபுரிந்திருக்கிறார்.

திரு. டி.என். கிருஷ்ணன் அவர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், நாடக நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
நாடக நடிகை

திருமதி. கௌசல்யா செந்தாமரை

திரு.ஏ.பி. புருஷோத்தமன் - ஆண்டாள் அம்மாள் தம்பதியர்க்கு 1949-ஆம் ஆண்டு கௌசல்யா பிறந்தார்.

தமது எட்டாவது வயதில் ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்த 'மாமியார் மெச்சிய மருமகள்' திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார். தொடர்ந்து பல மேடை நாடகங்களில் நடித்தார்.

அந்த நாட்களில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரின் 'அட்வகேட் அமரன்', 'இன்பக் கனவு' 'சுமைதாங்கி' ஆகிய நாடகங்களின் மூலம் பல இலட்சம் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றார்.

குணச்சித்திர நடிகர் செந்தாமரை அவர்களை மணந்து கொண்ட பின் நடிப்பதை நிறுத்திக்கொண்டவர். கணவரின் மறைவுக்குப் பின் மீண்டும் நடிப்பில் ஈடுபட்டு, தொலைக்காட்சித் தொடர்களில் தமது ஆற்றலை காட்டி வருகிறார்.

திருமதி. கௌசல்யா செந்தாமரை அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாடக நடிகைக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

நாடக நகைச்சுவை நடிகர்

திரு.எஸ்.ஆர். கோபால்

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் 1929-ஆம் ஆண்டு திரு. சங்கரன் பிள்ளை - தேவகி அம்மாள் தம்பதியர்க்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர் எஸ். ராஜகோபால். (எஸ்.ஆர். கோபால்).

பத்து வயதில், எதார்த்தம் பொன்னசாமிப் பிள்ளையின் 'மதுரை ஸ்ரீ பாலகான சபா'வில் நடிகனாகச் சேர்ந்து கலைப் பயணம் தொடங்கினார்.

தொடர்ந்து நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களின் குழுவிலும், கே.பி. கேசவன் அவர்களின் 'ஒரிஜினர் பாய்ஸ் கம்பெனியிலும்', 'பாலமுருகன் பாய்ஸ் கம்பெனி'யிலும், நகைச்சுவை நடிகராகவும், குணச்சித்திர நடிகராகவும் இடம்பெற்றார்.

கலைவாணருடனும், கலைஞருடனும் பல நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றார். ஆர்.எஸ். மனோகரின் நாடகங்களிலும் பல வேடங்களில் நடித்தார்.

'கலைவாணர் என்.எஸ்.கே.' இயல் இசை நாடக மன்றம், என்னும் நாடகக் குழுவைத் தொடங்கி, பல நாடகங்களை நாடெங்கும் நடத்தினார். திரு.எஸ்.ஆர்.கோபால் அவர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாடக நகைச்சுவை நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்

தொழில்முறை அல்லாத நாடக ஆசிரியர்

திரு.வே.பா. பலராமன்

வடஆற்காடு மாவட்டம் வேலூரில் திரு. பார்த்தசாரதி - ருக்மணி தம்பதியரின் மகனாகப் பிறந்த பலராமன் ஒரு வங்கி அதிகாரி ஆவார்.

கோப்புகளுக்குள் சிறைப்பட்ட வாழ்க்கை என்றாலும், ஒரு கலைஞனைக் கட்டுப்படுத்த யாரால் முடியும்?

வங்கி அதிகாரி நாடக ஆசிரியராக வெளிப்பட்டார். சென்னை 'வானொலி' கிருஷ்ணமூர்த்தி வழிகாட்டுதலில் பல நாடகங்களை எழுதி அரங்கேற்றினார்.

''சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கு நாடகத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவே எனது நாடகங்கள்'' என்று உறுதி கொண்டிருக்கும் இந்த எழுத்தாளரின் நாடகங்கள் வானொலி - தொலைக் காட்சிகளிலும் ஒலித்து, ஒளிர்ந்த்திருக்கின்றன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் திரு.வே.பா. பலராமன் அவர்களுக்கு தொழில்முறையல்லாத நாடக ஆசிரியருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
நாடக ஆர்மோனியக் கலைஞர்

திரு.கே.ஏ. வஹாப்கான்

ஆர்மோனியக் கலைஞர் திரு.கே.ஏ. வஹாப்கான் 1922-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் முப்பதாம் நாள் கே.பி. ஹமீத்கான் சாகேப் - மஹபூப் பீபீ தம்பதியர்க்கு மகனாக காஞ்சியில் பிறந்தார்.

சிறுவயதில் எங்கே நாடகம், கச்சேரி நடந்தாலும் சென்று கவனித்து, அம்மாதிரியே வாத்தியங்கள் வாசிக்க சுயமாகக் கற்றுக் கொண்டார்.

அறிஞர் அண்ணாவின் பல நாடகங்களுக்கு இவர் ஆர்மோனியம் வாசித்திருக்கிறார். கலைமாமணி சுப்பு ஆறுமுகம் அவர்களுக்கும் பல சந்தர்ப்பங்களில் வாசித்திருக்கிறார்.

தமிழக அரசின் சார்பில் கிராமியக் கலை நிகழ்ச்சிகளை பல ஊர்களில் நடத்தியிருக்கிறார்.

மதம் கடந்து இவரது இசை பல இந்துக் கோயில்களில் ஒலித்திருக்கிறது.

திரு.கே.ஏ. வஹாப்கான் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், நாடக ஆர்மோனியக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
விகடக் கலைஞர்
'விகடம்' திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி

விகடம் ஆர். கிருஷ்ணமூர்த்தி 23.12.1920-ல் பரமக்குடியில் பிறந்தார். தந்தை, திரு. இராமசுப்பிரமணியம் - தாயார் வேங்கடலட்சுமி. மனைவி திருமதி.எம்.எல். வசந்தகுமாரி. மகள் நடிகை கலைமாமணி ஸ்ரீவித்யா.

சிறு வயது முதலே பிறர் பேசுவதை பார்த்தும் கேட்டும் அதைப்போலவே பேசியும் நடித்தும் காட்டுவதில் ஆர்வமும் திறமையும் கொண்டவர். பிரபல இசைக் கலைஞர்களான அரியக்குடி ராமானுஜம் அய்யங்கார், முசிறி, செம்மங்குடி, மதுரை சோமு போன்றோரின் பாட்டு, தாளம், வாத்திய இசை அனைத்தையும் தமது குரல் ஒன்றிலேயே செய்து காண்பித்து, அந்தந்தக் கலைஞர்களாலேயே பாராட்டப்பட்டிருக்கிறார்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் இவருக்கு 'விகடமணி' என்ற பட்டத்தை வழங்கினார்.

சென்னையிலுள்ள காந்தி மண்டபம் கட்டுவதற்காக விகடக் கச்சேரி நடத்தி நிதியளித்திருக்கிறார்.

திரு. விகடம் ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், விகடக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்படத் தயாரிப்பாளர்

திரு.இராம. வீரப்பன் அவர்கள்

திரைப் படத்துறையிலும், அரசியல் துறையிலும் சிறந்து விளங்குபவர் ஆர்.எம்.வீ. அவர்கள். சிறுவயதில் இவர் தேசிய இயக்கத்தில் நாட்டம் கொண்டவராக இருந்தாலும், தி.மு.க. என்ற மூன்றெழுத்துதான் இவரது அரசியல் வளர்ச்சிக்கு ஏணிப்படியாக அமைந்தது.

ஆர்.எம்.வீ. அவர்கள் சிறந்த திரைப்படத் தயாரிப்பாளர், பழுத்த அரசியல்வாதி என்பதைக் காட்டிலும், ஆற்றல் மிகுந்த நிர்வாகி என்பதுதான் அவருக்கு முதன்மையாய் அமைந்தது. இந்த நிர்வாகப் பயிற்சிக்கு ஆரம்ப காலத்தில் களமாய் - தளமாய்க் கிடைத்த இடம் - ''முத்தமிழ்க் கலாவித்வ ரத்தினம்'' டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகக் குழுவாகும்.

பிறகு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி அவர்களின் நாடக சபாவிலும், ''எம்.ஜி.ஆர் நாடக மன்ற''த்திலும் நிர்வாகியாக பணிபுரிந்தார். பிறகு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்தின் நிர்வாகியாகவும் பணிபுரிந்தார்.

1963-ஆம் ஆண்டு தன் சொந்த முயற்சியாக ''சத்யா மூவிஸ்'' எனும் திரைப்பட நிறுவனத்தைத் தொடங்கினார். அதில் எம்.ஜி.ஆர். அவர்களையே நடிக்கச் செய்து 'தெய்வத்தாய்' திரைப்படத்தை 1964-ல் வெளியிட்டார். வெள்ளி விழா வரிசையைத் தாண்டி சத்யா மூவிஸ் நிறுவனம் இதுவரை 27 படங்களைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. 1971-ஆம் ஆண்டு இவர் தயாரித்த 'ரிக்ஷாக்காரன்' படம் பெரும்புகழ் பெற்றதுடன் எம்.ஜி.ஆருக்கு 'பாரத்' என்ற விருதையும் வாங்கிக் கொடுத்தது.

1949-ல் அண்ணா அவர்கள் தி.மு.கழகத்தைத் தொடங்கியபோது அதில் இவர் உறுப்பினர் ஆனார்.

1977-78-களில் எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் செய்தித்துறை அமைச்சராகவும் அறநிலையத்துறை அமைச்சராகவும் பணிபுரிந்தார். எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு, 1995-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் மன்றத்தை அரசியல் கட்சியாக மாற்றி, எம்.ஜி.ஆர். கழகம் எனப் பதிவு செய்து, இன்றுவரை அதன் நிரந்தரத் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

இவர் சென்று வந்த வெளிநாடுகள் : இலங்கை, ஜப்பான், மொரிஷியஸ், ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், சிங்கப்பூர், அமெரிக்கா.

ஆர்.எம்.வீ. அவர்கள் பிறந்தது 1926-ம் ஆண்டு செப்டம்பர் ஒன்பதாம் நாள். பிறந்த ஊர் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள வல்லத்திரக்கோட்டை. தாயார் - தெய்வானை அம்மாள். தந்தை - இராமசாமி. 1956-ஆம் அண்டு திருப்பரங்குன்றத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் இவர்களது திருமணம் நடைபெற்றது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆர்.எம். வீரப்பன் அவர்களுக்கு திரைப்படத் தயாரிப்பாளருக்கான .கலைமாமணி. விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்படத் தயாரிப்பாளர்

திரு.ஏ.வி.எம். சரவணன்

மூன்றெழுத்துக்கு எப்போதும் ஒரு சிறப்புண்டு. ஏ.வி.எம். அதிலொன்று. ஏ.வி.எம் வழங்கிய சிறந்த படைப்புகளில் ஒன்று சரவணன்.

3.12.1939-ல் பிறந்த இவர், 1958-ல் திரைத்துறையில் ஈடுபட்டார். ஏ.வி.எம்மின் பல வெற்றிப் படங்களுக்கு சூத்ரதாரியான இவர், கலைத்துறைக்கு அப்பால் ஒரு சமூகச் சிந்தனையாளராகவும் விளங்குகிறார்.

ரோட்டரி சங்க உறுப்பினர், சங்கர நேத்திராலயாவின் செயல் உறுப்பினர், ஏ.வி.எம். கல்வி நிறுவனங்களின் தலைவர், கம்பன் கழகத் துணைத் தலைவர் எனும் பொறுப்புக்கள் இவரது பன்முக சிந்தனைகளுக்குக் கட்டியம் கூறும்.

திரைப்படத்துறையில் பல பொறுப்புக்களை வகிக்கும் இவரது பண்பும் பயனும் இனிமை தருவன.

புதுவை அரசு இவருக்கு 'பண்பின் சிகரம்' எனும் விருது வழங்கியிருப்பது பொருள் செறிந்தது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஏ.வி.எம். சரவணன் அவர்களுக்கு திரைப்படத் தயாரிப்பாளருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்படத் தயாரிப்பாளர்

திரு.கேயார்ஜி

திரைப்படத் துறையில் 'கேயார்ஜி' (கே.ஆர்.ஜி.) எனும் பெயர் ஆலயமணி போன்று புகழ்பெற்றது.

தொழில் நகரமான கோவையில் பிறந்த இவருக்கு மாணவப் பருவத்திலேயே வணிக நோக்கம் வானளவு இருப்பினும், கலை உணர்வு அதை விஞ்சி நின்றது.

கோவையில் ரியல் எஸ்டேட் நடத்தி கைநிறையச் சம்பாதித்தவர். ஆனாலும் அந்தத் தொழிலில் அவருக்கு ஈடுபாடில்லை.

சென்னைக்கு வந்து கே.ஆர்.ஜி. பிலிம்ஸ், கே.ஆர்.ஜி. மூவிஸ் இண்டர்நேஷனல் ஆகிய படத் தயாரிப்பு நிறுவனங்களை உருவாக்கினார். நல்ல படங்களைத் தயாரித்து திரைப்பட வரலாற்றில் முத்திரை பதிக்க வேண்டும் என்பதே இவரது குறிக்கோள்.

'சிகப்பு ரோஜாக்கள்', 'ஜானி' போன்ற பல படங்களைத் தயாரித்தார். அத்தனையும் மக்களின் பாராட்டைப் பெற்றன.

தமிழகத்தின் முன்னணி நட்சத்திரங்கள் அனைவரும் இவரது படங்களில் நடித்துள்ளனர்.

தமிழ் மொழியில் மட்டுமல்லாது, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் 'கேயார்ஜி'யின் தயாரிப்புகள் வெற்றி பெற்றுள்ளன. 'கேயார்ஜி' என்ற சுருக்கத்தின் விரிவாக்கம் கே. ராஜகோபால்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கேயார்ஜி' அவர்களுக்கு திரைப்படத் தயாரிப்பாளருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்பட இயக்குனர்

திரு. அகத்தியன்

வெற்றிகளைக் குவித்து, விருதுகளை வாங்கியிருக்கும் இயக்குனர் அகத்தியன் இன்னும் பொன்விழா வயதினைத் தொடாத புகழுக்குரியவர்.

திரையுலகில் சாதனை படைக்க வேண்டும் என்ற சபதத்தோடு, 1978-ஆம் ஆண்டு கலையுலகில் காலடி பதித்தவர். இதுவரை இயக்கிய படங்கள் ஏழு. அவை ''மாங்கல்யம் தந்துனானே'', ''மதுமதி'', ''வான்மதி'', ''காதல் கோட்டை'', ''கோகுலத்தில் சீதை'', ''விடுகதை'', ''திருப்புமுனை'' ஆகியவையாகும்.

இவைகளில் 'காதல்கோட்டை' கல்லூரிப் புறாக்களை காந்த சக்தியாய் கவர்ந்து இழுத்த படம். காதலர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்காமலேயே உயிரோடு உயிரை இணைத்துக்கொண்டு நேசிக்கும் உருக்கத்தை காவியமாய் சொன்ன படம் 'காதல்கோட்டை'.

'கோகுலத்தில்' சீதை, பெண்கள் மேம்பாட்டிற்கான சிறந்த படம் என்று தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1996-ம் ஆண்டுக்கான சிறந்த இயக்குனர் விருது வழங்கப்பட்டது. இந்தியாவின் சிறந்த இயக்குனர் என்று மத்திய அரசு வழங்கிய சிறப்பு விருதும் இவர் திறமைக்குக் கிடைத்த பெருமையாகும்.

தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் பிறந்து, புகழில் ஊருணி நீராய் நிறைந்து உயர்ந்தவர் அகத்தியன்.

17-2-1956-ல் சன்னாசி - அகிலாண்டம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவருக்கு மனைவியும் மூன்று குழந்தைகளும் உள்ளனர். இவர் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அகத்தியன் அவர்களுக்கு திரைப்பட இயக்குநருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்பட இயக்குநர்

திரு. ரா. பட்டாபிராமன் (பட்டு)

கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் திரைக்கதை வசனம் எழுதப்பட்டு, 1956-ஆம் ஆண்டு புரட்சிப் புயலாய் வெளிவந்த 'பராசக்தி' படத்தின் உதவி இயக்குநராய் - இயக்குனர்கள் கிருஷ்ணன் - பஞ்சுவிடம் பணிபுரிந்தவர் பட்டு என்கிற ரா. பட்டாபிராமன். இயக்குநர் துறை மட்டுமின்றி - மற்ற துறையிலும் இறகு விரித்துச் செயலாற்றியவர். பத்மினி நடித்த 'மணம்மகள்' படத்தின் உதவி படத்தொகுப்பாளராய் பணியாற்றியுள்ளார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் என்று முப்பதுக்கும் மேற்பட்ட படங்களில் இணை இயக்குநராகவும், துணை இயக்குநராகவும் பணிபுரிந்துள்ளார்.

1970-ஆம் ஆண்டு தயாராகி வெளிவந்த 'பால்குடம்' படத்தின் இயக்குநராக உயர்ந்தார். பால்குடம் முதல் 'காயத்ரி'வரை சுமார் இருபது படங்களை இயக்கி உள்ளார்.

தொலைக்காட்சிக்கு செய்தி விளக்கப் படங்கள் தயாரித்தும் இயக்கியும் தந்துள்ளார்.

15-8-1931-அன்று, தந்தை எம்.வி. ராகவன், தாயார் காமாட்சி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்த இவருக்கு இயக்குநர்கள் கிருஷ்ணனும் (கிருஷ்ணன்-பஞ்சு) திருமலையும் உடன் பிறந்த சகோதரர்கள்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ரா. பட்டாபிராமன் (பட்டு) அவர்களுக்கு திரைப்பட இயக்குநருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
திரைப்பட நடிகர்

திரு. நெப்போலியன்

பாரதிராஜா கண்டுபிடித்த நடிகர்களில் நினைவில் நிற்பவர் நெப்போலியன்.

நெப்போலியன் பெயரை இப்போதும் சொல்லிக்கொண்டிருக்கும் படம் 'சீவலப்பேரி பாண்டி'.

திரைப்படத் துறையில் 1991-ஆம் ஆண்டு 'புதுநெல்லு புதுநாத்து' படம் மூலம் அறிமுகமாகி, 1998-ஆம் ஆண்டு 'பகவத்சிங்' படம் முடிய இவர் சரஞ்சரமாய்த் தந்திருக்கும் படங்கள் எண்ணிக்கை ஐம்பது.

ஏறக்குறைய ஆண்டுக்கு ஆறு படங்கள் வீதம் எட்டு ஆண்டுகளில் 50 படங்கள்.

பாரதிராஜா, கே.எஸ். ரவிக்குமார், பி. வாசு, ஆர்.வி. உதயகுமார், ஐ.வி. சசி, தாசரி நாராயணராவ், பிரதாப் போத்தன், மணிவண்ணன், ஆர்.கே. செல்வமணி போன்ற புகழ்பெற்ற இயக்குனர்களின் இயக்கத்தில் நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார் நெப்போலியன்.

'தொல்லை தராத நடிகர்' என்று திரைப்படத்துறையில் கால்பதித்த நாளிலிருந்து இன்றுவரை நற்பெயர் சம்பாதித்திருக்கும் பெருமை, நடிகர் நெப்போலியனுக்கு உண்டு.

நெப்போலியனின் இயற்பெயர் குமரேசன். தாயார் பெயர் - சரஸ்வதி அம்மாள். தந்தை - துரைசாமி (ரெட்டியார்). துணைவி - ஜெயசுதா.

எளிமையும், இனிய புன்னகையும் பாசத்தோடு பழகும் தன்மையும் கொண்டவர் என்று சகோதர நடிகர்களால் பாராட்டப் பெறும் பண்பாளர் நெப்போலியன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நெப்போலியன் அவர்களுக்கு திரைப்பட நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
திரைப்பட நடிகர்

திரு. விஜய்

இந்தியாவிலேயே ஈடு இணையற்ற நடிகராக விளங்கி, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவரும், நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவருமான இன்றைய நடிப்புச் சிங்கம் சிவாஜி கணேசன் அவர்களுடன் இணைந்து நடிக்கும் அரிய வாய்ப்பினைப் பெற்ற வாலிப வேங்கை நடிகர் விஜய். இவரது இயற் பெயர் சி. ஜோசப் பிஜய்.

குழந்தை முகம், செழித்த உடல் வளம், பழுத்த எலுமிச்சை நிறம், ஆர்ப்பாட்டமில்லாத நடிப்புத் திறம் - இத்தனையும் ஒன்றாய் இணைந்த இளைஞர்தான் நடிகர் விஜய்.

தங்கத்தைத் தணலில் இட்டு, உருக்கி, மெருகேற்றி, கலைவடிவ அணிகலனாக்கித் தரும் கைதேர்ந்த பொற்கொல்லரின் நிலையில் விஜயின் தந்தை இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர், இந்த இருபத்தோராம் நூற்றாண்டின் ரசனைக்கு ஏற்ப விஜயை கலையுலகின் கணிப்பொறியாய் உருவாக்கியுள்ளார்.

அறிமுகமான 'நாளைய தீர்ப்பு' எனும் முதல் படத்திலேயே காளையர்களின் இதயத்தைக் கவர்ந்துவிட்டார், விஜய்.

'செந்தூரப்பாண்டி', 'ரசிகன்', 'தேவா', 'விஷ்ணு', 'பூவே உனக்காக', 'கோயமுத்தூர் மாப்ளே', 'லவ் டுடே', 'நேருக்கு நேர்', 'ஒன்ஸ்மோர்', 'காதலுக்கு மரியாதை' ஆகிய படங்கள் நூறு நாட்களுக்கு மேல் ஓடியவை. இதில் 'பூவே உனக்காக' 250 நாட்கள் மக்கள் பேராதரவுடன் ஓடி, விஜயின் புகழுக்கு வெற்றி முத்திரை பதித்தது.

நேற்று ஓடிய படங்களின் நிழல் வரிசை மேலே காண்பது. இன்று வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் விஜயின் படங்கள் 'நினைத்தேன் வந்தாய்', 'பிரியமுடன்' ஆகிய படங்கள்.

நாளைய விஜய் வெற்றிப் படிக்கட்டுகளில் மேலும் முன்னேறுவார் என்பது கண்ணுக்குத் தெரிகிறது. அவரது திரைப்பட வரலாறு வைரவரிகளால் எழுதப்படும்.

விஜயின் வளர்ச்சிக்கு தந்தையைப் போலவே தாயார் ஷோபா சந்திரசேகரும் மிகவும் முக்கியமானவர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் விஜய் அவர்களுக்கு திரைப்பட நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
திரைப்பட நடிகர்
திரு. பிரசாந்த்

பெரும்புகழ் பெற்றுள்ள நடிகர் பிரசாந்த், இருபத்து நான்கு வயதிலேயே முப்பத்தேழு வெற்றிப் படங்களில் பங்குபெற்று, மகத்தான பெருமையை அடைந்த மாபெரும் திரைப்படக் கலைஞராவார்! தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய நான்கு மொழிப் படங்களிலும் நடிப்புத் திறனால் நற்புகழ் பெற்றுள்ள கலைஞர் பிரசாந்த், இயக்குநரும், தயாரிப்பாளரும், நடிகருமான பெருமைக்குரிய தியாகராஜனின் புதல்வராவார்.

'காதல் இளவரசன்' என, இளைஞர் உலகத்தின் கனவு நிலாவாக உலா வருகின்ற பிரசாந்த், 'சகலகலா வல்லவர்' எனப் போற்றத்தக்க திறமுடையவர்; கலைத் திண்மை கொண்டவர்; பரத நாட்டியக் கலையில் பாராட்டுப் பெற்றவர்; 'கராத்தே' கலையில் கருப்புப்பெல்ட்டை அடைந்தவர்; சிலம்பம், களரி, குதிரை ஏற்றம் முதலிய வீர விளையாடல்களில் விருது பெறும் தகுதி உடையவர்; கடலில் நீந்துவதில் உற்சாகம் மிக்குடையவர்; இசையைத் தமது இதயச் சுவையாக ஏற்றுப் போற்றும் பிரசாந்த், இலண்டன் டிரினிட்டி கல்லூரியில் (Trinity College of Music, London) பியானோ வாத்தியப் பயிற்சி பெற்றுச் சான்றிதழ் பெற்றவர். இசைக் கருவிகள் பலவற்றை இயக்கும் திறமுடையவர்.

''வைகாசி பொறந்தாச்சு'' என்னும் திரைப் படத்தில், தமது நடிப்புத் திறனால் வரலாறு படைத்த 'காதல் இளவரசன்' பிரசாந்த், புதிய முகங்களுக்கு அளிக்கும் புகழார்ந்த விருதை 1990-ஆம் ஆண்டில் பெற்றுப் பிரபலமானார். தேசிய விருதுபெற்ற பாலுமகேந்திராவின் 'வண்ண வண்ணப் பூக்கள்' திரைப் படத்தில் பிரசாந்தின் நடிப்பாற்றல் இமயமென எழுந்து நின்று, எல்லோரையும் வியக்க வைத்தது! ''செம்பருத்தி''யில் பிரசாந்தின் நடிப்புத் திறன், சரித்திரம் படைத்த நடிப்புக் கலைஞர்களின் வரிசையில் ஒருவராக்கி, திரைப்படத் துறையில் காதல் உணர்வுகளைக் கவின்மிகு கவிதைபோல் வெளிப்படுத்துவதில் வரலாற்றுச் சிறப்பை உருவாக்கி அளித்தது.

திரைப்படங்களைத் தேர்ந்து நடிப்பதில் வல்லவரான இவர், தமது தந்தையார் தியாகராசனின் இயக்கத்தில் உருவான 'ஆணழகன்' திரைப்படத்தில், தமது நடிப்பாற்றலின் பன்முகச் சிறப்பைப் பார்த்து ரசிப்போர் நெஞ்சங்களிலெல்லாம் அழுத்தமாகப் பதிய வைத்தார். இருபத்திரண்டே வயதில், சத்யா மூவீஸ் ''எங்க தம்பி'', திருப்பூர் மணியின் ''உனக்காகப் பிறந்தேன்'', மணிவண்ணனின் ''ராஜமகன்'' மனோஜ் குமாரின் ''செந்தமிழ் செல்வன்'' போன்ற பல திரைப்படங்களில் அமைந்த இவரது நடிப்பாற்றல், திரைத் துறையில் ஒளிவீசும் விடிவெள்ளியாக இனம் காட்டியது. 'ஜீன்ஸ்' திரைப்படத்தில் பிரசாந்த் பெற்ற பெரும் புகழ், தனித்தன்மை கொண்டது.

ரசிகர்களை மதித்துப் போற்றும் பிரசாந்த், இந்திய அளவில் ரசிகர்களைக் கவர்ந்துள்ள எழு ஞாயிறு! மலையாளம், தெலுங்கு, தமிழ், இந்தி ஆகிய மொழிப் படங்களில் முழுமையான தமது கலையாற்றலை காட்சிப்படுத்தும் மாட்சிமைக்குரிய சுவை நிலவு!

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பிரசாந்த் அவர்களுக்கு திரைப்பட நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்பட நடிகை
செல்வி. மீனா

குழந்தைப் பருவம் முதலாகவே நடிக்கத் தொடங்கிய மீனா, தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய நான்கு மொழிகளிலும் குழந்தைப் பருவக் கலைஞராக நாற்பத்தைந்து படங்களில் நடித்துப் புகழடைந்துள்ளார்.

முதல்வர் கலைஞரின் பொன்னான திருக்கரத்தால் 'கலைச் செல்வம்' என்னும் விருதை தென்னிந்தியக் கலைஞர்களின் அமைப்புச் சார்பாக 1996-ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டதைப் பெறற்கரிய பெருமையாக நினைத்து நெகிழும் மீனா, ஆந்திர மாநில அரசாங்கம் அளித்த 'நந்தி' விருதினை இரு முறை பெற்று மிகுபுகழ் அடைந்தவராவார்.

கதாநாயகியாகத் தமிழின் ''ஒரு புதிய கதை''யில் நடிக்கத் தொடங்கிய 'கலைச் செல்வம்' மீனா, ஏறத்தாழ இருபத்தைந்து படங்களில் கதாநாயகியாகத் தொடர்ந்து நடித்து தமிழ் நாட்டு ரசிகர்களின் கலை உள்ளங்களில் - விலைமதிக்க இயலாத வித்தக முத்தாக ஒளி வீசிக்கொண்டிருக்கும் பான்மை, நடிகை மீனா பெற்றுள்ள கலைச் சிறப்பின் மேன்மை!

துரைராஜ் - ராஜ் மல்லிகா தம்பதியரின் புதல்வியாக 1979-ஆம் ஆண்டு பிறந்த மீனா, ''நவயுகம்'' என்னும் தெலுங்குத் திரைப்படத்தில் கதாநாயகியாக முதன் முதலில் நடிக்கத் தொடங்கி, இதுவரை முப்பத்து ஐந்து படங்களில் நாயகியாகவே பங்கேற்று நடித்து, ஆந்திர மாநில ரசிகர்களின் கலைச் செல்வமாய் விளங்கி வருகிறார்.

இரு நூறு நாட்கள் தொடர்ந்து பெரு மகிழ்ச்சியுடன் ஆந்திர மாநில ரசிகர்களால் பார்த்துக் களித்த வரலாற்றுச் சிறப்பிற்குரிய ''சீதா ராமையா காரி மனவாராலு'' திரைப்படத்தில், அக்கினேனி நாகேஸ்வர ராவின் பேத்தியாக நடித்த மீனா, மறக்க இயலாத மாபெரும் கலைஞராக ரசிகர்களின் மனத்தில் இடம் பிடித்தார்! நடிகர் வெங்கடேசுடன் நாயகியாக நடித்த 'சாந்தி' திரைப்படமும், மீனாவுக்குச் சரித்திரப் புகழைப் பெற்றுத் தந்தது!.

'சினிமா எக்ஸ்பிரஸ்' அளித்த 'சிறந்த நடிகை' விருதை தமிழ்ப் படத்துக்கு நான்கு முறையும், தெலுங்கு, கன்னடப் படங்களுக்கு ஒவ்வொரு முறையும் பெற்றுள்ள மீனாவின் நடிப்பாற்றல், 'தம்ஸ் அப்' நிறுவனம் அளித்த 'சிறந்த நடிகை' விருதை 'முத்து' 'பாரதி கண்ணம்மா' ஆகிய திரைப்படங்களுக்காகப் பெற்றுத் தந்தது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மீனா அவர்களுக்கு திரைப்பட நடிகைக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்பட நடிகை

செல்வி ரோஜா

தனக்கென ஒரு பாணியை வகுத்துக் கொண்டு தமிழக ரசிகர்களின் எண்ணத்தைக் கவர்ந்திருப்பவர் - பத்திரிகைகளின் ஒருமித்த பாராட்டுகளையும் பெற்றிருப்பவர் நடிகை செல்வி ரோஜா.

1991-ல் திரையுலகில் நடிக்க வந்த இவர், 1998-வரை ஏழு ஆண்டுகளில் அறுபது படங்களில் நடித்துள்ளார். இந்த அறுபது படங்களில் நான்கு மொழிப் படங்களும் அடங்கும். தமிழ் 25, தெலுங்கு 30, கன்னடம் 4, மலையாளம் 1.

சிறந்த நடிகைக்கான தமிழக அரசின் விருதினையும், ஆந்திர மாநில அரசின் விருதினையும் பெற்றுள்ளார். முதன்மையான விருது 'செம்பருத்தி' படத்தில் சிறப்பாக நடித்ததற்காக வழங்கப்பட்டது. ரோஜாவின் சொந்த ஊர் திருப்பதி. பிறந்த நாள் 17-11-1977.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செல்வி ரோஜா அவர்களுக்கு திரைப்பட நடிகைக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்பட நகைச்சுவை நடிகர்

திரு. குமரிமுத்து

கலகலவெனச் சிரிக்கும் ஒருவகையான சிரிப்பலையை தன் பாணியாக வைத்துக்கொண்டு திரையுலகில் நாற்பத்து நான்கு ஆண்டு காலம் தன்னைத் தக்கவைத்துக் கொண்டிருப்பவர், நகைச்சுவை நடிகர் குமரிமுத்து.

அந்தக் கால நாடக நடிகர்களுக்கே உரிய வாழ்க்கைச் சிரமங்களை, முன்னேறுவதற்கு கரடுமுரடான பாதைகளைக் கடந்து வந்து திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்து நம்பிக்கையோடு வளர்ந்து கொண்டிருப்பவர் இவர்.

சென்னையில் இவரை ஆதரித்து உதவி செய்து முதலில் நாடகத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுத்தவர் நடிகவேள் எம்.ஆர். ராதா. அடுத்து நடிகர் அசோகன், ஏ.வி.எம். ராஜன் ஆகியோர் நாடகக் குழுக்களில் நடித்தார்.

1968-ல் தான் 'பொய் சொல்லாதே' என்ற படத்தில் நடிகர் நாகேஷுடன் சிறு பாத்திரத்தில் அறிமுகமானார்.

இயக்குநர் மகேந்திரன் இவரால் மறக்க இயலாத நன்றிக்குரியவர். 1977-ல் மகேந்திரன் இயக்கிய ஒன்பது படங்களில் தொடர்ந்து நடித்துள்ளார். இதுவரை 500 படங்களுக்குமேல் நடித்துள்ளார்.

நடிகர் நம்பிராஜனும், இயக்குநர் கே.எம். பாலகிருஷ்ணனும் இவரது உடன் பிறந்த சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டம் காட்டுப்புத்தூர் கிராமம். பிறந்தது : 20-12-1938-ஆம் நாள்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் குமரிமுத்து அவர்களுக்கு திரைப்பட நகைச்சுவை நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்பட நகைச்சுவை நடிகர்

திரு. தியாகு

இசைக் குடும்பத்தில் பிறந்த நடிப்புப் பசையுள்ள நகைச்சுவை நடிகர் தியாகு.

வாய்நிறைய வெற்றிலையும், மனம் நிறைய சங்கீத உணர்வுகளையும் சுமந்து கொண்டிருக்கும் இசைத் தென்றல் வீசும் கும்பகோணம், தியாகுவின் சொந்த ஊர்.

கோமளவல்லி - சுப்பையா ஆகியோரது மகனும், பத்மஸ்ரீ சங்கீதகலாநிதி இசைப்பேரறிஞர் பிடில் இராசமாணிக்கம் பிள்ளை பேரனும் ஆவார், தியாகு என்கிற தியாகராஜன்.

2-5-1958 அன்று பிறந்த இவரது நகைச்சுவை கலந்த நடிப்பு வீச்சு மெச்சும்படி இருக்கும்.

இவர் நடித்துச் சாதனை புரிந்த படங்கள் 150-க்கும் மேல்.

இதில், 'பாலைவனச் சோலை', 'கல்யாண காலம்', 'கிழக்கு வாசல்', 'மாநகரக் காவல்', 'மக்கள் ஆட்சி', 'அரசியல்', 'ஏழை ஜாதி', 'சிறையில் பூத்த சின்னமலர்', 'வனஜா கிரிஜா', 'என் புருஷன் தான் எனக்கு மட்டும்தான்', 'பொங்கலோ பொலங்கல்', 'ராஜகுமாரன்', 'பணக்காரன்', கலைஞரின் 'பாலைவன ரோஜாக்கள்', 'வீரன் வேலுத்தம்பி', ஆகியவை இவருக்குப் பெயர் வாங்கித் தந்தப் படங்களாகும்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தியாகு அவர்களுக்கு திரைப்பட நகைச்சுவை நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்பட குணச்சித்திர நடிகர்

திரு. மணிவண்ணன்

கலை கலைக்காகவே என்றில்லாமல் - கலை மக்களுக்காக - அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக என்ற கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர், இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன்.

இயக்குநராகத் திரையுலகில் நுழைந்து, அதில் அமோக வெற்றி கண்டவர், நடிப்பும் எனக்கு வரும் என்பதைத் தொட்டுக்காட்ட வேடமிட்டவர், இன்று அதை விட்டு விட்டு இயக்குனர் துறைக்கு வர இயலவில்லை.

புரட்சிகரமான கருத்துகளை, பகுத்தறிவுக் கொள்கைகளை, படங்களை இயக்கிடும் போதும் நடிக்கும் போதும் அழுத்தமாக விதைக்க வேண்டும் என்பதில் கட்டுப்பாட்டுடன் செயல்படும் சிறந்த மனிதர்.

வெளிவரும் படங்கள் அனைத்திலும் ஒளிவிடும் நடிகராக மக்கள் மனதை தன்வசப் படுத்தியிருக்கிறார்.

இயக்குநர் பாரதிராஜாவிடம் நிண்ட நாள் பணியாற்றிய மணிவண்ணன், 1980-ஆம் ஆண்டு 'கல்லுக்குள் ஈரம்' என்ற படத்திற்கு உதவி இயக்குநராகப் பணிபுரிந்தார்.

இவர் இயக்கத்தில் முதலில் வெளிவந்து வெற்றி வாசலைத் தொட்ட படம் 'கோபுரங்கள் சாய்வதில்லை'. இவர் கதை வசனம் எழுதிய படம் 'நிழல்கள்', 'அலைகள் ஓய்வதில்லை' ஆகியவை.

31-12-97-வரை இவர் நடித்து வெளிவந்த படங்களின் எண்ணிக்கை 55. அலைகள் ஓய்வதில்லை படத்திற்கு சிறப்பான முறையில் கதை வசனம் எழுதியதற்காக தமிழக அரசின் விருதினைப் பெற்றுள்ளார்.

கோவை மாவட்டம் சூலூர் கிராமத்தில் பிறந்த இவரது தந்தையின் பெயர் மணியம் - தாயார் மரகதம்மாள். இவரது துணைவியாரின் பெயர் ஜோதி.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மணிவண்ணன் அவர்களுக்கு திரைப்பட குணச்சித்திர நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்படக் குணச்சித்திர நடிகர்

திரு. நாசர்

பதிமூன்றே ஆண்டுகளில் நூற்றி நாற்பத்தேழு திரைப்படங்களில் நடித்து, திரைப்பட உலகில் வரலாறு படைத்தவர்! திரைப்படத் துறைக்கு வருகை தந்தபோது, புகழார்ந்த இயக்குநர் கே. பாலச்சந்தரின் 'கல்யாண அகதிகள்' என்னும் திரைக் கவிதையை 1985-ஆம் ஆண்டு தோரண வாயிலாகப் பெற்றுக் கொண்டவர்! தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய ஐந்து மொழிப் படங்களிலும் நடித்து மகத்தான பாராட்டுகளைப் பெற்றவர்!

''சாந்தி'' தெலுங்குத் திரைப்படத்தில், திறன்மிக்க துணை நடிகராகப் பங்காற்றி, ஆந்திர மாநில அரசின் 'நந்தி' விருதினை 1991-ஆம் ஆண்டில் பெற்ற நடிப்புக் கலைஞர் நாசர். ''ஆவரம்பூ'' தமிழ்த் திரைப்படத்தில் மிகச் சிறப்பாக நடித்ததற்காகத் தமிழக அரசின் தலைசிறந்த விருதினை 1992-ஆம் ஆண்டு பெற்றார்.

மணிரத்தினம் இயக்கிய ''நாயகன்'', ''ரோஜா'', ''பம்பாய்'', பரதன் இயக்கிய ''ஆவாரம்பூ'', ''தேவர் மகன்'', சங்கீதம் சீனிவாசராவ் இயக்கிய ''மகளிர் மட்டும்'', செல்வா இயக்கிய ''தலைவாசல்'', சுகாசினி மணிரத்தினம் இயக்கிய ''இந்திரா'' ஆகிய திரைக் காவியங்கள், நாசரை நடிப்புக் கலையின் நாயகராக்கி, புகழின் உச்சிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தன! நடிப்புக் கலையின் ஆணி வேரை அறிந்துகொண்ட அபூர்வக் கலைஞராக அடையாளம் காட்டின!.

சென்னை, அடையாறு திரைப்படப் பயிற்சி நிறுவனத்தில், 1982-83-ல் பயின்று பயிற்சி பெற்ற நடிப்புக் கலைஞர் நாசர், 1958-ஆம் ஆண்டு பிறந்தவர். நாற்பது வயதில் நடமாடும் நாசர், திரைத்துறையின் குறுநில மன்னரான தொலைக்காட்சிப் படைப்புகளிலும் பங்காற்றி வெற்றிக் கொடி நாட்டியவர். ''நீலா மாலா'', ''சித்திரப்பாவை'', ''வண்ண வீதி'', ''அவளுக்கென்று ஒரு இடம்'' ஆகிய சின்னத்திரை வண்ணப் படங்களில் நடித்து, கோடிக் கணக்கான ரசிகர்களின் நெஞ்சுள் நாசர் குடியிருக்கும் பேறுபெற்றவர்!

அண்மையில் இயக்குநர் பொறுப்பேற்ற நாசர் ''அவதாரம்'', ''தேவதை'' ஆகிய இரு படங்களை இயக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாசர் அவர்களுக்கு திரைப்பட குணச்சித்திர நடிகருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும் திரைப்படக் குணச்சித்திர நடிகர்

திரு. ரகுவரன்

தமிழக அரசின் திரைப்படக் கல்லூரி தமிழ்த் திரைக்கு வழங்கிய குணச்சித்திர நடிகர் ரகுவரன்.

11-12-1959-ல் கோவையில் பிறந்த இவர் ஓர் இளங்கலைப் பட்டதாரி.

'ஏழாவது மனிதன்' என்னும் திரைப் படத்தின் மூலம் அறிமுகமாகி, இதுவரை 85 படங்களுக்குமேல் நடித்து ஒவ்வொரு படத்திலும் தனது தனித்தன்மையைப் பதித்திருக்கிறார்.

தமிழ் மொழிப் படங்களில் மாத்திரம் அல்லாது, தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி மொழிப் படங்களிலும் நடித்திருக்கிறார்.

ஏற்கனவே, சிறந்த துண நடிகர், சிறந்த வில்லன் நடிகருக்கான விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

இவரது முதற்படமே தாஷ்கண்ட விழாவில் திரையிடப்பட்டு இவருக்கு சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்தியது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் திரு. ரகுவரன் அவர்களுக்கு சிறந்த குணச்சித்திர நடிகருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
திரைப்பட எழுத்தாளர்

திரு. எம்.டி. சுந்தர்

மாணவப் பருவத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த எம்.டி. சுந்தர், பேரறிஞர் அண்ணாவைத் தனது பேரன்புக்குரிய வழிபாட்டு நாயகராகவே பெரிதும் போற்றி வந்தார். பேரறிஞர் அண்ணாவின் உரை ஆற்றலும், எழுத்தாற்றலும் சுந்தரை வெகுவாகக் கவர்ந்தன. அண்ணாவின் பேச்சு, எழுத்து என்றால், சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பயின்று கொண்டிருந்த மாணவர் சுந்தருக்கு, இதய சுகமளிக்கும் ஈடு இணையற்ற, தேனினும் இனிய பலாச் சுளைகள்!

கவியரசர் கண்ணதாசனின் ‘தென்றல்’, என்.வி. நடராசனின் ‘திராவிடன்’ இதழ்களில் ‘அண்ணா அன்பன்’ என்னும் புனைப்பெயரில் அரசியல் கட்டுரைகளை எம்.டி. சுந்தர் எழுதியமைக்கு ஊற்றுக் கண்களாக நின்றன, பேரறிஞர் அண்ணாவின் பேச்சும், எழுத்தும்! ‘தாயகக் குரல்’ என்னும் இதழைத் தொடங்கி, தாமே பதிப்பாளராகவும், ஆசிரியராகவும் அமைந்து பணியாற்றிய காலத்தை இவர் நினைந்து மகிழ்கிறார்.

முதன் முதலில் தெலுங்கு மொழித் திரைப்படங்களுக்குக் கதை, திரைக்கதை உருவாக்கும் பாணியைப் பெற்ற சுந்தர், கன்னடம், இந்தி மொழிப் படங்களுக்கு எழுதும் வெற்றிகரமான கதாசிரியராக விளங்கினார். கலைஞர் திரைக்கதை, உரையாடல் எழுதிய ‘ஆடுபாம்பே!’ என்னும் திரைப்படத்தின் மூலக்கதையைப் படைத்தவர் எம்.டி. சுந்தரே!.

திரைப்படத் துறைப் படைப்பாளர் எம்.டி. சுந்தர், 1938-ஆம் ஆண்டு பிறந்தவர். அறுபது வயதை எட்டிப் பிடிக்க உள்ள இப் பெருமகனார், இதுவரை 149 திரைப்படங்களுக்கு கதை, திரைக்கதை எழுதிச் சரித்திரம் படைத்த சாதனையாளர் ஆவார்!

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எம்.டி. சுந்தர் அவர்களுக்கு திரைப்படக் கதாசிரியருக்கான ‘கலைமாமணி’ விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்பட வசனகர்த்தா

திரு. விசு

'விசு' எனப் புகழும், பிரபலமுமான எம்.ஆர். விசுவநாதன், நாடகத் துறைக்கு ஊட்டமளித்துத் திரைப்படத் துறையைச் செழுமைப்படுத்திய திறமிக்க இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் ஆவார்.

இருபதுக்கும் மேற்பட்ட நாடகங்களைப் படைத்து, இயக்கி, நடித்து ஏறத்தாழ மூவாயிரத்துக்கும் அதிகமான அளவில் நாடகங்களை நடத்திய கலைஞர் விசு, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் அமைச்சூர் நாடக ஆசிரியராக, இயக்குநராக, நடிகராகத் திகழ்ந்து பெரும் புகழ் பெற்றார். 'விசு'வின் நாடகங்கள் அமெரிக்க நாட்டிலும் நடந்துள்ளன.

நாடகத் துறையில் புகழீட்டிப் போற்றப் பெற்ற இவர், திரைப்படத் துறைக்குத் திறமிக்கத் தமது படைப்புகளால் உரமளித்தவர் உயர்வை ஈட்டியவர்! ஏறத்தாழ முப்பது திரைப்படங்களை உருவாக்கி, இயக்கி, நடித்து, பன்னிரண்டு படங்களை வெற்றியாக்கி புகழ் பெற்றார்.

'விசு'வின் ''சம்சாரம் அது மின்சாரம்'' தமிழின் திரைப்படத் துறையில் தன்னேரிலாத தனித்தன்மையுடன் 'தங்கமெடல்' பெற்று புதிய வரலாறு படைத்தது. இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப் பெறும் 'தங்கமெடல்' சிறப்பை, முதன் முதலாகப் பெற்ற இந்தத் தமிழ்ப் படத்தை, பெருமைக்குரிய ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்து வெளியிட்டது.

படைப்புத் திறத்திற்கும், இயக்கும் மேன்மைக்கும், நடிப்புச் சிறப்பிற்கும் 'விசு' பெற்றுள்ள விருதுகள், பரிசுகள் ஏராளம்! தமிழ்நாடு அரசு, திரைப்பட ரசிகர் மன்றங்கள் இக் கலைஞருக்கு வழங்கியுள்ள பாராட்டுகள், பரிசுகள் எண்ணற்றவை!

தெலுங்கு மொழித் திரைப்படத் துறையிலும் படைப்பாளராக, இயக்குநராக, நடிகராகக் கீர்த்தி பெற்றுள்ள 'விசு' என்னும் எம்.ஆர். விசுவநாதன், மூன்றே படங்களை தெலுங்கில் உருவாக்கி வெளியிட்டிருப்பினும், ஆந்திர மாநில அரசாங்கத்தின் பெருமைக்குரிய 'நந்தி' விருதினைப் பெற்றார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் விசு அவர்களுக்கு திரைப்பட வசனகர்த்தாவுக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
திரைப்பட வசனகர்த்தா

திரு. எம். இரத்தினகுமார்

ஆயிரக் கணக்கான தேனீக்கள் கூட்டு சேர்ந்து அமைப்பதுதான் தேன்கூடு. அந்த உழைப்பில் கிடைப்பதுதான் சுவைமிக்க தேன். இதேபோன்று நூற்றுக் கணக்கானோரின் கலை நயம் சொட்டும் உழைப்பில் உருவாவதுதான் ஒரு திரைப்படம். அந்த வகையில் வசனச் சிறப்பும் ஒரு பகுதி.

மதுரை மாவட்டம், பண்ணப்புரத்திலிருந்து வந்தவர் எம். இரத்தினகுமார். இவரது வசனச் சிறப்பில் குறிப்பிடத்தக்க படங்கள் வெளிவந்துள்ளன.

பாரதிராஜா இயக்கத்தில் உருவான ‘கிழக்குச் சீமையிலே’, ‘கருத்தம்மா’, ‘தமிழ்ச் செல்வன்’ ஆகிய மூன்று படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார். இதில் கிழக்குச்சீமையிலே, கருத்தம்மாவும் தேசிய விருது பெற்றவை. சேனாதிபதி என்ற திரைப்படத்தை இயக்கி உள்ளார்.

24-1-1959-ல் பிறந்த இவரது தந்தையின் பெயர் மகராசன். தாயார் பேச்சியம்மாள். கல்வித் தகுதி எம்.எஸ்ஸி., எம்.பில்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் திரு.எம். இரத்தினகுமார் அவர்களுக்கு திரைப்பட வசனகர்த்தாவுக்கான ‘கலைமாமணி’ விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும் திரைப்படப் பாடலாசிரியர்

கவிஞர் பழநிபாரதி

புகழொடு தோன்றிய கவிஞர் பழநிபாரதி பிறந்த மண், கவியரசர் கண்ணதாசன் கண்விழித்த காரைக்குடி. செட்டிநாட்டிலிருந்து திரையுலகிற்குக் கிடைத்த இரண்டாவது கவிஞர் இவர். இளந்தளிர். வயது-32. ''கவிஞர் பழநிபாரதி வருங்காலத்தில் ஒரு மாபெரும் கவிஞனாக வருவான்'' என்று உவமைக் கவிஞர் சுரதா அவர்களால் பதினான்கு வயதிலேயே பாராட்டப் பெற்றவர்.

பதினெட்டு வயதிலேயே இவர் எழுதி வெளியான நூல்கள், 'நெருப்புப் பார்வைகள்', 'வெளிநடப்பு' ஆகியவையாகும்.

கவிஞர் பழநிபாரதி, கம்பன் வீட்டுக் கட்டுத்தறி. இவரது தந்தை மரபுக் கவிஞர் சாமி பழநியப்பன், பாவேந்தர் பரம்பரைக் கவிஞர்களில் ஒருவர். இந்தித் திணிப்புப் போராட்டத்தில் பங்கேற்ற இனிய தமிழ்ப்பற்றாளர். முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களிடம் பாவேந்தர் விருதுபெற்ற பண்பாளர். இத்தனை சிறப்புகளுக்கும் உரியவரைத் தந்தையாகப் பெற்றவர் பழநிபாரதி.

மேல்நிலைப் பள்ளிப் படிப்போடு கல்வியை நிறுத்திக்கொண்ட பழநிபாரதி, 'தாய்', 'போர்வாள்', 'நீரோட்டம்' ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். நூற்றுக்கும்மேற்பட்ட கவியரங்குகளில் கலந்துகொண்டு கவிதைக்கனி வழங்கியுள்ளார்.

1990-ஆம் ஆண்டு 'பெரும்புள்ளி' படத்தின் மூலம் இயக்குநர் விக்ரமன் பழநிபாரதியை பாடலாசிரியராக அறிமுகம் செய்தார். முதல் பாடல் படத்தில் வெளிவரவில்லை. பின்னர் இயக்குநர் சுந்தரின் 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தின் மூலம் மக்கள் மனதில் இடம் பிடித்த பழநிபாரதி இதுவரை எண்ணற்ற பாடல்கள் எழுதியுள்ளார்.

1996-ஆம் ஆண்டு சிறந்த பாடலாசிரியராக 'சினிமா எக்ஸ்பிரஸ்' விருதையும், 'காதலுக்கு மரியாதை' படத்தில் பாராட்டுக்குரிய பாடல் எழுதியதற்காக தயாரிப்பாளர் சங்கிலி முருகனால் 'இளங்கவி' என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவரது தாயாரின் பெயர் திருமதி. கமலா. இவருக்கு சிறந்த திரைப்படப் பாடலாசிரியருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
திரைப்பட இசை அமைப்பாளர்

திரு. சித்தார்த்தா

திரைப்பட இசையமைப்பாளர் சித்தார்த்தா பசுமை குலுங்கும் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையைச் சார்ந்தவர். 1949-ஆம் ஆண்டு மன்னார்குடியில் ஆகஸ்ட் 5-ஆம் தேதி பிறந்தவர்.

இவர் இசைத் துறையில் காலடி வைப்பதற்கு தாய் லெட்சுமியும், தந்தை சுப்பிரமணியமும் ஊக்கப்பால் ஊட்டி உற்சாகப்படுத்தினர்.

சித்தார்த்தாவின் தந்தை புலவர் கா.சு. மணியம் என்று தங்சை மாவட்ட மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற க. சுப்பிரமணியம், கரந்தை தமிழ்ச் சங்கத்தில் படித்தவர். பகுத்தறிவுப் பிரச்சாரங்களையும் சீர்திருத்தத் திருமணங்களையும் ஏராளமாக நடத்தியவர். தந்தையின் தமிழ்ப் புலமையை ஊக்க மருந்தாக எடுத்துக்கொண்டு இசையுலகில் பிரவேசித்தார் சித்தார்த்தா.

மயிலை மாஸ்டர் தனராஜிடம் கர்நாடக, மற்றும் மேற்கத்திய இசையைக் கற்றார். லண்டன் டிரினிட்டி காலேஜ் ஆப் மீயுசிக் நடத்தும் தேர்வுகளில் பங்கேற்று தேர்வு பெற்றார்.

இயக்குநர் ஆபாவாணனின் ‘காவியத் தலைவன்’, மனோபாலாவின் ‘முற்றுகை’ ஆகிய படங்களுக்கும், மற்றும் ‘வள்ளி வரப்போறா’, ‘ராஜாளி’ படங்களுக்கும் இசையமைத்துள்ளார்.

தொலைக்காட்சி சின்னத்திரையில் ‘நிலவைத் தேடி’, ‘ஆளவந்தார் கொலைவழக்கு’, ‘சங்கமம்’, ‘வசந்தம் காலனி’, ‘மண்ணின் மைந்தர்கள்’, ‘சுருதிலயம்’, ‘தெய்வீகத் திருமணங்கள்’, ‘புனிதபூமி’, ‘விடிவதற்குள்’, ‘தர்மயுத்தம்’, ‘ஊர்த் தவளைகள்’, ‘துப்பறியும் சோழன்’, ‘மனசு’, ‘பொம்மைகள்’, ‘பட்டர்பிளைஸ்’ போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சித்தார்த்தா அவர்களுக்கு திரைப்பட இசையமைப் பாளருக்கான ‘கலைமாமணி’ விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
பின்னணிப் பாடற் கலைஞர்

திரு.பி. ஜெயச்சந்திரன்

எர்ணாகுளத்தைச் சேர்ந்த ரவிவர்மா தம்புரான் - சுபத்ரா குஞ்சம்மா தம்பதியருக்குப் பிறந்தவர், ஜெயச்சந்திரன்.

1965-முதல் திரையில் தன் தேன்குரலால் பின்னணி பாட ஆரம்பித்தவர், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என அனைத்து தென்னிந்திய மொழிகளிலும் இதுவரை 5000 பாடல்கள் வரை பாடியுள்ளார்.

கேரள மாநிலத்தின் அரசு விருது இதுவரை இரண்டு முறை பெற்றுள்ளார். 1985-ல் தேசிய விருதும் பெற்றுள்ளார். 1993-ல் தமிழக அரசும் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. இரு மலையாளத் திரைப்படங்களில் நடித்த அனுபவமும் உண்டு.

திரு.பி. ஜெயச்சந்திரன் அவர்களது இசைச் சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்படப் பின்னணிப் பாடகி

திருமதி. ஜமுனா ராணி

இனிமையான குரல் வளம் படைத்த ஜமுனா ராணி, மூன்று தலைமுறையைக் கடந்து, இன்றும் மேடையில் பாடி ரசிகர்களின் கையொலிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். இவர் அறுபது வயதினைக் கடந்து நின்றாலும் இருபது வயது இளமைக் குரல்.

குழந்தைப் பருவத்தில் - நான்கு வயதிலேயே பாடத் துவங்கினார். இவருடைய சங்கீத ஆர்வத்திற்கு சகல வழிகளிலும் உதவி செய்து, இசை கற்றுக்கொடுத்தவர் இவரைப் பெற்றெடுத்த தாயார் திரௌபதி அம்மையார். அவரும் ஒரு வீணைக் கலைஞர்.

திரையில் இவர் குரல் முதலில் ஒலித்தது, 'தியாகய்யா' படத்திற்காக, 'மதுரா நகரிலே' என்ற பாடல். பாடிய ஆண்டு 1945.

1951-ஆம் ஆண்டு நாகேஸ்வரராவ் - சாவித்ரி நடித்த .தேவதாஸ். என்ற படம் வெளியாகி வெற்றியுடன் ஓடியது. அந்தப் படத்தில் ஜமுனாராணி பாடிய 'ஓ...தேவதாஸ்' என்ற பாடல் ரசிகர்களைக் கவர்ந்தது. அந்தக் காலத்தில் வானொலிப் பெட்டிகளில் பட்டிதொட்டி எங்கும் ஒலித்த பாடல் இதுதான்.

1952-ஆம் ஆண்டு, மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த 'வளையாபதி', என்ற படத்தில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 'குளிர்தாமரை மலர்ப்பொய்கை' என்ற பாடல் ஜமுனாராணி குரலில் ஒலித்து மக்களைக் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ முப்பது படங்களுக்குமேல் பாடியுள்ள இவர், மாடர்ன் தியேட்டர்சுடன் இணைந்து இலங்கை தயாரித்த 25 சிங்களப் படங்களிலும் பின்னணி பாடியுள்ளார். இதனால் சிங்கள ரசிகர்கள் இன்றும் இவரை பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு இலங்கைக்கு விரும்பி அழைக்கிறார்கள்.

அமெரிக்கா, லண்டன், பாரிஸ், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளுக்கும் சென்று பாடி புகழ்பெற்ற பெருமையும் இவருக்கு உண்டு.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஜமுனாராணி அவர்களுக்கு திரைப்படப் பின்னணிப் பாடகிக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
திரைப்பட ஒளிப்பதிவுக் கலைஞர்

திரு. பி.சி. ஸ்ரீராம்

காமிராவால் கவிதை பாடும் திரு.பி.சி. ஸ்ரீராம் அவர்கள், 1951-ம் ஆண்டு பிறந்தவர். சென்னை திரைப்படக் கல்லூரியில் டிப்ளமோ பட்டம் பெற்றவர்.

'நாயகன்' திரைப் படத்திற்கு தேசிய விருதும், 'கீதாஞ்சலி' தெலுங்குப் படத்திற்கு ஆந்திர மாநிலத்தின் 'நந்தி' விருதும் பெற்றவர்.

'பூவே பூச்சூடவா', 'மீண்டும் ஒரு காதல்கதை', 'மௌனராகம்' ஆகிய திரைப்படங்களில் திறமையாகப் பணியாற்றியவர். 'அக்னி நட்சத்திரம்' திரைப்படத்திற்கு 'பிலிம் பேரின்' விருதும் 'சினிமா எக்ஸ்பிரஸ்' விருதும் பெற்றவர். 'கோபுர வாசலிலே', 'திருடா திருடா', 'அபூர்வ சகோதரர்கள்', 'சுப சங்கல்பம்' (தெலுங்கு) ஆகிய திரைப்படங்கள் இவரது திறமையை மேலும் எடுத்துக் காட்டுவனவாக அமைந்தவை ஆகும்.

'மீரா', 'துரோகி', 'குருதிப் புனல்', படங்கள் மூலம் இவரது திரைப்படத்தை இயக்கும் திறமையும் வெளிவந்தது. திரு.பி.சி. ஸ்ரீராம் அவர்களின் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்பட அரங்க அமைப்பாளர்

திரு. தோட்டா தரணி

1949-ஆம் ஆண்டு பிறந்தவர், இந்தத் திரைக்கலை இயக்குநர்.

சென்னை, அரசு கலைக் கல்லூரியில் முதுகலை டிப்ளமா பட்டம் பெற்றவர். இந்தியா, ஜப்பான் மற்றும் பாரிஸில் தொழில்முறைப் பயிற்சி பெற்றவர். லலித்கலா அகாடமியின் விருதும், மைசூர் தசரா பொருட்காட்சியில் மூன்று முறை வனவிலங்கு வரைபடப் போட்டியில் முதல் பரிசும் பெற்றவர்.

பிரான்சு, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், கோவை நகரங்களில் தனியாகவும், பிரான்சு, ஜப்பான், ஸ்பெயின், ஆஸ்திரியா, யூகோஸ்லாவியா, ஜெர்மனி மற்றும் இந்தியாவில் பிறருடன் இணைந்தும் ஓவியக் கண்காட்சி நடத்தி உள்ளார்.

தனது தந்தை ஸ்ரீ தோட்டா வெங்கடேஸ்வர ராவ் அவர்களுடன் 'இதயக் கமலம்' போன்ற திரைப்படங்களில் உதவியாளராக இருந்து, தனது பணியைத் தொடங்கிய இவர், 'ராஜபார்வை', 'மௌனராகம்', 'நாயகன்', 'அக்னி நட்சத்திரம்', 'சத்யா', 'காதல் தேசம்', 'இந்தியன்', உள்ளிட்ட பல தமிழ்த் திரைப்படங்களிலும், பல தெலுங்கு, மலையாளம், கன்னடத் திரைப்படங்களிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளார்.

திரைப்படத்துறையில் இவர் பணியைப் பாராட்டி தமிழக, ஆந்திர கேரள விருதுகள் அளிக்கப்பட்டுள்ளன. 'நாயகன்' திரைப்படத்திற்கு தேசிய விருதும் பெற்றுள்ளார்.

திரு. தோட்டா தரணி அவர்களது கலைச்சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்பட; புகைப்படக் கலைஞர்

திரு. யோகா

'கேமிரா கவிதை பாடும்' என்பார்கள். புகைப்படத்தை கலை நயத்தோடும், மனதை ஈர்க்கும் வகையிலும், விழிகள் வியக்கும் அளவிலும் எடுக்கப்படும் வித்தையில் கைதேர்ந்தவர் யோகா.

''நல்ல புகைப் படங்களை நீங்கள் பத்திரிகைகளின் அட்டையில் பார்க்கிறீர்கள் என்றால், பெரும்பாலும் அவைகள் யோகா எடுத்த படமாகத்தான் இருக்கும்'' இவ்வாறு மனம் திறந்து பாராட்டியுள்ளார் இயக்குநர் சிகரம், கே. பாலச்சந்தர்.

''நல்ல மனிதனுக்கு அவர் இதயமும் படம் எடுக்கத் தெரிய வேண்டும். யோகாவின் இதயத்திற்கு நன்றாகப் படம் எடுக்கத் தெரியும்'' இப்படி இதயம் திறந்து பாராட்டியிருப்பவர், இயக்குநர் பாரதிராஜா.

''நான் அங்கீகரித்த என் படம் ஒன்று உண்டு என்றால் அது யோகா எடுத்த படம்தான். காரணம், அதில் என்னைவிட நான் அழகாக இருப்பேன்'' - இத்தகைய வைரவரிப் பாராட்டுகளை வழங்கியிருப்பவர், கவியரசு வைரமுத்து.

கலையுலகப் பெரியவர்களின் வாழ்த்துக்கள் வான்மழையாய்ப் பொழிந்து யோகா மனம் குளிரும் வண்ணம் நனைத்திருக்கின்றன.

தமிழக அரசு அங்கீகரித்து, அரசு தற்போது பயன்படுத்தி வரும் முதல்வர் கலைஞரின் புகைப்படம் புகைப்படக் கலைஞர் யோகா எடுத்ததுதான்.

1968-ஆம் ஆண்டு முதல் புகைப்படம் எடுக்கத் தொடங்கிய யோகா இதுவரை 10,000 புகைப்படங்களுக்குமேல் எடுத்துள்ளார்.

கலைஞர் அவர்களின் 'நெஞ்சுக்கு நீதி', 'தென்பாண்டிச் சிங்கம்', 'குறளோவியம்' ஆகிய நூல்களின் அட்டையை அலங்கரிக்கும் படங்கள் யோகாவின் கைவண்ணத்தில் வந்ததுதான்.

திரு. யோகா அவர்களது கலைச் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும் திரைப்பட வளர்ச்சிப் பணிக் கலைஞர்

எஸ்.எம். உமர்

காரைக்காலில், 1925-ஆம் ஆண்டு, முகம்மது இப்ராகிம் மரைக்காயர், பாத்திமா சுல்த்தான் ஆகிய தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் எஸ்.எம். உமர்.

1952-ஆம் ஆண்டு வியட்நாம் நாட்டுக்குச் சென்றார். அங்கு இருபத்தைந்து ஆண்டு காலம் வாழ்ந்து, தமிழ் மொழித் திரைப்படங்களை வியட்நாம் மொழியில் குரல் பதிவு செய்து (டப்பிங்) திரை அரங்குகளில் வெளியிட்டார்.

'யார் பையன்', 'இதயகீதம்', 'மணாளனே மங்கையின் பாக்கியம்', 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி', 'அனார்கலி'. 'லைலாமஜ்னு', 'சக்ரவர்த்தித் திருமகன்', 'மங்கையர்க்கரசி', 'பாகப்பிரிவினை', 'மங்கையர் திலகம்' - இன்னும் ஏராளமான தமிழ்த் திரைப்படங்களை வியட்நாம் மொழியில் மாற்றி வியாபார உலகில் சாதனை புரிந்துள்ளார்.

லாவோஸ், கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் திரைப்படத் தொடர்பு உண்டு.

எஸ்.எம். உமர் சிறுவயதிலேயே 'பவளக்கொடி', 'இழந்த காதல்', 'விதவையின் கண்ணீர்' ஆகிய நாடங்களில் நடித்துள்ளார். இவரே தமிழில் நாடகங்களை எழுதி வியட்நாமில் அரங்கேற்றி அங்குள்ள தமிழர்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளார்.

சென்னைக்குத் திரும்பியதும் திரைப்படத் துறையில் நுழைந்தார். 'ஜெனோவா', 'லைலாமஜ்னு', 'அமரகவி' ஆகிய படங்களுக்குத் துணை இயக்குநராகப் பணிபுரிந்துள்ளார். இவரது கலைச்சேவையைப் பாராட்டி இவருக்கு 'கலைச் செல்வர்' என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

எஸ்.எம். உமர் திரைப்படத்துறையில் இருந்தாலும், பத்திரிகைத் துறையில் அதிக நாட்டம் உள்ளவர். 'இளம்பிறை' எனும் இலக்கிய இதழை சிறப்பாக நடத்தியுள்ளார்.

திரு. எஸ்.எம். உமர் அவர்களது கலைச்சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்படப் பத்திரிகை ஆசிரியர்

திரு. வி. இராமமூர்த்தி

திரைப்பட நடிகர்களுக்கு அரசு வழங்கும் விருதுகள் போன்று, 'சினிமா எக்ஸ்பிரஸ்' பத்திரிகையும் ஆண்டுதோறும் சிறந்த நடிகர், நடிகைகளுக்கு விருது வழங்கிப் பெருமைப்படுத்தி வருகிறது. அந்தப் பத்திரிகையின் சிறப்புமிகு ஆசிரியராகக் கடந்த பதினெட்டு ஆண்டு காலமாகப் பணியாற்றி வருகிறார் வி. இராமமூர்த்தி.

இவர் சுமார் முப்பது ஆண்டுகளாகப் பத்திரிகைத் துறையில் திறம்படப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

திரைப்படம் சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கான கட்டுரைகளும், திரைத்துறை சம்பந்தமான ஏராளமான நூல்களும் எழுதியுள்ளார்.

அடக்கம், எளிமை, ஆரவாரமற்ற செயல்பாடு, பழகும் பண்பு இவைகளினால் திரையுலகில் மரியாதைக்குரிய பத்திரிகையாளராகத் திகழ்ந்து வருகிறார். 'சிறந்த பத்திரிகையாளர் விருதை' பலமுறை பல நிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ளார்.

தமிழக அரசு நியமித்துள்ள சிறந்த படங்கள், சிறந்த சினிமாக் கலைஞர்களைத் தேர்வு செய்யும் குழுவில் ஒரு உறுப்பினராகவும் இருந்து வரும் இவருடைய சொந்த ஊர் கும்பகோணம்.

திரு. வி. இராமமூர்த்தி அவர்களது கலைச்சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்பட ஆய்வாளர்

டாக்டர் மேக்னெட் ஏ. ராஜாராம் டி.லிட். (யு.எஸ்.ஏ.)

பல்கலை வித்தகராக விளங்கும் டாக்டர் மேக்னெட் ஏ. ராஜாராம் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக திரையுலக வாழ்க்கையில் தன்னை இணைத்துக் கொண்டு, ஆடம்பரமின்றி, இன்றும் கலைநோக்குச் சிந்தனையுடைய ஆய்வாளராக மிளிர்ந்து கொண்டிருப்பவர்.

இளம் வயதில் இவர் குருகுலவாசம் பயின்ற இடம் இயக்குநர் கே. சுப்பிரமணியம் கம்பெனி என்பதால் அந்த முத்திரை இவர் முகம் காட்டும் இடமெல்லாம் பளிச்சிடுகிறது.

திரையுலகில் மூன்று தலைமுறையோடும் தொடர்புள்ள மேக்னெட் இவர். நேற்றுவரை எம்.ஜி.ஆர்., சிவாஜி என்றும், இன்று ரஜினி, கமல் என்றும் ரசிகர்கள் மத்தியில் பேசப்படுவது போன்று, 1947-ஆம் ஆண்டுகளில் பி.யூ. சின்னப்பா, தியாகராஜ பாகவதர் என்று திரையுலகில் கொடிகட்டிப் பறந்த கலையுலக மேதைகளோடு இணைந்து பழகிடும் வாய்ப்புப் பெற்றவர். பி.யூ. சின்னப்பா நடித்த 'அர்த்தநாரி' படத்தில் பால சின்னப்பா வேடம் ஏற்றவர்.

நடிகர், பத்திரிகையாளர் என்ற முகத்தோடு, படத் தயாரிப்பாளராகவும் ஐந்து படங்கள் எடுத்து வெளியிட்டுள்ளார். அதில் 'கதவைத் தட்டிய மோகினிப்பேய்' என்ற படம் மக்களின் ஆதரவும் பாராட்டும் பெற்ற படம்.

இன்று திரையுலகப் பாட்டுச் சக்கரவர்த்தியாகத் திகழும் கவிஞர் வாலி அவர்களின் புகழ்மிகு வரலாற்றில் இவர் பங்கும் உண்டு.

சினிமா உலகில் ஊமைப்பட காலம் முதல் கலைஞரின் மனோகரா படம்வரை ஆய்வு செய்து அமெரிக்க வட்டமேஜை பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

'புரட்சிவீரன் பூலித்தேவன்' வரலாற்றினை 1963-ல் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டதை வாழ்வின் பெரும் பேறாகக் கருதுகிறார்.

மேக்னெட் ஏ. ராஜாராம் அவர்களின் தாயார் பெயர் அலர்மேலு அம்மாள்; தந்தையார் அம்பி ஆனந்தசாமி.

திரு. மேக்னெட் ஏ. ராஜாராம் அவர்களது கலைச்சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும் வில்லுப்பாட்டுக் கலைஞர்

திருமதி. சிவகாசி பி. காந்திமதி

அமரர் காருக்குறிச்சி அருணாசலம் அவர்களிடம் தவில் வாசித்து வந்த கோவில்பட்டியைச் சேர்ந்த பட்றயப் பிள்ளை அவர்களுக்கும், முத்தம்மாளுக்கும் மகளாகப் பிறந்தவர், காந்திமதி.

'வில்லிசை வேந்தர்' சாத்தூர் பிச்சைக்குட்டி அவர்களது சீடர் திரு.எஸ். ஐயப்பன் அவர்களிடம் வில்லிசை பயின்றவர். பத்து வயது சிறுமியாக இருக்கும்போதே வில்லிசை நிகழ்ச்சியில் பங்கேற்றவர். இருபது வயதிலேயே தனியாக ஒரு வில்லிசைக் குழுவை அமைத்துப் பாட ஆரம்பித்தார்.

1976-ல் திருச்சி வானொலி நிலையத்தாரால் தேர்வு பெற்று, தொடர்ந்து பாடி வருகிறார். தொலைக்காட்சியிலும், டெல்லி சங்கீத அகாடமியிலும், (தஞ்சை) தென்மண்டலக் கலை மையத்தின் சார்பாக கர்நாடகா, கேரளா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் வில்லிசை பாடிவரும் பி. காந்திமதி அவர்களின் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மகிழ்வோடு அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
கரகாட்டக் கலைஞர்

திருமதி. எஸ்.ஆர். மாரிக்கண்ணு

புதுக்கோட்டை மாவட்டம், திருவப்பூரில் சொ. ராமன் - ராமாயி தம்பதியரின் மகளாக 1953-ல் பிறந்த மாரிக்கண்ணு தனது பத்தாவது வயதில் கரகாட்டம் பயிலத் தொடங்கினார். கரகாட்டக் கலைஞர் வே. ஆறுமுகம் இவருக்குப் பயிற்சியளித்தார்.

தென்னகப் பண்பாட்டு மையத்தின் துணையுடன், மராட்டியம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலும் தமிழகக் கிராமியக் கலை நிகழ்ச்சிகளைக் கொண்டு சென்று பெருமை சேர்த்தார்.

அரசு விழாக்கள் பலவற்றில் இவரது கரகாட்டம் பொலிவு தந்திருக்கிறது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் திருமதி.எஸ்.ஆர். மாரிக்கண்ணு அவர்களுக்கு கரகாட்டக் கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும் தேவராட்டக் கலைஞர்

திரு.மு. குமாரராமன்

முத்தாலு பொம்மு நாயக்கர், காமாட்சியம்மாள் தம்பதியருக்குப் பிறந்தவர் மு.குமாரராமன். 'தேவராட்டம்' என்னும் பாரம்பரியக் கலையை தனது முன்னோர்களைப் பார்த்தும், திரு.கோ. பால்ராமசாமி நாயக்கர், திரு.சுப. சுப்பையா ஆகியோரைக் குருவாகக் கொண்டும் கற்றவர்.

தனது எட்டு வயதிலிருந்தே .தேவராட்டம். ஆடிவரும் இவர், பதினெட்டு வயதிலிருந்து ஸ்ரீசக்கதேவி கிராமியக் கலைக்குழுவின் செயலராகவும் இருந்து வருகிறார்.

1983-ஆம் ஆண்டு முதல் தேவராட்டத்தை கிராமங்களை விட்டு வெளியேற்றி, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், 'சென்னை கூத்துப் பட்டறை', 'மெட்ராஸ் கிராப்ட் பவுண்டேஷன்' போன்ற அமைப்புகள் மூலமாக பயிற்சிப் பட்டறைகள் செய்து, புதிய கலைஞர்களை உருவாக்கி வருவது இவரது சிறந்த சேவையாகும்.

மதுரை நிஜ நாடக இயக்கத்தின் 'துர்க்கிர அவலம்', 'சாப விமோசனம்', 'புரட்சிக்கவி' போன்ற நாடகங்களில் தேவராட்ட அடவுகளைப் பயன்படுத்தி புதுமை செய்தவர். பல இலக்கிய மாநாடுகளில் பங்கேற்றவர்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தேவராட்டப் பயிற்சி கொடுத்து, புரட்சிக்கவி பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவில் அவரது பாடல்களுக்கு தேவராட்டம் நிகழ்த்தியுள்ளார்.

புது தில்லியின் சங்கீத நாடக அகாடமியில் நடைபெற்ற கிராமியக் கலைவிழாக்களிலும், தென்மண்டலக் கலாச்சார மையத்தின் மூலமும் பல இடங்களில் நிகழ்ச்சி நடத்தியுள்ளார். தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமும் தேவராட்டக் கலையைப் பரப்பிவரும் திரு.மு.குமாரராமன் அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி அவருக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
காவடி ஆட்டக் கலைஞர்

திரு.எம். பிச்சையப்பா

மதுரை மாவட்டம், ஐராவத நல்லூரைச் சேர்ந்த திரு.முத்து - பேச்சியம்மாள் தம்பதியினருக்குப் பிறந்தவர், திரு.எம். பிச்சையப்பா. திரு.வெ. முத்து, திரு.வீ.ஆ. தங்கசாமி பிள்ளை, திரு.எம்.எஸ். அங்குப் பிள்ளை ஆகியோரிடம் பத்து வருடம் பயின்று, கிராமியக் கலைகளில் தேர்ச்சி பெற்றவர். கடந்த ஐம்பது ஆண்டுகளாக கிராமியக் கலைகளையே முழுநேரத் தொழிலாகக் கொண்டவர்.

1982, 1994-ஆம் ஆண்டுகளில் தில்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழா, 1982-ல் தில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டி கலைநிகழ்ச்சி, 1995-ல் சென்னையில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டி கலைநிகழ்ச்சி, 1993 முதல் 1997 வரை தில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு கலைவிழாக்கள், 1990, 1997 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்திய கிராமியக் கலைவிழாக்கள் - உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு மற்றும் பொது விழாக்களில் பங்கேற்று பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றவர்.

தமிழ்நாடு கிராமியக் கலைஞர்கள் மூன்றாவது மாநில மாநாட்டில் 'கிராமிய கலைத்தென்றல்' என்ற விருதையும், மதுரை கிராமியக் கலைப் பயிற்சி நிலையம் 'கிராமிய நடனக் கலைமணி' விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ள திரு.எம். பிச்சையப்பா அவர்களின் கலைச்சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மகிழ்வோடு அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்

பொம்மலாட்டக் கலைஞர்

திரு.ஏ.எஸ். பாலசுப்பிரமணியம்

தஞ்சை மாவட்டம், அன்னப்பன் பேட்டையைச் சேர்ந்த சுவாமிநாதப் பிள்ளை, மீனாம்பாள் தம்பதியருக்குப் பிறந்தவர், ஏ.எஸ். பாலசுப்பிரமணியம்.

சென்னையில் கலைவளர் கழகம், வ.உ.சி. மன்றம், மற்றும் தமிழ்நாடு இராமலிங்கா மிஷன் ஆகிய தொண்டு நிறுவனங்களின் மூலம் இலக்கியப் பணியும் மற்றும் சமுதாயப் பணியும் ஆற்றி வருகிறார்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக குடந்தை கனநாதர் பாவை நாடகக் குழுவின் மூலம், மத்திய மாநில அரசுகள் சார்பிலும், தனியார் நிறுவனங்களின் சார்பிலும், பொதுத்துறை நிறுவனங்களின் சார்பிலும் தமிழ்நாடு முழுதும் பொம்மலாட்டக் கலைநிகழ்ச்சி மூலமாக கலைப்பணி ஆற்றி வருகிறார். இந்திய அரசு இசை நாடகப் பிரிவு சார்பில், தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் கேரள மாநிலங்களில் தேசிய வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தி வரும் திரு.ஏ.எஸ் பாலசுப்பிரமணியனின் கலைச் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு ‘கலைமாமணி’ விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்
இசை நாடகக் கலைஞர்

திரு.டி.பி. செல்லப்பா

திருவாதவூரில் வி. பழனிச்சாமி பிள்ளை அவர்களுக்கும், வெள்ளையம்மாளுக்கும் பிறந்தவர் திரு.டி.பி. செல்லப்பா. 1927-ல் பி. ராஜம்மாள் அவர்கள் நடத்தி வந்த மதுரை ஸ்ரீ பாலகான சபாவில் நடிகர் எதார்த்தம் பொன்னுச்சாமி பிள்ளை அவர்களால் நடிகராகச் சேர்ந்தவர். அங்கு பத்து ஆண்டுகள் பயிற்சி பெற்றவர். திரு. எதார்த்தம் பொன்னுச்சாமி பிள்ளை அவர்களையே ஆசிரியராகக் கொண்டவர்.

1936-ல் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய இசை நாடகங்களில் முப்பது ஆண்டுகள் 'ஸ்திரீபாட்' எனும் பெண் வேடமிட்டு நடித்து வந்தவர். புகழ்பெற்ற சித்திரைக்கவி ஆர்.வி. சக்திவேல் ஆச்சாரியார், உயர்திரு பாலகுருசாமிப் பிள்ளை, கலைமாமணி சிவஞான பாண்டியன் ஆகியோருடன் நடித்துப் பெயரும், புகழும் பெற்றவர்.

திரு.டி.பி. செல்லப்பா அவர்களின் இசை நாடகக் கலைத் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
இசை நாடக நடிகை

திருமதி. புதுக்கோட்டை கே.எஸ். கலா

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையைச் சேர்ந்த காட்டுநாவல் கிராமத்தில் மாரிமுத்து - ஜானகி தம்பதியருக்குப் பிறந்தவர் கே.எஸ். கலா. தனது ஆறாவது வயதிலேயே தனது தாய்மாமன் இசை நாடக ஆசிரியர் திரு. சோமராஜ் அவர்களை குருவாக ஏற்றுக் கொண்டு நாடகத்தில் நடித்தவர்.

தனது பதினைந்தாவது வயதில் நடிகவேள் திரு.எம்.ஆர். ராதா அவர்களின் நாடகக் குழுவில் சேர்ந்து நடித்தவர். தொடர்ந்து புதுக்கோட்டையில் திரு.எஸ்.எஸ். ராமையா (ஆர்மோனியம்), எஸ்.எஸ். ராஜய்யா ஆகியோரிடம் முறையாக ராகங்கள் பயின்றார். தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளால் இயற்றப்பட்ட நாடகங்களை இசை நாடக நடிகர் திரு.பி.எல். தினகரன், திருமதி. மல்லிகா, பி.கே. பிரேம்குமார் ஆகியோரிடம் முறையாகப் பயின்றவர்.

'ஸ்ரீவள்ளி திருமணம்', 'பவளக்கொடி', 'சத்தியவான் சாவித்திரி', 'கோவலன்', 'தூக்குத் தூக்கி', 'அரிச்சந்திரா' போன்ற நாடகங்களில் நடித்த இசை நாடக நடிகை கே.எஸ். கலாவின் கலைச் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு மகிழ்வோடு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கலைமாமணி விருது பெறும்
பண்பாட்டு கலை பரப்புநர்

திரு. ஆர். யக்ஞராமன்

வழக்கறிஞராக வாழ்வைத் தொடங்கலாமென எண்ணித்தான் சட்டக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். வாய்ப்பு, அப் பெருமகனாரைக் கரம் பற்றி வேறு பக்கம் அழைத்துச் சென்று விட்டது! எனவே அவர் மக்கள் மத்தியில் .இசையறிஞர் என்றே இனம் காட்டிக் கொள்ள நேர்ந்துவிட்டது!

அவர் தான் சென்னை ஸ்ரீ கிருஷ்ண கான சபையின் செயலாளர் ஆர். யக்ஞராமன்! தொடர்ந்து 42 ஆண்டுகள் செயலாளர் பணியேற்று, செயல்கரியன செய்து வருகிறார். 'யக்ஞராமன் என்றால் ஸ்ரீ கிருஷ்ணகான சபை' 'ஸ்ரீ கிருஷ்ணகான சபை என்றால் யக்ஞராமன்' என, இசை அமைப்பில் இரண்டறக் கலந்து தொண்டாற்றிவரும் இசையறிஞர்.

தஞ்சை மாவட்டம், ரெங்கநாதபுரம் கிராமத்தில், 1922-ஆம் ஆண்டு பிறந்த ஆர். யக்ஞராமன், தஞ்சை மண்ணுக்குகே உரிய நுண்கலைத்திறனோடு திகழ்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் ஐம்பதுகளில் தொடங்கிய இசையறிஞர் யக்ஞனராமனின் மாபெரும் இசைத் தொண்டு, சென்னை மாநகரின் இசைக் கலை வரலாற்றில் ஈடு இணையற்ற தனியோர் அத்தியாயம்! முத்திரை பதித்த வித்தகச் சரித்திரம்! தேசிய ஒருமைப்பாட்டை இசைத்துறையில் வளர்க்கப் பல புதிய இசைச் சங்கமங்களை உருவாக்கிப் பிரபலப்படுத்தி இப் பெரியவர் பிரபலமானார்!

இவர் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயற்குழு உறுப்பினராகவும் மன்றத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றி உள்ள இவரது தொண்டினைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

சிறந்த கலை நிறுவனம் எனும் கேடயம் பெறும்

'கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ்'

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், 1975-ஆம் ஆண்டு, ராஜாசர் எம்.ஏ. முத்தையா செட்டியார் தலைமை வகிக்க, 'பத்மபூஷன்' செம்மங்குடி சீனிவாச ஐயரால் தொடங்கி வைக்கப்பட்ட 'கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ்' கலை அமைப்பு - ஏ.வி.எஸ். ராஜாவைத் தலைவராகவும், ஆர். ராஜாகோபால், எம்.ஆர் கிருஷ்ண மூர்த்தி ஆகியோரைச் செயலர்களாகவும் கொண்டு, சென்னை மாநகரில் தன்னேரில்லாத தனித்தன்மையுடன், இசை வளர்ச்சிக்கும், நாட்டிய மேன்மைக்கும், நாடகச் செழுமைக்கும் ஊக்கமளிக்கும் ஆக்க அமைப்பாக நாளும் வளர்ந்து வருகிறது.

ஆண்டுதோறும் நடத்தும் இசை விழாக்கள் அருமைக்கு உரியவை; பெருமைக்கு அரியவை! வளர்ந்து வரும் இசைச் செல்வர்களுக்கு உற்சாகம் அளிக்க, ஊக்கம் ஊட்ட .இசைப்பேரொளி. என்னும் விருதினை வழங்கி வருகிறது.

பதிமூன்று நாள்கள் தொடர்ந்து, 1998 ஜனவரியில், கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் நடத்திய நாட்டிய விழா, பாராட்டிற்குரிய அரிய செயலாக்கம். ஆண்டுதோறும் நடத்தும் நாட்டிய விழாவில், தேர்ந்த கலைஞர் ஒருவருக்கு 'நாட்டியமாமணி' என விருதும், சான்றிதழும் வழங்கி, பதினைந்தாயிரம் ரூபாய் பரிசாக அளிக்கும் சிறப்பிற்குரிய சீரிய பணியை செய்து வருகிறது.

சங்கீத நாடக அகாடமியின் அங்கீகாரம் பெற்ற இந்த அமைப்பு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அரவணைப்பில் இந்திய நாட்டளவில் நாட்டிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் தனிச்சிறந்த கலைஞர்களைத் தேர்வு செய்யும் பொறுப்பையும் ஏற்றுள்ளது.

ஆண்டுதோறும் தமிழிசை விழாவை நடத்தும் இந்த அமைப்பு, தமிழிசை வல்லுநர்களுக்கு 'இன்னிசை வேந்தர்' என்னும் விருதினையும், பதினைந்தாயிரம் ரூபாய் பரிசினையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இயற்றமிழ்க் கலைஞர்
திரு.கி.ஆ.பெ. விசுவநாதம்

திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 11.11.1899-ல் திருச்சியில் பிறந்தவர். தந்தையார் திரு.கி.ஆ. பெரியண்ண பிள்ளை. தாயார் திருமதி சுப்பம்மாள்.

தமிழகத்தின் சிறந்த ஏடுகளில் 60 ஆண்டுகளாகப் பல்வகைக் கட்டுரைகள் எழுதி வந்துள்ளவர். குடியரசு, ஆனந்தபோதினி, சண்ட மாருதம், விடுதலை ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகவும், தமிழ் நாடு இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். 16 இயற்றமிழ் நூல்களின் ஆசிரியர். டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்திய 'தமிழ்ச் செல்வம்' என்ற நாடகத்தின் ஆசிரியர். திருச்சி நகரக் கலைக் கழகத்தின் தலைவராக 25 ஆண்டுகள் கலைப்பணி புரிந்து வந்தவர்.

தமிழகத்தின் சிறந்த சொற்பொழிவாளர் வரிசையில் சிறப்பிடம் பெற்றவர். அரசியல், கலை, இலக்கிய மாநாடுகள் பலவற்றை நடத்தியவர். எண்ணற்ற தமிழ்த் திருமணங்களை நடத்தி வைத்தவர்.

மறைமலையடிகள், பெரியார் ஈ.வெ.ரா., கா.சு. பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், அறிஞர் அண்ணா முதலிய மேதைகளின் அன்புக்கும் நட்புக்கும் உரியவர். .முத்தமிழ்க் காவலர். என நாட்டு மக்களால் போற்றப்பட்ட சிறந்த இயற்றமிழ்ச் செல்வர் திரு.கி.ஆ.பெ. விசுவநாதம். அவர்களது கலைச்சேவையை பாராட்டி 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

இயற்றமிழ்க் கலைஞர்
சிலம்புச்செல்வர் மா.பொ. சிவஞானம்

திரு.ம.பொ. சிவஞானம் அவர்கள் வரலாறு, சமயம், இலக்கியம், அரசியல் ஆகிய பல்வேறு துறைகளுக்கான எழுபது தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் நூலை எழுதி 'சாகித்திய அகாடமி'யின் பரிசினைப் பெற்றுள்ளார். இயற்றமிழ்த் தொண்டிற்காக 'பத்மஸ்ரீ' விருதினையும் பெற்றுள்ளார். 'கிராமணி குலம்' 'தமிழ்முரசு', 'தமிழின் குரல்', 'செங்கோல்' போன்ற இதழ்களைச் சிறப்புடன் நடத்தி எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு உழைத்துள்ளார். தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகப் பணிபுரிந்தும், அரை நூற்றாண்டு காலமாக மேடைப் பேச்சாளராக இருந்தும், இருமுறை சென்னை மாவட்ட நூலகக் குழுவின் தலைவராக இருந்தும் பணியாற்றியுள்ளார். தமிழரசுக் கழகத்தின் சார்பில் நாடெங்கும் தமிழ் இலக்கிய ஞானத்தை ஊட்டி வந்தார். சிலப்பதிகார இலக்கியத்தில் சிறப்பான ஆய்வுரைகளுக்காக 'சிலம்புச் செல்வர்' என்று சிறப்பிக்கப்பட்டார். சிலப்பதிகார இலக்கியத்தின் சிறப்பான ஆய்வுரை களுக்காக 'சிலம்புச் செல்வர்' என்று சிறப்பிக்கப்பட்டவர். வீரபாண்டிய கட்டபொம்மன், தேசபக்தர் வ.உ. சிதம்பரனார் முதலிய நாடக, திரைப்படங் களுக்கு ஆலோசனைகளைத் தந்து சிறப்பித்துள்ளார். தாய்நாடு, தாய்மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் சுமார் நூறு நூல்களை எழுதிய சிறந்த இயற்றமிழ்ச் செல்வர் சிலம்புச்செல்வர் திரு.ம.பொ. சிவஞானம் அவர்களை 1976 ஆம் அண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

சாகித்திய கர்த்தா தவத்திரு சுத்தானந்த பாரதியார்

உயர்திரு சுத்தானந்த பாரதியார் அவர்களின் தந்தையார் திரு. ஜடாதரர், தாயார் திருமதி காமாட்சி அம்மையார் ஆவார்.

வழிவழியாக வளர்ந்து வந்த பெரியதொரு ஞானப் பரம்பரையில் பிறந்த பேறு பெற்ற இவர், இராமநாதபுரம் ஸ்ரீநிவாச அய்யங்கார், மதுரை சேஷ பாகவதர், பஞ்சாப கேச பாகவதர், நாதஸ்வரம் மாயாண்டி போன்ற பல வித்வான்களின் கச்சேரிகளைக் கேட்டு இசையறிவை வளர்த்துக் கொண்டார். தெய்வசிகாமணிப் புலவரால் இவர் தமிழறிவு வளர்ந்தது. மேலும் முயன்று, மேலோர் நெறி நின்று, முறையாகப் பயின்று, தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் பெரும் புலமை பெற்றுக் கவிதை புனைய ஆரம்பித்தார்.

யோக சமாஜம் என்ற தெய்வீக நிறுவனத்தை அமைத்துள்ள இவர், தமது நூல்களை 215 தொகுப்புக்களாக்கி, தமது அச்சகத்திலேயே வெளியிட்டிருக்கிறார்.

போலந்து, ஜெர்மனி, நார்வே, ஸ்வீடன், சோவியத் ரஷ்யா, ஜப்பான், சீனா, மலேசியா, இலங்கை போன்ற பல வெளிநாடுகளுக்கும் சென்று தமிழ் முழக்கம் செய்து, நமது தொல்பெரும் தெய்வப் பண்பை அந்நாட்டு மக்கள் அறிந்து போற்றும்படி செய்த தமிழ் அறிஞர்.

இவருடைய கலைச் சேவையைப் பாராட்டி, சிறப்பு விருது வழங்கி தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் 'கலாசிகாமணி' என்ற பட்டத்தை 1968 ஆம் ஆண்டு வழங்கியுள்ளது.

நாடக கலைஞர் வி.சி. கோபால்ரத்தினம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் வெம்பாக்கம் கிராமத்தில் 19.4.1895-ல் வி.சி. தேசிகாச்சாரிக்கும், சேஷம்மாள் அவர்களுக்கும் பிறந்த எல்.சி. கோபாலரத்தினம், மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டமும் சென்னை சட்டக் கல்லூரியில் பி.ஏ. பட்டமும் பெற்று முதுபெரும் வழக்கறிஞராகப் பணியாற்றியவர்.

இளமையிலேயே விகடக் கலையிலும், நாடகக் கலையிலும், விளையாட்டுகளிலும் சிறப்புற விளங்கி வந்த வி.சி. கோபால்ரத்தினம் பிரபல வழக்கறிஞராக விளங்கிய காலத்திலும் தான் ஈடுபட்ட கலைகளில் இடையறாத ஆர்வம் காட்டி அக்கலைகளை வளர்ப்பதிலும், கண்ணும் கருத்துமாக விளங்கியவர்.

சென்னை வழக்கறிஞர்கள் சங்கத் தலைவராகவும் இருந்த அவர், வழக்கறிஞர்கள் நாடகக் குழு ஒன்றை நடத்தி அதன் தலைவராகவும் விளங்கியவர். நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனார் அவர்களின் கூட்டுறவில் பிரபலமாக விளங்கிய சுகுண விலாச சபாவிற்கும் தலைவராகவும் திகழ்ந்தார். தானெழுதிய 'ராஜபக்தி', 'துர்காதாஸ்', 'பக்தராவணா', 'கல்தான்பேட்டை' துணை குற்றவியல் நீதிபதி, வண்ணக் கண்ணாடிகள், 'பழமொழிகள்', 'நாகலிங்கம்' மற்றும் பல நாடகங்களை தனது வழக்கறிஞர் நாடக மன்றத்தின் மூலமாக அரங்கேற்றியும் புகழ்பெற்றவராவர். அந்நாளில் சங்கீத நாடக சங்கம் என்ற பெயரில் விளங்கிய இன்றைய தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் துணைத் தலைவராகவும் அவர் பணியாற்றினார்.

கரக நாட்டியக் கலைஞர்

திண்டுக்கல் சீரங்கம் செட்டியார்

திரு. திண்டுக்கல் சீரங்கம் செட்டியார் அவர்கள் 1907-ம் ஆண்டு, திண்டுக்கல் வண்டிக்காளியம்மன் பூசாரி பெத்தன் செட்டியாரின் மகனாகப் பிறந்தார்.

இளமையில் இவர் தம் தந்தையிடமே கரக கலையைப் பயின்றார். பின்னர் இடைய்க்கோட்டை சமஸ்தான ஜமீன்தார் முன்னிலையில் தமது கரகக் கலையை அரங்கேற்றினார். தொடர்ந்து பல சமஸ்தானங்கள், தேவாலயங்கள் மற்றும் பல பெரிய நகரங்களில் புகழுடன் அக்கலை நிகழ்ச்சியை நடத்திக் காட்டி பெரும் புகழ் பெற்றார். தி.எம்.கே. தியாகராஜ பாகவதர், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பி.யூ. சின்னப்பா, அவ்வை சகோதரர்கள் மற்றும் பல கலைஞர்களிடம் நற்சான்றிதழ்களையும் பொதுமக்களிடம் பல பரிசுகளையும் பெற்றுள்ளார்.

இவர் பல மாணவர்களுக்கு கரக ஆட்டப் பயிற்சியளித்து இக்கலையை பெரிதும் வளர்த்தார்.

கரகக் கலையைக் கட்டிக் காத்து, அதில் தமக்கென ஒரு நிலையான இடத்தை நிலை நிறுத்திக்கொண்டு சிறந்த கரகக் கலைஞராக விளங்கியவர் திரு.திண்டுக்கல் சீரங்கம் செட்டியார் அவர்கள்.

இத்துறையில் இவருடைய கலைச் சேவையைப் பாராட்டி சிறப்பு விருது வழங்கி, 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருதும் வழங்கியுள்ளது.

இசைக் கலைஞர்

சி.எஸ். சங்கரசிவம்

திரு.சி.எஸ். சங்கரசிவம் அவர்கள் 28.6.1908-ல் பிறந்தார். தந்தையார் திரு. சிற்சபை சேர்வை; தாயார் திருமதி பாப்பம்மாள். 'காயக சிகாமணி' முத்தையா பாகவதரிடம் பனிரெண்டு ஆண்டுகள் குருகுல வாசம் செய்து, இராமநாதபுரம் சேதுபதி அவர்களின் ஆஸ்தான வித்துவானாகப் பணியாற்றியவர்.

மதுரை ஸ்ரீ சத்குரு சமாஜத்தின் முதல்வராகப் பல ஆண்டுகள் பணியாற்றி ''மதுரை கலா ப்ரவீணா'' என்ற பட்டம் பெற்றவர். அரங்கிசை பல நடத்திப் புகழ் பெற்றவர். சென்னை மியூஸிக் அகாடமியின் நிபுணர் குழுவில் பங்கு கொண்டவர். மதுரைப் பல்கலைக் கழகத்தின் இசை சம்பந்தமான பாடத் திட்டக் குழுவிலும், வானொலியில் பாடகர் தேர்வுக் குழுவிலும் பணியாற்றியவர்.

திரு.சி.எஸ். முருகபூபதி, திரு. இராமநாதபுரம் வி. கிருஷ்ணன், டி.என். சேஷகோபாலன் முதலான மாணவர் பலருக்கு இசைப் பயிற்சி அளித்தவர்.

சி.எஸ். சங்கரசிவம் அவர்களுக்கு 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

இசைக் கலைஞர் மதுரை ஸ்ரீரங்கம் அய்யங்கார்

மதுரை ஸ்ரீரங்கம் அய்யங்கார் 1904-ம் ஆண்டு, ஜூலை மாதம் 5-ம் தேதி மதுரையில் பிறந்தார். தந்தை ரெங்கசுவாமி அய்யங்கார். தாய் லெட்சுமி அம்மாள். இவர் நாமக்கல் பல்லவி நரசிம்ம ஐய்யங்கார் அவர்களிடம் இசைப் பயிற்சி பெற்றார். இவரது இசை அரங்கேற்றம் 14-வது வயதில் ஸ்ரீரங்கத்தில் நடைபெற்றது. அது முதல் இவரும், இவருடைய சகோதரர் திரு. ஸ்ரீனிவாசய்யங்காரும் சேர்ந்து 'மதுரை சகோதரர்கள்' என்ற பெயரில் சுமார் 30 வருட காலமாக, முக்கிய நகரங்களில் கச்சேரி செய்து புகழ் பெற்றனர்.

1923-ம் ஆண்டு மைசூர் சமஸ்தானத்தில் நடந்த கச்சேரியில் ஸ்ரீ வீணை சேஷண்ணா, ஸ்ரீ வாசுதேவாச்சார் போன்றவர்கள் இவரைப் பெரிதும் பாராட்டினர். இவர் தமையனார் காலமாகிவிட்ட பிறகு, மதுரை ஸ்ரீரங்கம் அய்யங்கார் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தார். இவருக்கு 'ஸங்கீதஸ்வர பூஷணம்', 'கான நவா' என்ற சிறப்புப் பட்டங்களும் கிடைத்துள்ளன. இவர் அபூர்வமான ராகங்கள், கிருதிகள் இவைகளைத் திறம்படப் பாடிக்காட்டி வித்வான்களாலும் பாராட்டப்பட்டிருக்கிறார். கர்நாடக சங்கீதத்தில் ஞானபாவச் சிறப்புடன், ராக ஆலாபனையை காலப் பிரமாணத்துடன் விளக்கும் தனித் திறனுடையவர். கர்நாடக சங்கீதத்தின் சம்பிரதாய முறையை வழுவாது காப்பாற்றி வந்தார். மதுரை ஸ்ரீரங்கம் அய்யங்கார் அவர்களுக்கு 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கி சிறப் பித்துள்ளது.

கோட்டுவாத்தியக் கலைஞர் நாராயண அய்யங்கார்

1903-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் வயலின் வித்வானாக விளங்கிய ஸ்ரீனிவாச அய்யங்காருக்கும், ஸ்ரீவரமங்கைக்கும் பிறந்த நாராயண அய்யங்கார், ராஜா ரவிவர்மா கலைப் பள்ளியில் கோடங்கநல்லூர் சுப்பையா பாகவதரிடம் கோட்டு வாத்தியத்தின் துவக்கப் பயிற்சி பெற்றார்.

செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யர் மற்றும் பல பிரபல கலைஞர்களை உருவாக்கிய திருவிடை மருதூர் சகராமராவ் அவர்களிடமும் கோட்டுவாத்திய நுணுக்கங்களைக் கற்ற அவர், தனது ஆசான்களே வியக்கத்தக்க அளவில் ஆர்வத்தாலும் இடைவிடாப் பயிற்சியாலும் வல்லுநராக விளங்கினார்.

கோட்டுவாத்தியத்தில் தனது 20-வது வயதிலே யே திருவனந்தபுரம், மைசூர் ஆகிய அரசவைகளில் முதல்நிலை பெற்றுக் கோட்டுவாத்தியத் தனிக் கச்சேரிகள் நிகழ்த்திய பேரும் புகழும் பெற்றார். பர்மா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய அயல்நாடுகளிலும் பயணம் செய்து கலை நிகழ்ச்சிகள் நடத்தினார். மகாத்மாகாந்தி, சரோஜினி நாயுடு, ரவீந்திரநாத் தாகூர், ஜவஹர்லால் நேரு, வைசிராய் வில்லிங்டன் பிரபு மற்றும் பல மேதைகளையும் தன் கலைத்திறத்தால் ஈர்த்தவர்.

அவரது மகனாக சித்ரவீணா நரசிம்மன் அவர்களுக்கும் ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், வி.வி. சடகோபன் மற்றும் பல பிரபல கலைஞர்களுக்கும் ஆசிரியராக விளங்கிய அவர், பிரபல இசை விற்பன்னர்களால், 'நாதபிரம்ம வித்யாவாரிதி' 'திக்விஜயநாதவாணி' 'கோட்டு வாத்தியகலாநிதி' மற்றும் பல விருதுகளால் கௌரவிக்கப் பெற்றார்.

ஹரிகதா காலட்சேபக் கலைஞர்

திருவையாறு அண்ணாசாமி பாகவதர்

அண்ணாசாமி பாகவதர் 1899-ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 3-ம் தேதி ஸ்ரீரங்கம் அருகில் உள்ள பேட்டை கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தையார் சிறந்த வேத விற்பன்னராகிய திரு. துரைசுவாமி ஜடாவல்லபர். இவரது தாய் திருமதி ஜானகி அம்மாள். இளம் வயதிலேயே இவர் கரூர் பூவராகாச்சாரியார் சுவாமி அவர்களிடமும் கொட்டாரம் சாஸ்திர ரத்னாகர ராம சுப்பா சாஸ்திரிகள் அவர்களிடமும் காவிய, நாடக அலங்கார பயிற்சி பெற்றார். பின்னர் மாதிரிமங்கலம் பஞ்சாபகேச சாஸ்திரிகளிடம் ஹரிகதா காலட்சேபத்திற்கான பயிற்சியும் பெற்றார்.

இவர் 23 வயதிலிருந்தே தமிழ் நாட்டிலும் வட இந்தியாவின் பல பாகங்களிலும் பல ஹரிகதா காலட்சேபங்கள் செய்து பெரும் புகழ் பெற்றார். இதைத் தவிர பல மாணவர்களுக்கும் ஹரிகதா காலட்சேபத்திற்கான பயிற்சி அளித்திருக்கிறார்.

இவருடைய கலைத் திறமையைப் போற்றி ''ஹரிகதா ரத்னம்'', ''ஹரிகதா ப்ரவீண'', ''ஸ்ரீமத் ராமாயண திலகம்'' ஆகிய கௌரவப் பட்டங்கள் வழங்கப் பெற்றுள்ளன. சென்னை சங்கீத அகாடமியாரால் இவர் கௌரவிக்கப்பட்டதுடன் 1962-ல் டில்லி சங்கீத நாடக அகாடெமியிலிருந்தும் இவருக்கு பெலோஷிப் என்ற கௌரவம் வழங்கப் பட்டுள்ளது.

கர்நாடக சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று சம்பிரதாயம் வழுவாமல் கதா காலட்சேபம் செய்து பெரும் கீர்த்தி பெற்றுள்ளவர் திரு. அண்ணாசாமி பாகதவர். அவர்களுக்கு 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

இசைச் சித்தர்

சிதம்பரம் எஸ். ஜெயராமன்

சிதம்பரத்தில் 1918-ல் பெரும் இசை மரபில் பிறந்த சிதம்பரம் எஸ். ஜெயராமன் அவர்கள், தனது தந்தையார் வழுவூர் பாடக சுந்தரம் பிள்ளையவர் களிடமும், அண்ணன் கோபாலகிருஷ்ணன் அவர்களிடமும் இசை பயின்று, இளமையிலேயே நாடக மேடைகளில் பாடி, சிங்கக்குட்டி என்றும், எஸ்.ஜி. கிட்டப்பாவின் எதிரொலி எனவும் புகழ் பெற்றார். சங்கீத சபைகள், ஆலய விழாக்கள், அரசவைகள் இவற்றிலும் தனக்கென தனி பாணி அமைத்து கச்சேரிகள் செய்து புகழ் பெற்றார். பின்னர் ஏராள திரைப்படங்களில் பாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றிருந்தார். தமிழிசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு இவர் தனது இசை நிகழ்ச்சியில் தமிழிலேயே பாடி தமிழிசை இயக்கத்தினை வளர்த்தார். இவரது குரல் வளம், கலைத் திறன், தமிழிசை ஆர்வம் இவற்றினைப் பாராட்டி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் இவருக்கு விருதுகள் வழங்கினர். 'இசைச் சித்தர்' என அழைத்தனர்.

1972-ல் இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கியது. தமிழக இசைக் கல்லூரிகள் இயக்குநராகவும், வானொலி மத்திய தேர்வுக் குழு உறுப்பினராகவும்பணியாற்றினார். 1995-ல் ஜனவரி திங்களில் சென்னையில் காலமானார்.

எல்லப்ப முதலியார்

மைசூர் அரசவை தலைமை பரத நாட்டிய ஆசானாக விளங்கிய பச்சைமுத்து முதலியார் வழிவந்தவர் திரு. எல்லப்ப முதலியார் ஆவார்.

தனது தந்தையார் குருசாமி முதலியாரிடம் கலைத்துறையில் பால பாடம் கற்ற இவர், காஞ்சியில் புகழ்பெற்ற திருவேங்கட நட்டுவனாரிடமும், பின்னர் வரதராஜ முதலியார் வேலாயுத முதலியார் ஆகிய விற்பன்னர்களிடமும் கலை பயின்றவர். பின்னர் மகாவித்வான் தஞ்சை திரு கந்தப்பப் பிள்ளையுடன் இணைந்து கலைப்பணி புரிந்தவர். நடனக்கலையரசி பாலசரஸ்வதியின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திய பெருமை இவரைச் சாரும். இவரிடம் கலை பயின்ற புகழ்பெற்றவர்களில் மிருணாளினி சாராபாய், குமாரி ருக்மனி, பாஸ்கர்ராவ் சௌத்திரி, யாமினி கிருஷ்ணமூர்த்தி, அமலா சங்கர், சந்திரலேகா, சித்திரலேகா, மாளவிகா சருக்கை, இந்திராணி, கீதா, ஆர்காட்டு நவாபின் துணைவி சபீன் என்ற பிரெஞ்சுப் பெண்மணி மற்றும் பலராவர்.

அந்நாளில் காஞ்சியில் புகழ்பெற்ற நயினாப் பிள்ளை, தட்சிணாமூர்த்தி பிள்ளை, பக்கிரியாப் பிள்ளை, அழகியநம்பி ஆகியோரின் இனிய நண்பராகவும் திகழ்ந்த எல்லப்ப நட்டுவனார் கொன்னக்கோலிலும் பயிற்சி பெற்றவர். இனிய இசையில் பாடுவதுடன் தனியழகு மிக்க ஜதிக்கோர்வையுடன் நட்டுவாங்கமும் செய்து பேரும் பெற்று திகழ்ந்த அன்னார் பரதநாட்டிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெற்றவராவார்.

நாதசுரக் கலைஞர்
சிதம்பரம் இராதாகிருஷ்ண பிள்ளை

சிதம்பரம் திரு. ராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் நல்லாடை கிராமத்தில் பிறந்தார். தாயார் திருமதி. யோகாம்பாள், தந்தையார் திரு. சுவாமிநாத பிள்ளை அவர்கள்.

இவர் தமது தந்தையாரிடமே நாதஸ்வர பயிற்சி துவங்கினார். பின்பு திருக்கண்ணபுரம் திரு. சுந்தரம் பிள்ளை அவர்களிடமும், திருவெண்காடு திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்களிடமும் கலை பயின்றார். சிதம்பரம் திரு. வைத்திய நாதப் பெரியார் அவர்களிடம் பயிற்சி பெற்றதுடன், அவர்களுடன் சேர்ந்து பல இடங்களில் கச்சேரிகளும் செய்துள்ளார். சுவாமி சிவானந்தா அவர்களிடமிருந்து 'நாதஸ்வர ஜோதி' என்ற பட்டம் பெற்றார்.

சிதம்பரம் நடராஜர், கோவிந்தராஜர் தேவஸ்தானங்களின் ஆஸ்தான வித்வானாகவும், குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீன வித்வானாக வும், விளங்கியவரும் திரு. ராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள்.

இத்துறையில் இவருடைய கலைச் சேவையைப் பாராட்டி சிறப்பு விருது வழங்கியதோடு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் '1970-ஆம் ஆண்டு கலைமாமணி' விருதும் வழங்கி சிறப்பித்துள்ளது.

திரைப்பட வசனகர்த்தா
சக்தி டி.கே. கிருஷ்ணசாமி

இவர் தஞ்சாவூரில் 1913-ம் ஆண்டு பிறந்தார். தந்தையார் திரு. கலிய பெருமாள். தாயார் வேதவல்லி. 1931-ம் ஆண்டு நாடகத் துறையில் ஈடுபட்டார். 1943 வரை நவாப் டி.எஸ். ராஜமாணிக்கம் குழுவில் பல துறைகளில் பணியாற்றினார். 1944-ல் சக்தி நாடக சபையைச் சொந்தமாகத் துவங்கினார். இவர் புதுமைமான முறையில், ஒரே சமயத்தில் மூன்று காட்சிகள் ஒருங்கே நடைபெறத் தக்க வசதியுடன் மேடையை அமைத்தார். இதன் மூலம் நாற்பது அடி அரங்கத்தில் பெரிய காட்சிகளையும் சிறிய காட்சிகளையும் தேவைக்கேற்ப அமைக்கத் தக்க வசதி ஏற்பட்டது. இந்த முறையைக் கலைஞர்களும் பொதுமக்களும் பெரிதும் பாராட்டினார்கள். இன்று முன்னணியிலிருக்கும் நடிகர்கள் பலர் இவரது சக்தி நாடக சபையில் அனுபவம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'ராம பக்தி', 'விதி', 'தோழன்', 'ஜீவன்', 'நூர்ஜஹான்', 'பயங்கரி'ஆகிய நாடகங்களை ஒவ்வொரு ரசனைக்கு ஒன்றாக எழுதி தயாரித்துப் பாராட்டுதலைப் பெற்றிருந்தார். 1951-ம் ஆண்டு சினிமா துறையில் நுழைந்தார். 1956-ல் 'கட்ட பொம்மன்' நாடகத்தை எழுதிப் பெரும் புகழ் பெற்றார். திரைப்படமாகவும் அந்நாடகம் வெற்றி கண்டது. இவரது நாடகப் பணியைப் பாராட்டி பல பிரமுகர்கள் நற்சான்றிதழ்களையும், விருதுகளையும் அளித்திருக் கின்றனர். பிறகு 'பகல்நிலா', 'ஜஹாங்கீர்' ஆகிய நாடகங்களை எழுதித் தயாரித்து சிவாஜி நாடக மன்றத்தில் அரங்கேற்றிய பெருமை இவருக்குரியது. தமிழ் நாடக மேடை அமைப்பில் புதுமை கண்டு பல அரிய நாடகங்களை உருவாக்கிய சிறந்த நாடகத் தயாரிப்பாளர் சக்தி டி.கே. கிருஷ்ணசாமி அவர்களுக்கு 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

திரைப்படத் தயாரிப்பாளர்
எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு

உயர்திரு எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் 10.2.1910-ல் பிறந்தார்.

கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் பல ஆண்டுகள் நிர்வாக இயக்குநராகவும் பட இயக்குநராகவும் திரைப்படத் தொழிலில் புகுந்த இவர் 'ஆரியமாலா' 'ஜெகதலப் பிரதாபன்' 'சிவகவி' போன்ற படங்களைத் தயாரித்து மக்களின் ஆதரவைப் பெற்றார். பின்னர் 1945-ல் பட்சிராஜா ஸ்டுடியோவை நிறுவி, 'கன்னிகா', 'காஞ்சனா', 'மலைக்கள்ளன்' போன்ற தமிழ்ப் படங்களையும், 'அக்கிராமுடு' என்ற தெலுங்கு படத்தையும், 'ஆஸாத்' என்ற இந்திப் படத்தையும், 'சபரிமலை ஐயப்பன்' என்ற மலையாளப் படத்தையும் தயாரித்து பேரும் புகழும் பெற்றார்.

'மலைக்கள்ளன்' என்ற படத்தை தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம், சிங்களம் ஆகிய ஆறு மொழிகளிலும், தயாரித்து வெற்றி கண்ட பெருமை இவரையே சாரும். மலைக்கள்ளன் என்ற ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கத்தை பெற்றிருக்கிறது.

1947-ம் ஆண்டு இவர் ஐரோப்பா, இங்கிலாந்து முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று திரைப்பட நுணுக்கங்களை நேரில் கண்டு வந்துள்ளார்.

பல சிறந்த திரைப்படங்களைத் தரமோடு தயாரித்து, ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்று, திரையுலகில் சிறந்த அனுபவ மிக்க தயாரிப்பாளராக விளங்கினார் திரு.எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள்.

இத்துறையில் இவருடைய கலைச் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 1969-ஆம் ஆண்டு .கலைமாமணி. விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

பொன்னி, 31, கிரீன்வேஸ் சாலை, சென்னை-28

மன்றத்தின் பணிகள் பற்றிய அறிக்கை

உலகம் புகழும் தமிழ்க் கலைகளைப் பொலிவோடும், புதுமைகள் மலரப் பேணிக் காத்திடவும், மத்திய சங்கீத நாடக அகாதெமியின் கலைத் திட்டங்களை, நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்தவும், தமிழக அரசால் 1955-ஆம் ஆண்டில், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்ட இம்மாமன்றத்திற்கு, 1973-ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எனப் பெயர் சூட்டப்பெற்றது.

இக்கலை நிறுவனம், கடந்த 43 ஆண்டுகளாக இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம் மற்றும் கிராமியம் ஆகிய பரம்பரியக் கலைகளுக்குப் புத்துயிர் அளித்துப் பேணிப் பாதுகாக்கவும், கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், பின்வரும் தமிழக அரசின் உயர்ந்த கலைத் திட்டங்களைச் செயலாற்றிடவும், மக்களிடையே அவை மலர்ந்து மிளிரவும் மன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ், பிற மாநிலங்களுக்குக் கலைக் குழுக்களை அனுப்புதல், பிற மாநிலக் கலைக் குழுக்களை வரவேற்றுக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி, இந்தியப் பண்பாட்டையும், தேசிய ஒருமைப்பாட்டுறவையும் மேம்படுத்துதல், நலிந்த கலைஞர்களுக்குத் திங்கள் தோறும் நிதியுதவி அளித்தல், மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதி வழங்குதல், தகுதிவாய்ந்த இளங் கலைஞர்களை ஊக்குவித்தல், கலைத்துறைச் சாதனையாளர்களைக் கண்டறிந்து, 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பித்தல், தமிழ்ப் பண்பாட்டை மேம்படுத்தும் கருத்தமைந்த நாடகங்களை உருவாக்க, நாடகக் கலைக்குழுக்களுக்கு மானியம் வழங்குதல், பழம்பெருமை வாய்ந்த தோற்பாவைக் கூத்து, பொம்மலாட்டம் போன்ற புராதனக் கலைகள் அழிந்துபடாமல் பாதுகாத்திட அக்குழுக்களுக்குப் புதிய படைப்புகளை உருவாக்கிடத் தாராளமாக நல்கைகள் வழங்குதல், அருங்கலை நூல்களை வெளியிட நிதியுதவி அளித்தல், கலைப் பேரறிஞர்களின் நினைவு விழாக்களைக் கொண்டாடுதல், கலை வளர்க்கும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு நல்கை வழங்குதல், தொன்மைச் சிறப்பு வாய்ந்த கலைப் படைப்புகளை வருங்காலச் சந்ததியரின் நலனுக்காக ஆவணமாக்குதல், கலைஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பயன்பாட்டிற்காக பழம்பெரும் இசை, நாட்டிய, நாடக நூல்களைச் சேகரித்து நூலகத்தைப் பராமரித்தல், நுண்கலைகள் சம்பந்தமான சொற்பொழிவுகள் மெய்ப்பித்துக் காட்டும் நிகழ்ச்சிகளை நடத்துதல், கவின்மிகு நுண்கலை, மரபுவழி ஊரகக் கலை ஆய்வுகளுக்கு ஊக்கமளித்தல், பழம்பெரும் ஊரகக் கலைகளைப் பேணிக் காக்கும் பொருட்டுக் கலைஞர்களுக்கு ஆடை, அணிகலன்களைப் புதிதாகப் பெற நல்கை அளித்தல், தாம் சார்ந்துள்ள கலை உலகிற்குத் தன்னையே அர்ப்பணித்து, மறைந்தும் மறையாத புகழோடு விளங்கும் கலைஞர்களை நினைவுகூர்ந்து விழா எடுத்தல், தொழில்முறைக் கலைஞர்கள்,

தாங்கள் பங்குபெறும் வெளியூர் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பொருட்டு இரும்பூர்தியில் கட்டணச் சலுகையில் பயணம் செய்யச் சான்று வழங்குதல், நாடகக் கலைஞர்கள் தமிழகத்தில் தாங்கள் பங்கு பெறும் வெளியூர் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பொருட்டு தமிழக அரசுப் பேருந்தில் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்யச் சான்று வழங்கல், அரசு இசைக் கல்லூரிகள், தமிழ்நாடு திரைப்பட தொலைக்காட்சித் தொழிநுட்ப நிறுவனம் மற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் பயிலும் திறன்மிக்க மாணவ, மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்குதல் ஆகிய சீரிய பணிகளை, இம்மாமன்றம் செம்மையுறச் செயற்படுத்தி வருகின்றது.

இம்மன்ற விழாக்களில் தலைசிறந்து விளங்குவது இன்று நிகழ்ந்துகொண்டிருக்கும் ‘கலைமாமணி’ விருது வழங்கும் விழாவாகும்.

இயல், இசை, நாடக, நாட்டிய, திரைப்பட, மற்றும் ஊரகக் கலைகளில் புகழோடு விளங்கும் பழம்பெரும் கலைஞர்களுக்கும் போற்றுதற்குரிய சாதனைகள் படைக்கும் இன்றைய கலைஞர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் மன்றம் ‘கலைமாமணி’ விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது. இதுகாறும் 987 கலைஞர்களுக்கு ‘கலைமாமணி’ விருது வழங்கப்பெற்றுள்ளது. கலை வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்து, மறைந்தும் மறையாத புகழோடு விளங்கிவரும் 242 கலைப் பேரறிஞர்களின் திருவுருவப் படங்கள் ‘கலைமாமணி’ விருது வழங்கும் விழாவின்போது திறந்து வைக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ‘கலைமாமணி’ விருது பெற்று நலிவுற்ற நிலையில் வாழ்ந்துவரும் கலைஞர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கும் வகையில் இதுவரை 147 கலைஞர்களுக்குத் தலா ரூ. 1,000/- வீதமும், 17 கலைஞர்களுக்குத் தலா ரூ. 5,000/- வீதமும், கடந்த ஆண்டிலிருந்து 6 கலைஞர்களுக்குத் தலா ரூ. 10,000/- வீதமும் பொற்கிழியாக வழங்கப் பெற்றுள்ளது.

கலை உலகிற்கும், தமிழனத்திற்கும் தன்நிகரின்றித் தலைவராக விளங்கிவரும் டாக்டர் கலைஞர் அவர்களின் பவளவிழாவினை முன்னிட்டு சிறப்பு நிகழ்வாக, இவ்வாண்டு 75 கலைஞர்களுக்குக் .கலைமாமணி. விருது வழங்கிச் சிறப்பிக்கப்படுவதுடன், இக்கலைஞர்களுக்கு வழக்கமான இரண்டு சவரனுக்குப் பதிலாக தலா மூன்று சவரன் எடையுள்ள பொற்பதக்கம் வழங்கி ஊக்கப்படுத்தப்படுகின்றது. அகவை முதிர்ந்து நலிந்து வாழும் கலைமாமணி விருது பெற்ற 5 கலைஞர்களுக்குத் தலா ரூ. 10,000/- வீதம் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்படுகின்றது.

கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டுவரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயற்பட்டுவரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில் இதுவரை 19 கலை நிறுவனங்களுக்கும், 12 நாடகக் குழுக்களுக்கும் கேடயம் மற்றும் சுழற்கேடயம் வழங்கப்பெற்றுள்ளன.

மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ், எண்ணற்ற தமிழக கலைக்குழுக்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும், பிற மாநிலக் கலைக்குழுக்களை வரவேற்று, மைய-மாநில அரசுகளின் உதவியோடு தமிழகத்தில் அக்குழுக்களின் கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. கடந்த ஆண்டில் நாகாலாந்து மாநிலத்திற்குத் தமிழகக் கலைக் குழுவை அனுப்பி கலை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்திடச் செய்ததுடன், அம்மாநிலத்தின் கலைக் குழுவைத் தமிழகத்திற்கு வரவேற்று, சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடத்தப்பட்டது. இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் பஞ்சாப், உத்திரபிரதேசம், ஒரிசா, சிக்கிம் ஆகிய மாநிலங்களுடன், தமிழகக் கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளப்படவுள்ளது.

வாழ்நாள் முழுதும் கலைப் பணியாற்றி அகவை முதிர்ந்து நலிந்து வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுகாறும் 4563 கலைஞர்கள் திங்கள் தோறும் ரூ. 500/- தொகையை நிதியுதவியாகப் பெற்று வருகின்றனர். இத்திட்டம் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தில் மட்டுமே சிறப்புறச் செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வகையில் ஆண்டுதோறும் கூடுதலாக 300 கலைஞர்கட்கு ஒப்பளிக்கப்படும் நலிந்த கலைஞர் நிதியுதவியை 500 கலைஞர்கட்கு வழங்கலாம் எனத் தாயுள்ளத்தோடு ஆணை பிறப்பித்துள்ள கலைஞருக்கு இம்மன்றம் கலை உலகின் சார்பில் நன்றி தெவிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

புகழ்மிக்க கலைஞர்களின் மறைவினால், கலங்கித் தவிக்கும் குடும்பத்தாருக்கு ரூ. 3,000/- வீதம் குடும்பப் பராமரிப்புத் தொகை வழங்கப்படுகின்றது. இவ்வகையில், இதுகாறும் 171 குடும்பங்கள் பயன்பெற்றள்ளன. ஈமச் சடங்குச் செலவிற்காக ரூ. 500/-ம் வழங்கப்படுகின்றது. இக்குடும்ப நல நிதியை ரூ. 3,000/- லிருந்து ரூ. 5,000/- ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்துள்ள மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு மன்றம் தனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பல்வேறு நிகழ்ச்சிக் கலைக் கூறுகளைச் சார்ந்த புத்திளங் கலைஞர்களை உலகிற்கு அறிமுகம் செய்து ஊக்குவிக்கும் வண்ணம், அக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கெனத் தன்னார்வத் கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுகாறும் 1500 க்கும் மேற்பட்ட இளம் கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

நாடகக் கலையை மேம்பாடு அடையச் செய்யும் பொருட்டு, நாடு, மொழி, கலை, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றிற்கு உயர்வளிக்கவும், அறநெறி நல்வாழ்வுக் கருத்துகளோடு பின்னிப் பிணைந்ததாகவும், உள்ள நாடகப் படைப்புகளை அரங்கேற்றும் தமிழ் மேடை நாடகக் குழுக்களுக்கு உதவும் வண்ணம் மன்றம் தாராளமாக நல்கை வழங்கி வருகின்றது. இத்திட்டத்தினால் 50க்கும் மேற்பட்ட நாடகங்கள் உருவாக்கப்பெற்று எண்ணற்ற கலைஞர்கள் பயன்துய்த்துள்ளார்கள்.

அருங்கலையில் அரிய நூல்களை வெளியிடும் நூலாசிரியர்களுக்கு, மன்றம் நூற்பதிப்பு மானியம் வழங்கி வருகின்றது. இதுகாறும் இத்திட்டத்தின்கீழ், 100க்கும் மேற்பட்ட அரிய கலை நூல்கள் மன்ற நிதியுதவியுடன் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப் பெற்றுள்ளன.

கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு மறைந்தும் மறையாத புகழோடு விளங்கிவரும் கலைப் பேரறிஞர்களான ''நாடகத்தந்தை'' தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், ''கலைவாணர்'' என்.எஸ். கிருஷ்ணன், ''நாடகப் பேராசிரியர்'' பம்மல் சம்பந்தனார், ''சாகித்திய கர்த்தா'' பாபநாசம் சிவன், ''நாதசுரச் சக்ரவர்த்தி'' டி.என். இராசரத்தினம், ''நாடக மேதை'' நவாப் ராசமாணிக்கம், ''காயகசிகாமணி'' அரியக்குடி இராமானுசர் ஆகியோரின் நினைவுநாள் விழாக்களை மன்றம் மறவாமல் ஆண்டுதோறும் நடத்தி வருகின்றது.

சென்ற ஆண்டு முதல் ''நாடக மேதை'' ஔவை டி.கே. சண்முகம், நாட்டியக் கலா கேசரி வழுவூர் வி.பி. இராமையாப் பிள்ளை, ''இசையரசு'' எம்.எம். தண்டபாணி தேசிகர், வயலின் மேதை கும்பகோணம் இராசமாணிக்கம் ஆகியோரின் நினைவு விழாக்களையும் நடத்தி வருகின்றது.

கலை வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்குப் பயன்படும் வண்ணம் புதிய நூல்கள் வாங்கப்பெற்று மன்ற நூலகம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நலிந்த கிராமியக் கலைஞர்களுக்கு, இசைக் கருவிகள், ஒப்பனைச் சாதனங்கள் ஆகியவை புதிதாக வாங்கிடும் பொருட்டு மன்றத்தால் நல்கை வழங்கப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டில், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், அனைத்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன்னிலையில், தமிழகத்தின் அனைத்து மாவட்டக் கிராமியக் கலைஞர்களுக்கும் அரங்காடை, கலைச் சாதனங்கள் வாங்க நிதி உதவி வழங்கியது. இதனால் இதுவரை 300க்கும் மேற்பட்ட கலைக் குழுக்கள் பயன்பெற்றுள்ளன.

தமிழகத்தில் சிறப்பாக இயங்கி வரும் நாட்டியக் கலை நிறுவனங்களைத் தேர்வு செய்து, அந்நிறுவனங்களின் வாயிலாகத் தமிழில் புதிய நாட்டிய-நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றம் செய்ய மன்றம் நிதி உதவி அளித்து வருகின்றது. இவ்வகையில், சென்ற ஆண்டில், தஞ்சை, திருச்சி, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் நாட்டிய-நாடக விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

புகழ்பெற்று விளங்கும் இளம் பரத நாட்டியக் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கும் வகையில், மன்றம், நாட்டியக் கலை விழாவையும் நடத்தி வருகின்றது.

ஆர்வமுள்ள கலைஞர்களுக்கு நட்டுவாங்கப் பயிற்சி அளிக்கும் வகையில், இதுவரை 15-க்கும் மேற்பட்ட நட்டுவாங்கக் கலைஞர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

கிராமியக் கலைகளுக்குப் புத்துயிர் அளிக்கவும், கிராமியக் கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், தமிழகத்தின் முக்கியத் தலைநகரங்களில் கிராமியக் கலைவிழாவை மன்றம் சிறப்புற நடத்தி வருகின்றது. இவ்வகையில் கடந்த ஆண்டில் கோவை மாவட்டம், திருப்பூரில் சிறப்பாக கிராமியக் கலைவிழா நடத்தப்பெற்றது.

நாடகக் குழுக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், வெளியூர்களில் நாடகம் நடத்தச் செல்லும் கலைக் குழுக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணச் சலுகையில் பயணம் செய்ய அனுமதிக்கப்பெறுகிறது. இதனால் நாள்தோறும் பல நாடகக் கலைஞர்கள் பயனடைந்து வருகின்றனர்.

அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் ஏழ்மை நிலையில் உள்ள திறம்படைத்த மாணவர்கட்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தினை மன்றம் செம்மையுறச் செயற்படுத்தி வருகின்றது.

கடந்த ஆண்டிலிருந்து மன்றத்தால் செயற்படுத்தப்பட்டுவரும் புதிய மற்றும் சிறப்புக் கலைத் திட்டங்கள்:

1. இசை, நடனம் ஆகிய கலைகளைக் கற்றிட முன்வரும் ஆர்வம் உள்ள 10 வயதிலிருந்து 12 வயது வரையிலான 100 இளம் சிறார்களுக்குப் படிப்புதவித் தொகையாகத் திங்கள்தோறும் தலா ரூ. 200/- வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டத்தை மன்றம் செயற்படுத்தி வருகிறது.

2. அரிதாகிவரும் தொன்மைச் சிறப்புமிக்க பாவைக்கூத்து மற்றும் பொம்மலாட்டக் கலைக் குழுவினருக்கு ஊக்கமளிக்கும் வண்ணம் 19 சிறந்த பொம்மலாட்ட மற்றும் பாவைக் கூத்து கலைக் குழுக்களைத் தேர்வு செய்து அக்குழுக்களின் வாயிலாக சிறந்த கலை நிகழ்ச்சிகளை உருவாக்கிட, குழு

ஒன்றுக்கு தலா ரூ. 10,000/- வீதம் நல்கை வழங்கப்பட்டுள்ளது. அக்கலைக் குழுக்களின் புதிய படைப்புகளை நடத்திக் காட்டுவதற்கான விழா விரைவில் சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் நடத்திட மன்றம் ஏற்பாடு செய்து வருகிறது.

3. தமிழிசையில் ஆர்வமுள்ள ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், கடந்த ஆண்டிலிருந்து 10 சிறந்த தமிழிசை ஆய்வாளர்களுக்குத் திங்கள் தோறும் ரூ. 1,000/- வீதம் ஆய்வு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

4. மலைவாழ் மற்றும் பழங்குடியினரின் கலைக் கூறுகளை, பண்பாட்டினை இளைய தலைமுறையினருக்காக ஆவணமாக்கிப் பாதுகாத்திடவும், இவ்வகையில் அக்கலைஞர்களின் நலனுக்காக கலை விழாவினை நடத்திடவும் மன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

5. பல ஆண்டுகளாக மன்றத்தில் கண்டு நாடாக்களின் வாயிலாகப் பல்வேறு நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்ற சந்தர்ப்பங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள அரிய புகழ்பெற்ற கலைமேதைகளின் இசை, நடன நிகழ்ச்சிகளைக் கலை விற்பன்னர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காகச் சிறிய ஒலி நாடாக்களில் பதிவு செய்யும் பணியை மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

6. பூம்புகாரில் இந்திர விழா நடத்திட முடிவு செய்யப்பட்டு, கடந்த சித்திரை முழு நிலவையொட்டி இயல் விழா, இசை விழா, நாடக விழா என மூன்று நாட்கள் இந்திரவிழா சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்திய சுதந்திரப் பொன்விழாவினை முன்னிட்டு, சென்னையில் இசை, நடன மற்றும் கிராமியக்கலை நிகழ்ச்சிகளும், தீண்டாமை ஒழிப்பு மாநாட்டினையொட்டி மதுரையில் ஊரகக் கலையின் சிறப்புக் கலை நிகழ்ச்சிகளும் நடத்த மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் புதுதில்லி, சங்கீத நாடக அகாதெமியுடன் இணைந்து, அகில இந்திய அளவில் பொன்விழாக் கலை நிகழ்ச்சிகளை சென்னை கலாசேத்திரா அரங்கில் மன்றம் மிகவும் சிறப்புடன் நடத்தியுள்ளது.

சாரல் திருவிழாவினை முன்னிட்டு, திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ஒரு வாரம் சாரல்விழாவினை மன்றம் தென்னகப் பண்பாடு மையத்துடன் இணைந்து நடத்தியுள்ளது. இதனால் பல்வேறு கிராமியக் கலைஞர்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

மேலும் மன்ற அலுவலகம் இயங்கிவரும் 'பொன்னி' வளாகத்தில் ஒரு நவீனக் கலைக்கூடம் கட்டுவதற்கான முழுமுயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. பழம்பெரும் இசைக்கருவிகள், இயல், இசை, நடனம், நாடகம், கிராமியக் கலைகள், திரைப்படம் சார்ந்த நூல்கள் ஆகியவற்றைக் கொண்ட ஆராய்ச்சிக் கூடமாகவும், மற்றும் தற்கால நவீன ஒலி-ஒளி சாதனங்கள் நிறைந்த சுமார் ஆயிரம் இருக்கைகள் கொண்ட கலையரங்கமும் இடம் பெறத்தக்க முறையில், அக்கலைக் கூடம் அமைவதற்கான பணிகளையும் மன்றம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

நடப்பாண்டிலிருந்து தமிழக அரசின் உறுதுணையுடன் தமிழகக் கலைவிழாக்களை வெளி மாநிலங்களில் நடத்திடவும், கலைஞர்கள், கலை விற்பன்னர்களின் பயன்பாட்டிற்காகக் காலாண்டு மலர் வெளியிடவும், தமிழகத்தின் அனைத்துப் பாணியைச் சார்ந்தத் தொண்மைச் சிறப்புமிக்க தெருக்கூத்துக் கலைக் குழுக்களை ஒன்று திரட்டிப் பெரிய அளவில் கூத்து விழா நடத்தி, அக்கலை வடிவினை ஆவணமாக்கிப் பாதுகாத்திடவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சி. சந்திரசேகர்
உறுப்பினர்-செயலர்

சுழற் கேடயம் பெறும்

சிறந்த நாடகக் குழு

அமரர் திரு.வி. கோபாலகிருஷ்ணனின்

கோபி தியேட்டர்ஸ்